24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 40
விலை: 40

சுடர் 34 | கதிர் 82 | மாசி 05ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | 17 பெப்ரவரி 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

## மண் மீட்கப் போராடும் எங்களின் பிள்ளைகள் இன்னொரு பிரபாகரனாக உருவெடுப்பார்கள்

### ரணிலுக்கு எதிரான முல்லைத்தீவுப் போராட்டத்தில் மக்கள் கோசம்

முல்லைத்தீவு, பெப். 17
இராணுவம் எமது காணிகளில் இருக்க, நாங்கள் வீதிகளில் காய்வதைப் பார்த்து எமது பிள்ளைகள் நாளைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் போன்று இன்னொரு வடிவம் எடுக்கக்கூடும். அப்போது இந்த அரசு என்ன செய்யும். இவ்வாறு முல்லைத்தீவு மக்கள் ஆவேசத்துடன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கோசம் எழுப்பினார்கள்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மூன்று நாள் பயணமாக வடக்குக்கு வந்திருந்தார். இறுதி நாளான நேற்று முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து » 36

## அநுராதபுரத்தில் புலிகளின் சின்னங்கள் மீட்கப்பட்டன

அநுராதபுரம், பெப். 17
அநுராதபுரம் தகயாகம பகுதியில் விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பி, துப்பாக்கி ரவைகள் போன்றன மீட்கப்பட்டுள்ளதாகப் பொலி » 35

## குற்றவியல் நீதிமன்ற பொறிமுறை தேவை

### மறப்போம் மன்னிப்போம் என்ற ரணிலின் கருத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பு பதில்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 17
ஐ.நா. பொதுச் செயலராக இருந்த பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட குழுவின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை ஆகியவற்றை முன்வைத்து அதனூடான குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறையையே நாங்கள் வலியுறுத்துகின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். » 35

## இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்து செல்வதை கூட்டமைப்பு ஆதரிக்கும்

யாழ்ப்பாணம், பெப். 17
இலங்கை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு எடுத்துச்சென்றால், அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை முழுமையாக ஆதரிக்கும். அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கும் தீர்மானம் » 36

## மறப்போம் மன்னிப்போம் ஜெனிவாவை சமாளிக்கும் ரணிலின் புதுத் திட்டம்

### இப்படிச் சொல்கிறார் விக்கி



யாழ்ப்பாணம், பெப். 17
ஜெனிவாவில் எழும் கேள்விகள், விமர்சனங்களைத் தவிர்க்கும் உத்தியாகவே, போர்க் காலத்தில் நடந்தவற்றை மறந்தோம் மன்னிப்போம் என்று ரணில் விக்கிரமசிங்க இங்கு வைத்துக் கூறியுள்ளார். ஆனால், » 36

## போரில் நடந்த உண்மையை முழுமையாக சொல்லவேண்டும்



### சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 17
போரின் போது படையினர் குற்றங்கள் இழைத்துள்ளனர் என்பதை இலங்கை அரசு பகிரங்கமாகச் சொல்வதற்கு பத்து ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றது. உண்மையைச் சொல்வதற்குத் தயார் என்று சொன்னால் மாத்திரம் போதாது. » 35

## கதிர்காமர், ரவிராஜ் கொலைகள் இரண்டுமே ஒன்றில்லை

### சட்டத்தரணி தவராசா விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 17
முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் » 36

## சுயாட்சி இல்லையேல் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வுக்கு இணங்கோம்

### கூட்டமைப்பு திட்டவட்டம்

யாழ்ப்பாணம், பெப். 17
ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்கான இணக்கத்தை நாங்கள் வழங்க » 36

## முல்லைத்தீவில் அபிவிருத்தியை விட ஆக்கிரமிப்பே அதிகம்

### ரணிலிடம் எடுத்துரைத்த தமிழ்க் கூட்டமைப்பினர்

முல்லைத்தீவு, பெப். 17
முல்லைத்தீவில் இடம்பெறும் அபிவிருத்தியை விடவும் மாவட்டத்தில் » 36

## மன்னார் புதைகுழி கார்பன் பரிசோதனை அறிக்கை கிடைத்தது

### புதன் கிழமை மன்றில் சமர்ப்பிப்பு

மன்னார், பெப். 17
மன்னார் சதொச விற்பனை நிலைய வளாகத்தில் மீட்கப்பட்டு அமெரிக்க புளோரிடா பீட்டா நிறுவனத்தக்கு எடுத்துச் செல்லப்பட்ட மாதிரி மனித எலும்புக் கூடுகளின் கார்பன் பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ள » 36





# புலிகள் காலத்தில் இருந்த சமத்துவம் வடக்கில் இல்லை

வவுனியா, பெப். 17
வடக்கில் இன்று இருக்கின்ற பாரபட்சங்கள், தள்ளிவைப்புகள் எல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் இருக்கவில்லை. இன்று சமாதானம் இருக்கின்றது. சட்டத்தின் ஆட்சி இருக்கின்றது என்கிறார்கள். ஆனால் அன்று இருந்த சமத்துவம் காணமால் போய்விட்டது. அப்படியானால் புலிகள் மீண்டும் வந்து சமத்துவத்தை நிலைநாட்டவேண்டுமா என்று கேட்க விரும்புகின்றேன். புலிகளின் பெயரைக் கூறி அரசியல் செய்யும் பலர்கூட மலையக மக்கள் மீது பாரபட்சம் காட்டியே செயற்படுகின்றனர். இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அகதேசிய முற்போக்குக் கழகத்தின் மாநாடு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்களோடு இணைந்து 19 இனக் குழுக்களை கொண்டிருக்கிறது. ஆனால் அது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. சிங்களவர்கள் 75 வீதம் இருக்கலாம். அல்லது 99 வீதமாக இருக்கலாம். ஆனால் அது 100 வீதமாக மாறமுடியாது. இலங்கையின் அனைத்துப் பகுதியிலும் வசிக்கும் தமிழ்மக்கள் ஒன்று சேர்ந்தால் தான் ஈழத் தமிழர்கள் என்ற உண்மையான தமிழ்தேசிய இனம் உருவாகும். அதன்மூலமே எமது அடையாளத்தையும் இருப்பையும் நாங்கள் அறிவிக்க முடியும். தமிழ்பேசும் மக்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்கள மக்களிடம் சமத்துவம் வேண்டும் என்று காது கிழிய கத்துகிறோமா அதே அளவு சமத்துவத்தை எங்களுக்கே நாங்கள்ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

எங்களுக்குள்ளே நாம் எம்மைத் தாழ்த்தி வைத்துக் கொண்டிருப்போமானால் பெரும்பான்மையான சிங்கள மக்களிடம் சம உரிமையைத் தாருங்கள் என்று கேட்பதற்கான தார்மீக உரிமையை நாம் இழக்கின்றோம். எம்மை நாம் திருத்திகொள்ள வேண்டும்.

இன்று உருவாகியுள்ள அமைப்பு பிரதேசவாதத்தைத்தூண்டும்ஒருஅமைப்பாகஇருக்கக்கூடாது. மாறாக நாங்களும் இங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற அடையாளத்தை தெரியப்படுத்தவேண்டும். ஒன்றாக இருந்தாலே நாம் விடுதலையை பெறமுடியும் - என்றார். (ஒ.5,110)

## வடக்கில்
# 275 பாடசாலைகள் மூடப்படும் அபாயம்

**யாழ்ப்பாணம், பெப். 17**
**50இற்கும் குறைவான மாணவர்கள் கற்கும் ஆயிரத்து 486 அரச பாடசாலைகள் மூடப்பட வேண்டிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள புள்ளி விவரத் தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.**

நாட்டில் 10 ஆயிரத்து 194 அரச பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் 9 ஆயிரத்து 841 பாடசாலைகள் மாகாணசபைகளால் நிர்வகிக்கப்படுகின்றன. 353 பாடசாலைகள், தேசிய பாடசாலைகள் என்ற அடிப்படையில் கொழும்பு அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.

மாகாண சபைகளின் கீழ் 4 ஆயிரத்து 59 மூன்றாந்தர வகைப் பாடசாலைகள் இயங்குகின்றன. இவ்வகையான பாடசாலைகளில் ஆயிரத்து 486 பாடசாலைகள் மாணவர்கள் இன்மை காரணமாக மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவை அனைத்தும் கிராமப்புறப் பாடசாலைகளாகும்.

மூடப்பட வேண்டிய பாடசாலைகளில் அதிகமான பாடசாலைகள் வட மாகாணத்தில் உள்ளன. இங்கு 275 பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதற்கு அடுத்த படியாக மத்திய மாகாணத்தில் 240, சப்ரகமுவ மாகாணத்தில் 230 என்ற அடிப்படையில் மூடப்பட வேண்டிய பாடசாலைகள் உள்ளன.

மேல் மாகாணத்தில் 73, தென் மாகாணத்தில் 125, கிழக்கு மாகாணத்தில் 141, வடமேல் மாகாணத்தில் 133, வடமத்திய மாகாணத்தில் 111, ஊவா மாகாணத்தில் 158, பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தில் உள்ளன.

மாவட்ட அடிப்படையில் ஆகக் கூடுதலாக மூடப்பட வேண்டிய பாடசாலைகள் கேகாலை மாவட்டத்தில் உள்ளன. இங்கு 119 பாடசாலைகள் மூடப்பட வேண்டியுள்ளன. ஆகக்குறைந்த மூடப்பட வேண்டிய பாடசாலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளன. இங்கு 16 பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

## பலாலியில்
# பிள்ளையார் கோயில் கட்ட சீருடையினர் நிதி வசூல்

யாழ்ப்பாணம், பெப். 17
பலாலியில் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத பிரதேசத்தினுள் சீருடையினர் பிள்ளையார் ஆலயத்தை கட்டுவதாகவும், அதற்கு நிதி உதவி வழங்குமாறு வர்த்தகர்களிடம் கோரியுள்ளனர்.

சீருடையினர் சுன்னாகம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நிதி வசூலில் ஈடுபட்டுள்ளனர்.

பலாலியில் புதிதாக பிள்ளையார் ஆலயம் அமைக்கப்படுவதாகவும் அதற்கு நிதி உதவி வழங்குமாறு கோரியுள்ளனர். நிதி பெற்றுக் கொண்டமைக்கு எந்தவொரு பற்றுச் சீட்டும் வழங்கப்படவில்லை.

(ஒ.5,105)

# போராளிகள் சார்பில் எந்த விசாரணையும் எதிர்கொள்வதற்குத் தயாராகவுள்ளோம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 17
போர்க்குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்களை ஓர் பன்னாட்டுப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடொன்று செய்யப்பட்டால் இதுவரையில் எமது மக்களுக்கான உயிர்த் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களை செய்தவர்கள் என்ற வகையில் ஜனநாயகப் போராளிகளான நாம் எமது போராளிகளின் சார்பில் எந்தவெர்ரு மன்றையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொடர்ந்தும் இன்னல்களுக்கும் இன அழிப்புக்கும் முகம் கொடுத்து ஆக்கிரமிப்புக்குள் வாழ்ந்து வரும் ஓர் தேசிய இனத்தின் ஆன்மாவைச் சிதைக்கின்ற கருத்துக்களைக் கூறி அரசியற் காழ்ப்புணர்ச்சியை உமிழும் ஓர் மிலேச்சத்தனமான அரசியற் பகடையாட்டத்தை காலாகாலமாக சிங்கள ஆட்சியாளர்கள் ஆடி வந்திருக்கிறார்கள்.

தாம் அடிப்படையிலேயே வரித்துக்கொண்ட பௌத்த சிங்கள தேசியவாத மனோநிலையிலிருந்து சற்றேனும் இறங்கி வரத் துணியாத சிங்கள ஆட்சியாளர்கள் தமது அரசியல் இருப்பையும் மேலாதிக்கத்தையும் தக்க வைத்துக்கொள்வற்காக இந்த ஏற்றுக்கொள்ளவியலாத எரிச்சலூட்டும் வியாக்கியானங்களை ஓர் இருட்டடிப்பு உத்தியாக பயன்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

'யாழ்ப்பாண மக்கள் எதைப்பற்றிச் சிந்திக்கிறார்கள் என்பதைப் பற்றி அலட்டிக் கொள்ளும் நிலையில் நாம் இல்லை' என்று 80ஆம் ஆண்டுகளில் ஜெயவர்த்தனே கூறியது போன்றே தற்போதைய ஆட்சியாளரும் தமிழ் மக்களுக்கு விசனமூட்டும் வண்ணமாக கிளிநொச்சியிலே கருத்துக்களை கொட்டியிருக்கின்றார்.

இலங்கையில் மீளிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான பன்னாட்டு அழுத்தங்களை புறந்தள்ளும் தந்திரோபாய சொல்லாடல்களை உபயோகிப்பதன் மூலம் தாமும் தமது அரசும் சிங்கள எதேச்சாதிகார சிந்தனைகளுக்கு முண்டு கொடுக்கும் கைங்கரியத்தை கச்சிதமாய் சாதிக்க முனையும் ரணில், ஜெனிவாவில் இலங்கைக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தையும் நீர்த்துப்போகச் செய்வதற்கான இராஜதந்திர மதிநுட்பத்தையும் பிரயோகிக்க முற்படுகின்றார்.

அரசியல் கைதிகளின் விடுவிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக காண்பிக்கப்படும் மெத்தனப் போக்கு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பான கரிசனையின்மை, போரின் பாதிப்புக்களிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் மக்களின் வாழ்வியற் பிரச்சினைகள், தமது நிலங்களுக்காக நடுவீதியிலிறங்கி போராடும் மக்களின் துயரம், தீர்வை நோக்கிப் பயணிப்பதாகக் கூறும் அரசமைப்புப் பற்றியதான பகற்கனவுகளுடன் தீராத தமிழர் தாயகத்தின் அவலங்களையெல்லாம் கிடப்பில் போட்டு விட்டு போர்க்குற்றங்கள் தொடர்பாக மன்னித்தல் மற்றும் மறத்தல் என்ற புதிய வியாக்கியானம் ஒன்றை கிளிநொச்சியில் கூறும் ரணில், 1970 ஆம் ஆண்டுகளிலிருந்து தமது கட்சி சார்ந்த அரசு தமிழர்களுக்கு எதிராய் இழைத்த கொடுமைகளையிட்டு ஒப்புக்காகவேனும் இன்னும் மன்னிப்புக்கோரவில்லை என்ற கசப்பான உண்மையை நினைவூட்ட விரும்புகின்றோம்.

போரின் இறுதிக்கணங்களில் இலட்சக்கணக்கான மக்கள் சாவின் விளிம்பில் நின்று கதறி அழுதபோது அதைக் கண்டு கொள்ளாத பன்னாட்டுச் சமூகம் 10 ஆண்டுகளுக்குப் பின் மானுடத்துக்கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கெதிரான விசாரணைகளை நடத்தும் அல்லது தீர்வுகளை முன்வைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போன இடைவெளியொன்றில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அப்படியான பொறிமுறையொன்று இலங்கைத்தீவில் தமிழர் மற்றும் சிங்களவர்களுக்கிடையிலான உறவில் மேலும் விரிசல்களை நோக்கியே நகர்த்தும் என்பதோடு சாத்தியமான மீளிணக்கம் அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வினை நோக்கி நகரப் போவதில்லை என்பதையும் கோடிட்டுக் காட்ட முனைகின்றோம்.

போர்க்குற்றங்கள் பற்றி தொடர்ந்து பேசுவதானால் இருதரப்பும் வழக்குகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம் என்ற ரணில் விக்கிரமசிங்காவின் கூற்று, எந்த மன்றில் அப்படியான வழக்குகளை தாக்கல் செய்யலாம் என்ற சந்தேகத்தையும் எமக்குள் எழுப்புகின்றது.

போர்க்குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்களை ஓர் பன்னாட்டுப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடொன்று செய்யப்பட்டால் இதுவரையில் எமது மக்களுக்கான உயிர்த் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களைச் செய்தவர்கள் என்ற வகையில் ஜனநாயகப் போராளிகளான நாம் எமது போராளிகளின் சார்பில் எந்தவொரு மன்றையும் எதிர்கொள்ள தயாராகவே இருக்கின்றோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அப்படியான நிலை ஒன்று ஏற்படுமிடத்து கடந்த 5 தசாப்தங்களாக தமிழினத்துக்காய் இழைக்கப்பட்ட பண்பாட்டியல் சிதைப்பு, பொருண்மிய ஆக்கிரமிப்பு, நீதிக்கு புறம்பான கொலைகள், வன்புணர்வு மற்றும் கொடூரமான இனப்படுகொலைக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை சிங்கள அரசுக்கும் உண்டு என்ற யதார்த்தமான உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றுள்ளது.

(ஒ.5,ரி3)

கராம்பின் நற்குணத்துக்கான இரகசியம்

# யுஜினோல்



யுஜினோல் என்பது PHENYLPROPANOID பிரிவைச் சேர்ந்த சேர்க்கையாகும். இள மஞ்சள் நிறம் மற்றும் நறுமணத்தை கொண்ட யுஜினோல் அதிகம் கராம்பிலேயே அடங்கியுள்ளது.

யுஜினோலின் இரசாயன பெயரானது, கராம்பின் விஞ்ஞான பெயரான Eugenia caryophyllata ஊடாக உருவாகியுள்ளது.

கராம்பில் அடங்கியுள்ள யுஜினோலின் செறிவானது 80% - 90% ஆகும்.

கராம்பு இலையில் 82% - 88% யுஜினோல் அடங்கியுள்ளது.

## யுஜினோல் கொண்ட கராம்பு

இயற்கையாகவே கிருமிநாசினி எதிர்ப்பு, மருந்துபோக செய்தல் மற்றும் வலி எதிர்ப்பு நிவாரணியாக செயற்படுகின்றது. பல் வலியின்போது வாய்களிலுள்ள கிருமிகளை கட்டுப்படுத்தி வலி கொண்ட தோற் பகுதியை கராம்பில் அடங்கியுள்ள யுஜினோல் மூடும். பல் வலிக்கு கராம்பை பயன்படுத்தும்போது துரித நிவாரணம் கிடைப்பது அதனாலேயே.

இதுதவிர

- வாய் துர்நாற்றத்தை போக்க
- பல் வேர் கரைதல், பல் முரசு வீக்கத்தை போக்க
- வாய் மற்றும் தொண்டை எரிவுக்கு நிவாரணம் வழங்க

கராம்பில் அடங்கியுள்ள யுஜினோலால் முடியும்

யுஜினோலும் சின்க் ஒக்சைட்டும் கலந்து உற்பத்தி செய்யும் சின்க் ஒக்சைட் யுஜினோலானது, பற்களை நிரப்புவதற்கான சேர்க்கையாக பயன்படுத்தப்படுகின்றது.

## ஆரோக்கியமான பற்களுக்கு கராம்பு எண்ணெய் பாவியுங்கள்

### பல் வலியை இல்லாதொழியுங்கள்

தூய்மையான பருத்தி பஞ்சில் கராம்பு எண்ணெய் கொஞ்சம் கலந்து பல் வலி உள்ள இடத்தில் வைக்கவும். வலிக்கு துரித நிவாரணம் கிடைக்கும்.

### பற்துளைகளை கட்டுப்படுத்தும்

கராம்பு எண்ணெய்யில் நனைத்த பஞ்சு துண்டை பற்துளை உள்ள இடத்தில் சில தினங்கள் இரவு நித்திரைக்கு முன்னர் வைத்து பின் அகற்றவும். பற்துளைகள் மேலும் பரவுவதை தடுக்கும்.

### வாயில் ஏற்படும் புண்களை குணமாக்கும்

நாளாந்தம் இரண்டு தடவை க்ராம்பு எண்ணெய்யை தேக் கரண்டி அளவு சூடான நீருடன் கலந்து வாயை கொப்பளிக்கவும். கிருமிகளிடமிருந்து வாயை பாதுகாத்து வாயில் ஏற்படும் புண்களை குணமாக்கும்.

மூலாதாரம்: Eugenol Wikipedia / Readers Digest (Benefits of Clove, a natural remedy for tooth pain)



## மரண அறிவித்தல்

### திருமதி சகுந்தலா ஜெகநாதன்

**(இளைப்பாறிய ஆசிரியை : அநுராகபுரம் மத்திய கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, விவேகானந்தா மகா வித்தியாலயம், இரத்மலானை இந்துக் கல்லூரி, இளைப்பாறிய விரிவுரையாளர் :** Butterworth College of Education - South Africa)



சுன்னாகம், கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு, தென்ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா (PERTH) ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்ட திருமதி சகுந்தலா ஜெகநாதன் புதன்கிழமை 13/02/2019 அன்று அவுஸ்திரேலியாவில் (PERTH) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தர் நடராஜா J.P. (முன்னாள் அரச சட்டத்தரணி, அநுராதபுரம் நகரசபைத் தலைவர்) - காந்திமதி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கார்த்திகேசு (மலேசியா, தொல்புரம்) - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், முன்னாள் கல்லூரி அதிபர் (இரத்மலானை இந்துக் கல்லூரி) கார்த்திகேசு ஜெகநாதன் அவர்களின் அருமைத் துணைவியாரும், மைதிலி (Auckland), ஜனார்த்தனா (Canberra), சஞ்சயன் (Perth), காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியநாதன் (Auckland), ஜசோ (Canberra), சிவாஜினி (Perth) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மகாதேவா, பத்மநாதன், சத்தியபாமா துரைசிங்கம், ராதா அரியரத்தினம் (Canada), காலஞ்சென்ற வாமதேவா மற்றும் விமலா ராஜசிங்கம் (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கஜானன் (Brisbane), மயூரன் (Sydney), ஜனனி (Sydney), சைதன்யா, அமிதாப், அபர்ணா (Perth) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2019) திங்கட்கிழமை காலை 9.30 முதல் 11.00 வரை MAREENA PURSLOWE FUNERALS, 31-33, TOWNSHEND ROAD, SUBIACO - 6008, W. AUSTRALIA என்ற முகவரியில் நடைபெற்று, பின்னர் 11.30 மணியளவில் KARRAKATTA - PERTH மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் தொடர்புகளுக்கு :**
**ஜனார்த்தனா : + 64 450 402 229,**
**மைதிலி சத்தியநாதன் : + 64 21 029 66534**

## மரண அறிவித்தல்



மலர்வு 18 . 01 . 1952

உதிர்வு 14 . 02 . 2019

### திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம்

'கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி இராசரத்தினம் கடந்த (14.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பண்டத்தரிப்பு மங்களா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பார்வதி தம்பதி களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசன் மற்றும் கலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலையரசி (ஆஸ்திரேலியா), எழிலரசி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ண லிங்கம், அசோக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகிர்தா, மகிந்தன், விகிந்தன், ஷாம், ஷக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19.02.2019) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மங்களா ஸ்ரோர்ஸ்,**
**பண்டத்தரிப்பு.**

**தகவல்: சி.இராசரத்தினம்**
**(கணவர்)**

**021490 4800**

நகர அபிவிருத்தி அதிகாரசபை
எப்பொழுதும் மக்களுடன்

மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர்
**கௌரவ பாட்டலீ சம்பிக்க ரணவக்க**
அவர்களின் தலைமையில்

**நகர அபவிருத்தி அதிகாரசபையின்**

**40** வது ஆண்டுவிழா மற்றும் அதற்கிணையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

# ஜனபியச
# பொதுமக்கள்
# நடமாடும் சேவை

**2019 பெப்ரவரி 21** **மு.ப. 9.30 முதல் பி.ப. 2.30 வரை**

**யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.**

**கட்டிட கட்டுமானம், காணி துணைப்பகிர்வு மற்றும் ஏனைய அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகள், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணி தொடர்பான பிரச்சினைகள், சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அன்றைய தினம் எம்முடன் இணைந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை


மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
1978 - 2019

# உறவுகளுடன் கூடி வாழ்ந்த எம்மை புதைகுழியில் புதைத்தது எதற்காக?

## சிறுவனின் ஆவி கேட்ட கேள்வியால் கண்ணீர்

வவுனியா, பெப்.17

உறவுகளுடன் கூடிவாழ்ந்த எம்மைப் புதைகுழியில் புதைத்தது ஏன்?, எமக்கான நீதி மறுக்கப்பட்டது ஏன்? என்று கேள்வியெழுப்பிய ஒரு சிறுவனின் ஆவி அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது.




வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி நடைபெற்றது. அதில் மாணவர்களிடையே வினோத உடைப்போட்டியும் நடந்தது. ஒரு மாணவன் காணாமல் ஆக்கப்பட்டுக் கொன்று புதைக்கப்பட்ட சிறுவனின் ஆவியாக உருவகித்து அதில் கலந்து கொண்டான்.

"நான் மனிதப் புதைகுழியில் இருந்து வந்திருக்கின்றேன். நான் உங்களில் ஒருவன். இன்று மனிதப் புதைகுழியில் இருந்து வந்திருக்கின்றேன். எனது தோழர்களுடன் பாடசாலை செல்லும்போது கடத்தப்பட்டவன் நான். என்னைப் போன்ற அப்பாவிகள் கடத்தப்பட்டது ஏன்? உயர்ந்த கனவுகளுடன் வாழ்ந்த என் வாழ்க்கை சிதைக்கப்பட்டது ஏன்? உறவுகளுடன் கூடி வாழ்ந்த வாழ்க்கை பறிக்கப்பட்டது ஏன்? எம்மைக் கொன்று புதைகுழியில் புதைத்தது ஏன்? எமக்கான நீதி மறுக்கப்பட்டது ஏன்?" என்று அந்தச் சிறுவனின் ஆவியாகக் கலந்துகொண்ட மாணவன் கேள்விகளைக் கேட்டமை, அங்கிருந்தவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

இறுதிப் போரின்போது தமிழர்கள் பலர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பாடசாலை மாணவர்களும், சிறார்களும் கூட அடங்குகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்றுவரை தமது உறவுகளைத் தேடியலைகின்றனர். அரசு இது தொடர்பாக எந்தவொரு பதிலையும் கூறாது காலம் கடத்தி வருகின்றது.

அண்மையில் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளில் சிறுவர்களின் எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 20க்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள் சிறார்களுடையவை என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, போரில் நடந்தவை தொடர்பான வழக்குகளைத் தொடர்ந்து கொண்டிருக்க முடியாது. மறப்போம், மன்னிப்போம் என்று தெரிவித்திருந்தார். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்களை அவர்களின் உறவுகள் ஒரு தசாப்த காலமாகத் தேடியலைந்து வரும் நிலையிலும், தமது பூர்வீகக் காணிகளுக்காகத் தமிழ் மக்கள் வீதியில் கிடந்து போராட்டம் நடத்திவரும் நிலையில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். (ஏ-21)



## புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

வவுனியா, பெப்.17

வவுனியா சட்டத்தரணிகள் சங்கமும், கல்விசார் ஆர்வலர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மு. சிற்றம்பலம் தலைமையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

2018 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் ஆறு பாடப் பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும், ஐந்தாம் தர பரீட்சையில் சித்தி பெற்ற 41 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா வடக்கு மற்றும் தெற்கு வலயகல்வி பணிப்பாளர்களான மு.இராதா கிருஸ்ணன், அன்னமலர் சுரேந்திரன், உபநகரபிதா சு.குமாரசாமி, நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம் வர்த்தகப் பிரமுகர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அதிதிகள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன், சித்தி பெற்ற மாணவர்களுக்கு அதிதிகளால் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டு, பதக்கம் அணிவிக்கபட்டதுடன், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவர்கள் ஒவ்வொருக்கும் வழங்கப்படும் உதவிகள் நாட்டின் உயர்ச்சிக்காகவே தவிர புலம் பெயர்ந்து வெளிநாடு செல்வதற்காக வழங்கப்படவில்லை. ஒவ்வொரு மாணவர்களும் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்று வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஷ்ணன் தெரிவித்தார். (ஐ-110)



# கட்டாக்காலிகளாகத் திரியும் இராணுவத்தின் கழுதைகள்

கிளிநொச்சி , பெப்.17

கிளிநொச்சி, திருவையாறில் இராணுவத்தினர் வளர்க்கும் கழுதைகள் கிராமத்துக்குள் புகுந்து மேய்ச்சலில் ஈடுபடுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதனால் கிராம மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மேய்ச்சல் தரை இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. மேய்ச்சல் தரை இன்மையால் கால்நடை வளர்க்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே தமது கால்நடைகளை வளர்க்கின்றனர். இந்தநிலையில் இராணுவத்தினர் பிற மாவட்டங்களில் இருந்து 20 கழுதைகளைக் கொண்டு வந்துள்ளனர். அதுமட்டுமன்றி அவற்றை கிராமத்துக்குள் கட்டாக்காலிகளாக மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அவை குடிமனைகளுக்குள் நடமாடுவதால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-105)

# மாற்றுத்திறனாளிகளை புரிந்து செயற்படுவோம்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு




முல்லைத்தீவு, பெப்.17

மாற்றுத்திறனாளிகள் பல்வேறுபட்ட திறமைகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றனர். அவர்களது திறமைகளையும் இயலுமைகளையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மீள் குடியேற்றம் மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தில் தாமரை மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் 75 உறுப்பினர்களுக்கு உலருணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் தினம் உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. அவர்கள் திறமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதுடன் அவர்களை சமூகம் மறந்து விடக்கூடாது என்பதுதான் அதற்கான காரணமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-222)



# திறன் வகுப்பறைகள் முல்லைத்தீவில் திறப்பு

முல்லைத்தீவு, பெப்.17

புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் அமிர்தநாதன் தலைமையில் பாடசாலைக்குரிய திறன் வகுப்பறைகள் கடந்த 14ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்து கொண்டு இரண்டு திறன் வகுப்பறைகளையும் வைபவரீதியாகத் திறந்தார்.

நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சிறிசுப்பிரமணிய வித்தியசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்காக இரண்டு திறன் வகுப்பறைகள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டன. ஆறாவது மற்றும் ஏழாவது திறன் வகுப்பறைகள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (க-ரி3)

# நீதிக்குக் காத்திருக்கும் மாணவி ஹரிஸ்ணவி

## சிறுமி கொல்லப்பட்டு நேற்றுடன் 3 ஆண்டுகள்

வவுனியா, பெப்.17

எனது மகள் படுகொலை செய்யப்பட்டு 3 ஆண்டுகள் கடந்தும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை. மாணவி வித்தியாவுக்கு நீதி வழங்கியமை போன்று எனது மகளுக்கும் நீதியைப் பெற்றுத் தாருங்கள் என்று கண்ணீருடன் கோரினார் ஹரிஸ்ணவியின் தந்தை.






ஹரிஸ்ணவியின் கொலையை அடுத்து குற்றவாளிகளை உடன் தண்டிக்கக் கோரி வடக்கில் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன

வவுனியா, உக்கிளாங்குளத்தைச் சேர்ந்தவர் ஹரிஸ்ணவி. இவர் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவர் அன்று பாடசாலை செல்லாது வீட்டில் தனித்திருந்திருந்துள்ளார். அந்தச் சமயமே கொலைச்சம்பவம் நடந்துள்ளது.

### 3 ஆண்டுகளாகியும் எதுவும் நடக்கவில்லை

இறப்பு விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரி ஹரிஸ்ணவின்உடலில்நகக்கீறல் இருந்தது என்றும், அவர் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் கூறியிருந்தார்.

அதன்பின்னர் உடற்கூற்றுச் சோதனை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்தக் கொலைச் சம்பவம் வடக்கில் கொதிநிலையை உருவாக்கியிருந்தது. குற்றவாளியைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்திப் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தநிலைமையில் ஹரிஸ்ணவியின் அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் 6 மாதங்களின் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்குத் தொடர்ந்து நடந்து வருகின்றது.

ஹரிஸ்ணவி கொல்லப்பட்டு நேற்றுடன் 3 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆனால் இன்னமும் ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்கவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.




### நீதியைத் தாருங்கள்

"எனது மகள் இரக்கமற்ற பாவியால் கொல்லப்பட்டுள்ளாள். 3 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் எனது மகளுக்கு இன்னமும் நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. எனது மகளுக்கு நீதியைப் பெற்றுத் தர ஊடகங்கள் முன்வர வேண்டும். ஊடகங்களால் தான் அது முடியும். மாணவி வித்தியா கொலை வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு ஊடகங்களே பெரும் பங்காற்றியிருந்தன.

எனது மகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இந்தப் பாதகச் செயலைச் செய்தவன் சுதந்திரமாக நடமாடுகின்றான். இந்தச் சம்பவத்தை மக்கள் மெல்லமெல்ல மறக்கின்றார்கள். எமக்கு ஏற்பட்ட இந்தச் சம்பவம் எந்தத் தாய்க்கும், தந்தைக்கும் ஏற்படக் கூடாது. அதற்காக எனினும் குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும்." என்று ஹரிஸ்ணவின் தந்தை கண்ணீருடன் கூறினார்.

ஹரிஸ்ணவி கொலை வழக்குத் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. பெண்கள் அமைப்பின் சட்டத்தரணி ஒருவர் ஹரிஸ்ணவிக்காக நீதிமன்றில் முன்னிலையாகி வழக்கை முன்னெடுக்கின்றார். கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதியும் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. எந்த முன்னேற்றமும் இன்றி எதிர்வரும் சித்திரை மாதம் 30ஆம் திகதிக்கு அந்த வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

### தண்டனை அவசியம்

வடக்கில் பாலியல் வன்கொடுமையின் பின்னர் சிறுமிகள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் போருக்குப் பின்னர் பல தடவைகள் நடந்துவிட்டன. புங்குடுதீவு மாணவியின் கொலை வழக்கில் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. கிளிநொச்சி, எள்ளுக்காட்டைச் சேர்ந்த சிறுமி, கனகராயன் குளத்தைச் சேர்ந்த சிறுமி, வவுனியாவைச் சேர்ந்த ஹரிஸ்ணவி, சுழிபுரத்தைச் சேர்ந்த சிறுமி என நீண்டு செல்லும் வன்கொடுமைச் சம்பவங்களில் இன்னமும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலையே உள்ளது. இந்த விசாரணைகளை, வழக்குகளைத் துரிதப்படுத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்என்பதேசமூகப்பற்றுள்ள அனைவரது கோரிக்கையாகவுள்ளது. (எ-21)

## சமுத்திர தீர்த்தம்

யாழ்ப்பாணம், பெப். 17

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மாசி மக சமுத்திரத் தீர்த்தம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 2 மணிக்கு பாற்பூசையுடன் ஆரம்பமாகி சங்காபிசேகமும் சிறப்புப் பூசைகளும் நிகழும். அதைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு சுவாமி தீர்த்தமாடு வதற்குப் புறப்பட்டு மாலை 6 மணிக்கு இம்பிருட்டியில் சமுத் திரத் தீர்த்தமாடுவார் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)



## மதிப்பளிப்பு நிகழ்வு

கொடிகாமம், பெப் 16

சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் இடமாற்றல் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்றவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க .வாமதேவன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி ஆ. ஜெகனேஸ்வரி, மா.சிவசோதி, வி.பாலமனோகரன், ம.புவனதீபன் , தனசீலன் , ஆகியோரும் ஓய்வு பெற்றுச் சென்ற நா.தங்கவேல், க.சந்திரசேகரம்பிள்ளை ஆகியோருக்கான மதிப்பளிப்பே இடம்பெற்றது. (ஐ-159,131)

## சேவை நலன் பாராட்டு நிகழ்வு

கொடிகாமம், பெப் 17

யாழ்ப்பாணம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வும் மணி விழாவும் வித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கிருபாகரன் கலந்துகொண்டார். பாடசாலையில் 9 வருடங்களாக சேவையாற்றி இளைப்பாறிச் செல்கின்ற திருமதி திலகவதி சிவராசாவின் சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தினரால் சேவை நலன் பாராட்டு நிகழ்வு நடத்தப்பட்டது . (ஐ-159)

## செல்வச்சந்நிதி மடத்தை சீரமைக்க நடவடிக்கை

போர் காலத்தில் முற்றாக அழிவடைந்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் தெற்குப் புறத்தில் நன்னீர் நிலையுடன் கூடிய மடத்தை சீரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை நகரமக்களினால் கடந்த 35ஆண்டுகளுக்குமுன் னர் நடத்தப்பட்டு வந்த இந்த மடாலயத்தில் முறையாக அன்னப் பசி, தாக சாந்தி தீர்க்கும் மடமாக சிறப்புடன் விளங்கியது. திருவிழாகாலங்களில் அன்னதான ஒழுங்குக்காக மேற்கொள்ளப்பட்டுவந்தது. அழிக்கப்பட்ட மடாலயத்தைப் புதிதாக அமைக்க பருத்தித்துறையைச் சேர்ந்த உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பொதுமக்களிடம் உதவிகள் கோரப்பட்டுள்ளன. (ஐ-173)









## இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாடு நேற்று

யாழ்ப்பாணம், பெப்.17

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் அணி மாநாடு மாவட்ட இளைஞர் அணித் தலைவர் பிருந்தாகரன் தலைமையில் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, செயலர் துரைராஜ சிங்கம், பொருளாளர் கனகசபாபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ்.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள் இளைஞர்கள் யுவதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் அரச தலைவர் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன்,கே.வி.தவராசா ஆகியோரது சிறப்பு உரைகள் இடம்பெற்றன. (எ-8)

## சொந்த இடத்துக்கு மாற்றல் வழங்க அபிவிருத்தி அலுவலர் கோரிக்கை

கொடிகாமம், பெப் 17

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற வெளி மாவட்டங்களில் 6 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்கு சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. தமக்குச் சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றல் வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மாவட்டங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் 165 பேர் பொது நிர்வாக அமைச்சின் செயலர் மற்றும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் இடமாற்றல் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இவர்கள் கடந்த 13ஆம் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு நேரடியாகச் சென்று கோரிக்கையை முன்வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, இந்த அலுவலர்களுக்கு மாற்று அலுவலர்கள் வழங்கப்படாத நிலையில் இடமாற்றம் வழங்க முடியாத சூழ்நிலையில் உள்ளோம். போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு அலுவலர்களின் சேவைகள் அவசியம் என்று கருதுவதால் மாற்றீடு கிடைக்கும் வரை இந்த அலுவலர்களை இடமாற்றல் செய்ய முடியாத நிலையில் உள்ளோம் என்று அந்தந்த மாவட்டச் செயலகங்கள் தெரிவித்துள்ளன. (ஜ-159)

# கழிவு நடைமுறையால் திணறும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சந்தைகளில் மரக்கறி விற்பனையில் தொடர்ந்தும் கழிவு நடைமுறை பின்பற்றப்படுகின்றது என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். விலைக் கழிவை இல்லாது செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் மற்றும் முன்னாள் விவசாய அமைச்சரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பயனளிக்காததால் அரசதலைவரிடம் கோரிக்கை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**கழிவால் பாதிப்பு**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தும் போது சந்தை வியாபாரிகள் கழிவு விலைகளை விதித்தே மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் நிலை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

இந்த நடைமுறையை நிறுத்த வேண்டும் என்றும், விவசாய உற்பத்திப் பொருள்களை நியாயமான விலையில்பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

கடந்த வடக்கு மாகாண சபை ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விவசாய அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசன் தனது பாதீட்டில் திட்டம் ஒன்றை முன்மொழிந்திருந்தார். 2013ஆம் ஆண்டியில் இருந்து கழிவு நடைமுறை நீக்கப்படும் என்று அவர் கூறியிருந்தார். எனினும் அது நிறுத்தப்படவில்லை. அதன் பின்னர் வந்த விவசாய அமைச்சரும் அனைப் பொருட்படுத்தவில்லை. இதனால் விவசாயிகள் தொடர்ந்தும் நட்டத்தை எதிர்கொண்டுவந்தனர்.

"மரக்கறி தனாகவே நிலத்தில் விழையா. அதற்கு ஏற்றமுறைகளைச் செய்தே நாம் அவற்றை உற்பத்தி செய்கின்றோம். கடும் வறட்சி, கன மழை காரணமாக மரக்கறிகள் அழிவடையும் நிலையையும் நாம் எதிர்கொண்டுள்ளோம். விவசாயம் என்பது சாதாரணமானது அல்ல. கஷ்டப்பட்டு, பாடுபட்டே நாம் மரக்கறிகளைச் சந்தைக்கு கொண்டு வருகின்றோம். ஆனால் சந்தைகளில் அதற்கான நியாயமான விலைகள் தீர்மானிக்கப்படுவதில்லை. 10:1 என்ற அடிப்படையில் மரக்கறிகளின் விலைகளில் கழிவை ஏற்படுத்துகின்றனர். உண்மையில் இது எமக்குப் பெரும் பாதிப்பாகும். இந்தக் கழிவு நடைமுறையை நீக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாண விவ்சாயிகள் தெரிவித்தனர்.

**மைத்திரிக்கு கடிதம்**

விவசாயிகளுடைய கோரிக்கை தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் க.தியாகலிங்கம் அரச தலைவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது சகல சந்தைகளிலும் இன்று வரை 10:1 என்று கழிவு பெறப்படுகின்றது. அதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றோம். இதேநேரம் நாட்டில் பெரிய வெங்காயத்துக்கு இலவச காப்புறுதி வழங்கப்படுகின்றது.

ஆனால் குடாநாட்டில் செய்கை பண்ணப்படும் சின்ன வெங்காயத்துக்கு இலவச காப்புறுதி கிடையாது. சின்ன வெங்காயத்துக்கும் காப்புறுதியைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரம் மாவட்டத்தில் விடுவிக்கப்படாத விவசாய நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். கமக்கார ஓய்வூதியத் திட்டத்தில் புதிய விவசாயிகளையும் உள்வாங்குவதோடு விவசாயிகளின் வாழ்வாதாரத்துக்கு இடம்பெறும் விவசாய நடவடிக்கைக்கு இடையூறாகக் காணப்படும் குரங்கு மற்றும் தெரு நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கோள்ள வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது.

**விவசாயிகளும் முன்வர வேண்டும்**

கழிவு நடைமுறைப்படுத்தக் கூடாது என்று சந்தைகளில் துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது. இதையும் மீறிக் கழிவு நடைமுறையில் உள்ளது. மரக்கறிகளைக் கொள்வனவு செய்பவருக்கும், விவசாயிகளுக்கும் இடையிலேயே இந்தப் பிரச்சினை இடம்பெறுகிறது. சந்தையை குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள் கொள்வனவு செய்பவரிடம் பணம் பெற்று விவசாயிகளுக்கு கொடுக்கும் நடைமுறை இல்லாததால், கொள்வனவு செய்பவர் ஒரு விலைக்கு கொள்வனவு செய்து இதில் கழிவை ஏற்படுத்தி மிகுதி பணத்தை விவசாயி களுக்கு வழங்குகிறார். சில விவசாயிகளும் அவர்கள் கேட்டவுடன் கழிவை விட்டுக் கொடுக்கின்றனர். அதனால் அதை முழுமையாக



நடைமுறைப்படுத்தமுடியாமல் உள்ளது. விவசாயிகள் தாங்களாக முன்வந்து கழிவு வேண்டாம் என்றும், கொள்வனவு செய்யப்படும் விலைகளை அப்படியே தரவேண்டும் என்று கூறினால் அதையும் யாரும் தட்டிக் கழித்துவிடமுடியாது என்று யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் சிலர் கருத்துக்களைத் தெரிவித்தனர். (எ-21,105)

## மறை மாவட்ட இளையோர் பேரணி

யாழ்ப்பாணம்,பெப்.17

'இறைத்திட்டம் தேடும் இளையோர் பயணம்" என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாண மறைமாவட்ட ரீதியான இளையோர் பேரணி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து பிற்பகல் 3.30 மணிக்கு பேரணி ஆரம்ப்மாகி புனித மரியன்னை பேராலயத்தை சென்றடைந்து அங்கு மாலை 5 மணிக்கு இளையோருக்கான சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இளையோர் ஆண்டில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பும் நடைபெறும். (ஜ)

பெண்ணைக் காயப்படுத்திய

## இராணுவத்தின் தண்ணீர் பவுசர் சாரதிக்குக் கிடைத்தது பிணை!

சாவகச்சேரி, பெப். 17

சாலையில் சென்ற உந்துருளியை மோதி அதில் பயணித்த குடும்பப் பெண்ணைக் காயப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட படையினரின் தண்ணீர் பவுசரின் சாரதியை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் நேற்று அனுமதித்தார்.

கொடிகாமம் மிருசுவில் மருத்துவமனைக்கு முன்பாக ஏ9 முதன்மைச் சாலையில் சென்ற உந்துருளியை பவுசர் மோதியதில் காயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸார் குறித்த வாகனத்தின் சாரதியைக் கைது செய்து நேற்று நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் சாரதியை ஒருலட்சம்ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். (ம-9)

## சித்திரத் தேர் வெள்ளோட்டமும் தேர் திருவிழாவும்

யாழ்ப்பாணம், பெப்.17

காங்கேசன்துறை, கீரிமலை, சிறி மகா முத்துமாரி அம்பாள் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போரால் மக்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில் கடந்த 20 ஆண்டுகளாக பூசைகள் நடைபெறாதிருந்த நிலையில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் குடமுழுக்கு நடைபெற்று நித்தியபூசைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது ஆலயம் சீரமைக்கப்பட்டு இந்த ஆண்டு 29 ஆண்டுகளின் பின்னர் புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## கடல்சார் நடவடிக்கைகளுக்காக 39 மில்லி. டொலர்களை அமெரிக்கா வழங்குகிறது!

கொழும்பு, பெப். 17

வங்காள விரிகுடா முனைப்புத் திட்டத்தின் கீழ் கடல்சார் பாதுகாப்பு, சுதந்திரமான கப்பல் போக்குவரத்து, மற்றும் கடல்சார் விழிப்புணர்வுக்கான ஆதரவாக, இலங்கைக்கு 39 மில்லியன் டொலர் நிதியை வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் முதன்மை பிரதி உதவிச் செயலர் தோமஸ் டி வஜ்டா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை பாத் பைன்டர் பவுண்டேசன் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'இது தெற்காசியாவில் மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரணத் திறன்களையும் அதிகரிக்கும். இந்தோ-பசிபிக் கூட்டணியின் ஒரு நாடாக, பிராந்தியத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான வாய்ப்பை இலங்கை கொண்டிருக்கிறது. எமது மூலோபாயத்துக்கு அமைய, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை பாதுகாக்கவும், விதிமுறைகளின் அடிப்படையிலான ஒழுங்கை வலுப்படுத்தவும், பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகளைக் காணும் கொள்கைகளையும் மதித்து, நாங்கள் இலங்கை போன்ற முக்கிய பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறோம். இரண்டு நாடுகளின் இராணுவங்களும், இடர்களில் செயற்படுதல், மனிதாபிமானம், கடல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயற்படுகின்றன. பரஸ்பரம் நன்மை அளிக்கக் கூடிய வகையிலும், இலங்கை இராணுவத்தை அமைதிக்கால படையாக மாற்றம் செய்ய உதவும் வகையிலும் கூட்டுப் பயிற்சிகள் வடிவமைக்கப்படுகின்றன' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# தன் காதல் நினைவுகளை மீட்டிப் பார்த்த மைத்திரி!

### காதல் மனைவியே தனது பலம் என்றும் நெகிழ்ச்சி

கொழும்பு, பெப்.17

அரச தலைவர் மைத்திரிபால பால சிறிசேன தனது மனைவியை முதலில் சந்தித்த விதம் பற்றி வானொலி நிகழ்ச்சி ஒன்றில் விபரித்துள்ளார். தனது இளமைக் காலத்தில் நடந்த மறக்க முடியாத காதல் சம்பவம் தொடர்பாகவும் மனம் திறந்துள்ளார்.



பொலனறுவையில் கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றிய போது பொருள்களை கொள்வனவு செய்ய கொழும்புக்கு வந்து செல்வதுண்டு. அவ்வாறு வாகனத்தில் பொருள்களை எடுத்துச் செல்லும் வழியில் குருணாகல் பிரதேசத்தில் உள்ள மர ஆலை ஒன்றில் இருந்து பலகைகளை கொள்வனவு செய்வோம். பலகைகளை தெரிவு செய்ய வேறு நபர்கள் வருவார்கள். பலகைகளைப் பற்றிய அனுபவம் எனக்கில்லை.

ஒரு முறை குருணாகலில் உள்ள மர ஆலைக்கு அருகில் வாகனத்தை நிறுத்தியிருந்த போது, மூன்று பெண்கள், வெட்டி ஒதுக்கப்பட்ட பலகைகளை சேர்த்து எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு சென்றனர். அவர்களில் எனக்கு பிடித்த பெண்ணொருவர் இருந்தார். அவர் தான் ஜெயந்தி. பலகைகளை எடுத்துச் செல்லும் பெண்களிலும் பலகை பாரமாக இருக்கின்றதா? என்று கேட்டேன். சும்மா இரு என்று கூறி விட்டு அந்த பெண்கள் சென்று விட்டனர். என்னுடன் வாகனத்தில் வந்த சாரதியிடம் அந்தப் பெண் எந்த வீட்டுக்குச் செல்கிறார் என்று போய்ப் பாருங்கள் என்று கூறினேன் சாரதி வீதியோரத்தில் உள்ள வீடுதான் என்று கண்டு பிடித்துச் சொன்னார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பொலனறுவையில் இருந்து கொழும்பு செல்லும் போது அந்த வீட்டுக்கு அருகில் சென்றதும் நாங்கள் செல்லும் வாகனம் பழுதுபட ஆரம்பித்து விட்டது.

பலகை வாங்கச் சென்ற நான், பின்னாளில் அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொண்டேன். எனது அரசியல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் எனக்கு இருக்கும் மிகப் பெரிய பலம் எனது மனைவி. 27 ஆண்டுகள் தொடர்ந்தும் நாடாளுமன்ற வாழ்க்கை இருந்தது. தற்போது நான்கு ஆண்டுகள் அரச தலைவராக இருக்கின்றேன். இந்த முழுக் காலத்திலும் நான் அலுவலகத்தில் இருக்கும் போது என் மனைவி, வாழை இலையில் கட்டி அனுப்பி வைக்கும் சாப்பாட்டையே சாப்பிடுவேன்.

தற்போதும் அப்படித்தான். தற்போது முப்பது ஆண்டுகளாக என் மனைவி, வாழை இலையில் அனுப்பி வைக்கும் சாப்பாட்டைதான் சாப்பிடுகிறேன்.

என் மனைவி எனக்கு தாயைப் போன்றவர். எனது உடைகளை தயார் செய்வது, உணவுகளை தயார் செய்வது எல்லாம் மனைவிதான். நான் வீட்டில் இருந்து புறப்படும் போது எங்கு போகிறீர்கள் என்று என் மனைவி என்னிடம் ஒரு போதும் கேட்டதில்லை. அப்படி கேட்டிருந்தால், நான் இந்த உயரத்துக்கு வந்திருக்கமாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார். (எ)

## ஜே.வி.பியின் தலைவரை மன்றில் நிறுத்தக் கோரும் மனு நிராகரிப்பு

கொழும்பு, பெப். 17

கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட ஜே வி பி தலைவர் றோகண விஜேவீரவை நீதிமன்றில் நிறுத்தக் கோரி, அவரது மனைவி மேன்முறையீட்டு நீதிமன்றில், சமர்ப்பித்திருந்த ஆட்கொணர்வு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டு 30 ஆண்டுகளாக சட்ட நடவடிக்கை கோரப்படாததைக் காரணம் காட்டி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தீபாலி விஜேசுந்தரவும், அர்ஜுன ஒபேசேகரவும் இந்த ஆட்கொணர்வு மனுவை நேற்றுத் தள்ளுபடி செய்தனர். றோகண விஜேவீரவின் மனைவி சித்ராங்கனி விஜேசேகர தாக்கல் செய்த இந்த மனுவில் சட்டமா அதிபர், முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க, முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, ஜெனரல் சிசில் வைத்யரத்ன உள்ளிட்ட 10 பேர் எதிர்மனுதாரர்களாக குறிப்பி டப்பட்டிருந்தனர்.

இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டமைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்யவுள்ளதாக, சித்ராங்கனி விஜேவீரவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். 1989ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்டதில் இருந்து றோகண விஜேவீர காணாமல் போயுள்ளார் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

### பாகிஸ்தான்–இலங்கை இடையே

## கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பேச்சு

கொழும்பு, பெப். 17

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக இரண்டு நாடுகளின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவும், பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் சபார் மொகமட் அப்பாசிக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, பாதுகாப்புடன் தொடர்புடைய கூட்டு மற்றும் கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன என்று பாகிஸ்தானின் கடற்படை தெரி வித்துள்ளது. (ம)

## ரியூனியனிலிருந்து கடத்தப்பட்டோரில் 8 பேர் மறியலில்!

கொழும்பு, பெப். 17

ரியூனியன் தீவில் இருந்து பிரெஞ்சு அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்ட 64 பேரில் எட்டுப் பேரை விளக்கமறியலில் வைக்க நீர்கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5 சிறுவர்கள், 8 பெண்கள் உள்ளிட்ட 70 இலங்கையர்கள் சட்டவிரோதமாக சிலாபத்தில் இருந்து கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி ரியூனியன் தீவுக்கு படகொன்றில் பயணம் மேற்கொண்டனர். கடந்த 4ஆம் நாள் இந்தப் படகு 'பிரான்சின் கட்டுப்பாட்டில் உள்ள ரியூனியன் தீவைச் சென்றடைந்தது. அங்கு 70 பேரும் அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். இவர்களில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 52 தமிழர்களும் அடங்கியிருந்தனர்.

இவர்களில் 6 பேர் தவிர, ஏனைய 64 பேரையும், பிரான்ஸ் அதிகாரிகள் சிறப்பு வானூர்தி ஒன்றின் மூலம், 70 பாதுகாப்பு அதிகாரிகளின் துணையுடன், கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்தனர். திருப்பி அனுப்பப்பட்டவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்குப் பின்னர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று நிறுத்தப்பட்டனர். அவர்களில் 8 பேரைத் தடுத்து வைக்கவும் ஏனையவர்களை விடுதலை செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம)

## வரணி இயற்றாலை பகுதியில் நேற்று இருவர் அதிரடிக் கைது

### திருட்டுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றச்சாட்டு

வரணி இயற்றாலைப் பகுதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் கொடிகாமம் பொலிஸார் முற்படுத்திய போது இருவரையும் மார்ச் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

கடந்த நான்காம் திகதி இரவு இயற்றாலைப் பகுதி வீடொன்றினுள் முகமூடி அணிந்த நிலையில் உட்புகுந்த மூவர் வீட்டிலிருந்த தாயையும் மகளையும் ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி அவர்களிடமிருந்து ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான 9 பவுண் தங்க நகைகளையும் 57 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் சென்ற பின்னர் பெண் கூக்குரல் எழுப்பியதை அடுத்து ஊர்மக்கள் திரண்டு அந்தப் பகுதியில் தேடுதல் நடத்தினர். இதையடுத்து வேப்பமரத்தில் ஒளிந்திருந்த நிலையில் இருவர் மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். நகைகள் மற்றும் பணத்துடன் ஒருவர் தப்பியோடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. தப்பியோடியவர் என்று கருதப்படும் நபரையும் அவருக்கு உதவியவர் எனக் கருதப்படும் நபரையும் மானிப்பாயில் வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். இவர்களை மார்ச் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது. (ம-9)

சூரியகாந்தி
உதயன்



கட்டுரை.
வி.அருணாசலம்

# தெற்கு மும்மூர்த்திகளின் வடக்கு நோக்கிய தரிசனம்

**2005** ஆம் ஆண்டு, அரச தலைவர் தேர்தல் நடந்த அன்றிரவு நிம்மதிப் பெருமூச்சுடன் நித்திரைக்குச் சென்றார் ரணில் விக்கிரமசிங்க. காரணம் விடிந்ததும் தான் தான் அரச தலைவர் என்கிற நம்பிக்கை அவர் மனதில் நிறைந்திருந்தது. ஆனால் மகிந்த ராஜபக்ச அன்றிரவு முழுவதும் நித்திரை செய்யாது விழித்திருந்தார். இந்த இரண்டு தலைவர்களினதும் தலைவிதியை மாற்றிய வாக்குகள் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுடையவை என்பது பிற்பாடு உணரப்பட்ட விடயம். ஆனால், இதில் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் மகிந்த வடக்குக் கிழக்குத் தமிழரின் வாக்குகள் இல்லாமலே தென்பகுதி வாக்குகளால் வென்றார் என்பதே.

(அடுத்த பக்கம்)

வழி முறையும்
பொறி முறையும்



12



பதறுகிறது
புல்வாமா!

11

2015ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்ததால் மைத்திரிபால சிறிசேன வெல்லவும் மகிந்த தோற்கடிக்கப்படவும் வாய்ப்பு ஏற்பட்டது. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தென்பகுதியில் மகிந்தவின் இனவாதப் பரப்புரைகள் வெற்றியடைந்திருக்கிறது என்பதையே காட்டின. இனி வரப்போகும் மாகாணசபைத் தேர்தலிலும் ஏனைய தேர்தல்களிலும் மகிந்தவின் தாமரை மொட்டுப் பல இடங்களிலும் பற்றையாக வளர்வதற்கு வாய்ப்புண்டு. மகிந்த சீனாவின் பக்கம் எனப் பேசி வந்த ரணில் அரசு தனக்குத் தேவையான வெளிநாட்டுக் கடனை ஐரோப்பா மற்றும் அமெரிக்கா கொடுப்பதற்குப் பின்னடித்த நிலையில் சீனாவிடமே பெறவேண்டியிருந்தது. சீனாவுடன் நிற்கின்றார் என்ற மகிந்த இந்தியாவுடனும் நல்லுறவைப் பேணி வருகிறார் என்பதையும் இவ்விடத்தில் கவனிக்க வேண்டும்.



**வடக்கில் நிலை...?**

வட மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்பட்டாலும் அதிலுள்ள 38 ஆசனங்களில் 20க்கு மேற்பட்டவை தமிழ்த் தேசியத்துக்கு எதிராகவே கைப்பற்றப்படுவதற்கு வாய்ப்புண்டு. இதனால் அடுத்த வடமாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, விக்னேஸ்வரன் தலைமையிலான அணியோ தனித்து அமைத்துவிட முடியாதென்பது தெளிவாகிறது. புதிய அரசியல் தீர்வு சரிப்பட்டு வராது என்ற நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்குக்கான அபிவிருத்தித் திட்டங்களில் இறங்கியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. ரணில் - தமிழ் அரசுக் கட்சி கூட்டு அதை மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட நோயாளர் காவு வண்டிகளை மீண்டும் ஒரு முறை ஆளுநர் தலைமையில் வழங்குவதாகச் சமீபத்தில் மேடையேற்றப்பட்ட நிகழ்வில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரனும், சார்ள்ஸ் நிர்மலநாதனும் கலந்து காவுகை வண்டிகளின் திறப்புகளை வழங்கிச் சிறப்பித்திருந்தார்கள். முன்னைய காலங்களில் இவ்வாறான ஒரு சம்பவம் நடந்திருந்தால் மகிந்த அரசையும் ஈ.பி.டி.பியையும் கடுமையாக விமர்சிக்கும் சிறிதரன் இந்த விடயத்தில் பெட்டிப் பாம்பாக ஆகிவிட்டதைக் காண முடிந்தது.

**ரணிலின் வடக்குக்கான தங்கு வேட்டை**

அண்மையில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடபகுதிக்கான 3 நாள்கள் தங்கு வேட்டைக்கு வந்திருந்த போது தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஓரணியில் நின்று ரணிலின் அபிவிருத்தியைப் பெற்று வடபகுதி மக்களுக்கு வழங்கினர். அதே நிகழ்ச்சி நிரலில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைத்துப் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது மகிந்தவின் அரசியல் சூழ்ச்சியால் இல்லாது செய்யப்பட்டு விட்டது என வெளிப்படையாக ரணில் குறிப்பிட்டார். இதன் மூலம் இனிவரும் காலங்களில் அது ஒரு கடினமான பணி என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. அரசியல் தீர்வு இனி மேலும் சாத்தியம் இருக்கிறது என்று கூறமுடியாத நிலையிலேயே, நெருக்கடி காரணமாக உண்மையைக் கூறவேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டது.

**அதிக கவனம் வடக்கின் அபிவிருத்தியில் ஏனோ?**

தற்போது வடக்கு நோக்கிய தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கில் அரசியல் தீர்வை நீக்கிய அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டிவருவது தெரிகிறது. அரசியல் தீர்வு விடயத்தில் மைத்திரி - மகிந்த ஆகிய இருவரும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். அடுத்து வரவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணி, மைத்திரி அணி, ரணில் அணி என 3 முனைப்பான போக்கிருப்பது தெளிவாகத் தெரிகிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வட மாகாணத்தின் புதிய ஆளுநராகக் கலாநிதி சுரேன் ராகவனை நியமித்ததன் மூலம் அவரூடாகக் காய் நகர்த்தி வருகிறார். அங்கஜன் இராமநாதன் வடக்கு வாக்குகளை மைத்திரி சார்பாகத் திரட்டும் நபராக உள்ளார். வடக்குக்கான அபிவிருத்தி வேலைகளை அரச தலைவர் என்ற வகையில் மைத்திரியால் முன்னெடுக்க முடியும்.

ரணில் அணி தமிழ் அரசுக் கட்சிக்கு ஊடாகவும் விஜயகலாவுக்கு ஊடாகவும் தமது வாக்கு வங்கிகளைப் பலப்படுத்தி வருகிறது. தலைமை அமைச்சர் என்ற வகையில் தான் மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்திப் பணிகளை வடக்குக்கு வழங்கத் தயாராக இருக்கிறார் ரணில்.

மகிந்த அணி ஏற்கனவே பல அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து முடித்துள்ளது. டக்ளஸ் தேவானந்தாவூடாகத் தமது நிலைகளைப் பலப்படுத்தினாலும் வடபகுதி வாக்குகளைவிடத் தென் பகுதி இனவாத அரசியல் வாக்குகள் இந்த அணிக்குச் சாதகமாக உள்ளன. சிறீலங்க சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவின் தலையீடு, மைத்திரியின் தலையீடு, மகிந்ததாவுக்கு எதிரானவர்களின் தலையீடு என எல்லாவற்றையும் தவிர்ப்பதற்காகவே பொது மக்கள் முன்னணி என்ற கட்சியை அமைத்துத் தம்மைப் பலப்படுத்தி வருகிறது மகிந்த அணி.

**நீர்த்துப்போகச் செய்யப்படும் தமிழர் விடயங்கள்**

வட பகுதிக்கான இந்த மும்முனை வியூகத்தில் இறுதிப்போர்க் குற்றங்கள், ஐ.நா. மனித உரிமை விடயங்களை நீர்த்துப் போக வைப்பதிலும், பௌத்தத்தின் பரவலை மேலும் அதிகப்படுத்தவும் தமிழருக்கான அரசியல் தீர்வு ஒன்றை இல்லாது செய்வதிலும் மகிந்த, மைத்திரி, ரணில் ஆகிய மூன்று சிங்களத் தலைவர்களிடமும் கருத்து வேறுபாடு இருக்கப் போவதில்லை. இதன் மூலம் இதுவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைகள் கூறி வந்த "எமக்கு அபிவிருத்தி முக்கியமல்ல, தமிழ் மக்களின் உரிமையே முக்கியம்" என்ற நிலைப்பாடும் தென்பகுதி ஆட்சியாளர்களால் நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில் வட மாகாணசபைத் தேர்தல் நடக்கும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஈ.பி.டி.பி மற்றும் மகிந்த அணியைக் குறைகூறியே தமது வாக்குகளைச் சேகரித்தது. ஆனால், விக்னேஸ்வரனின் வரவுக்குப் பின்னர் கூட்டமைப்பு பல பிரிவுகளாகப் பிரிந்து நிற்பது மட்டுமல்லாது உள்வீட்டு விவகாரங்கள் அதிகரித்து வருவதுகூடத் தென்பகுதி மும்முனை அரசியலுக்குச் சாதகமானதாகவே இருக்கும்.

**ஓரளவுக்கிருந்த ஒற்றுமையையும் சிதைத்த பொருமைக்குரியவர்கள்**

இனி உரிமை பற்றிப் பேசப் போகின்ற விக்னேஸ்வரன், சுரேஸ்பிரேமச்சந்திரன், கஜேந் திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இதுவரை தமிழரிடம் காணப்பட்டுவந்த ஒற்றுமையையும் சிதைத்தே விடுவர் என்பது உறுதி. தமிழ்த் தேசியம், தமிழீழம் என்பனவெல்லாம் கைவிடப்பட்டுத் தமது குடும்பத்தில் ஒருவருக்காவது அரச சேவையைப் பெற்றுவிடும் மனநிலைக்குத் தமிழ் மக்கள் வந்துவிட்டனர்.

இந்த மாற்றம் எதைக் காட்டுகிறது என்றால் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைவர்களோ, புத்தி ஜீவிகளோ, சமூகத் தலைவர்களோ, மதத் தலைவர்களோ காத்திரமானவர்களாக இல்லை என்பதையே.

இரணைமடுவுக்கு மொறகாகந்த நீரைக் கொண்டுவருவது, வடக்கின் பொருளாதார மையமாக அறிவியல் நகரை மாற்றுவது, கொக்கிளாய் - நாயாறு பாலம் அமைப்பது, நாயாறு - குறுகந்த ரஜமகா விகாரை 2ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பனவெல்லாம் 'கோழியைக் கேட்டுக் குழம்பு வைப்பதில்லை' என்ற சொல்லாடலுடன் ஒன்றித்துத் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம். விடுவிக்கப்பட்ட காணிகளில் குடியேறுவதற்குக்கூட மக்கள் இல்லாத அளவுக்குத் தமிழ் மக்களின் இனப்பெருக்கம் அச்சம் தரும் வகையில் குறைந்து வருவதும் தமிழரின் எதிர்காலத்தை இல்லாது செய்துவிடும். தற்போது வடக்கு நோக்கி வருகின்ற சிங்கள, பௌத்த மும்மூர்த்திகளின் கனவே இனிவரும் காலங்களில் நனவாகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதையே இனி வரும் காலம் உணர்த்தும்.

> **தற்போது வடக்கு நோக்கிய தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கில் அரசியல் தீர்வை நீக்கிய அபிவிருத்தியில் அனைவரும் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். அரசி யல் தீர்வு விடயத்தில் மைத்திரி – மகிந்த ஆகிய இருவரும் ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். அடுத்து வரவிருக்கும் அரச தலைவர் தேர்தலில் மகிந்த அணி, மைத்திரி அணி, ரணில் அணி என 3 முனைப்பான போக்கிருப்பது தெளிவாகத் தெரிகிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வட மாகாணத்தின் புதிள ஆளுநராகக் கலாநிதி சுரேன் ராகவனை நியமித்ததன் மூலம் அவரூடாகக் காய் நகர்த்தி வருகிறார்.**



# பதறுகிறது புல்வாமா!



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 45 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதற்கு உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன. பாகிஸ்தானைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஜெய்ஷ்இமுகமது என்ற அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. 350 கிலோ வெடிபொருள்களுடன் காரொன்றில் சென்ற தற்கொலைத்தாரி இந்திய இராணுவத்தினர் சென்ற பேருந்தை இலக்குவைத்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. தாக்குதலுக்கு பாகிஸ்தானே காரணம் என்று தெரிவித்துள்ள இந்தியா, பன்னாட்டுச் சமூகத்திடம் இருந்து பாகிஸ்தானைத் தனிமைப்படுத்துவோம் என்றும் எச்சரித்துள்ளது.

**'காஷ்மீரில் வழக்கமான ஒன்று...'**

## சல்மானின் பாதையில் மொகமட் பின் சல்மான்

சவூதி அரேபியாவில் பட்டத்து இளவரசர் பின் சல்மான் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்ததாகச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அயல் நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணங்களில் பின் சல்மானின் தந்தையும், மன்னனுமான சல்மானை அவர் பின்பற்றவுள்ளார் என்ற தகவல் தற்போது வைரலாகி வருகிறது.

பொதுவாக மன்னன் சல்மான் சவூதியை விட்டு வெளியில் செல்லும்போது, தனக்குத் தேவையான அத்தனை பொருள்களையும் வானூர்திகளிலும், லொறிகளிலும் எடுத்துச் செல்வது வழக்கம். பின் சல்மான் பாகிஸ்தானுக்கான தனது சுற்றுப் பயணத்தின்போது 5 லொறிகளில் தனக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லவுள்ளாராம்.

**'அப்ப பின்னப் பாருங்கோவன்...'**



## ஜப்பானில் திருடப்பட்ட பொன்சோய் மரங்கள்!



ஜப்பானில் விலையுயர்ந்த பொன்சோய் மரங்கள் திருடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. தன் மரங்களைத் திருடிச் சென்றவர்களிடம் கோபம் கொள்ளாத அவற்றின் உரிமையாளர், மாறாக மரங்களை உரிய முறையில் பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜப்பானில், டோக்கியோ நகரத்தின் வடக்குப் பகுதியில் உள்ளது கவாகுச்சி. இங்கு போன்சாய் வளர்ப்பில் ஐந்தாம் தலைமுறையாக ஈடுபட்டு வருகிறார் செய்ஜி இமுரா. தன்னுடைய போன்சாய் மரங்கள் களவுபோனது குறித்துப் பேசும் அவர், "காணாமல் போன 7 போன்சாய்களும் எங்கள் குடும்பச் சொத்து. அவற்றை லட்சக்கணக்கான டாலர்களைக் கொடுத்தாலும் விற்றிருக்க மாட்டேன். அவற்றைத் திருடிச் சென்றவர்களை வெறுக்கிறேன். இருந்தாலும் அவனுக்கோ அவளுக்கோ ஒன்று சொல்ல விரும்புகிறேன். தயவுசெய்து மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றி, பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவை இறந்துவிட்டால் மிகுந்த வருத்தப்படுவேன். 400 ஆண்டுகாலப் பழமைவாய்ந்த மரங்கள் அவை' என்று தெரிவித்தார்.

## ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு

பிரகாஸ்

## போராலும் பட்டினியாலும் ஒரு லட்சம் குழந்தைகள் ஆண்டுதோறும் சாகின்றன

உலக அளவில், ஒவ்வொரு ஆண்டும் ஆயுத மோதல்களாலும் அதன் தாக்கத்தினாலும் பசி பட்டினியாலும் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டுகின்றது என்று ஆய்வொன்று குறிப்பிடுகின்றது. குழந்தைகளைக் காப்போம் என்ற அறைகூவலோடு இயங்கிவரும் சேவ் தி சில்ட்ரன்ஸ் இன்டர்நேஷனல் இந்தப் புள்ளி விவரத்தைத் தெரிவித்துள்ளது.

ஜெர்மனியில் உள்ள முனிச் நகரத்தில் சமீபத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. இதில் குறித்த அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையில், உலகில் குறிப்பிட்ட 10 நாடுகளில் அதிகபட்ச அளவில் இந்த உயிரிழப்புகள் நேர்கின்றன. ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, காங்கோ ஜனநாயகக் குடியரசு, ஈராக், மாலி, நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளிலேயே குழந்தைகளின் நிலை மோசமாகவுள்ளது. இந்த குறிப்பிட்ட நாடுகளில் மட்டும் 2013ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலங்களில் 5 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் இறந்துள்ளன. கொல்லப்படுதையோ, கொல்லப்படுவதற்கான அச்சுறுத்தலையோ இக்குழந்தைகள் எதிர்கொள்ள நேர்கின்றன. இது மட்டுமின்றி ஆயுதக் குழுக்களில் இணைத்துக்கொள்ளுதல், கடத்தப்படுதல் அல்லது பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுதல் ஆகியவற்றையும் இந்தக் குழந்தைகள் எதிர்கொள்கின்றன – என்றுள்ளது.

**'என்று தணியும் இந்தச் சோகம்...'**





உலகெங்கும் கடந்த 14ஆம் திக்தி காதலர் தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. காதலின் நகரமான பரிஸ் நகரிலும் இந்தக் கொண்டாட்டங்கள் சூடுபிடித்திருந்தன

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# வழி முறையும் பொறி முறையும்



முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிடும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனது வழிமுறைக்கு வந்து விட்டதாகவும், இன்னும் தனது பொறிமுறைக்கு வரவில்லையெனவும் தெரிவித்திருந்தார். வழமைபோலவே அவர் வெளியிடும் கருத்துக்களில் உண்மை உண்டோ, இல்லையோ என்பதற்கு அப்பால் எப்போதுமே அவரது வார்த்தைப் பயன்பாடு கவர்ச்சிகரமாக அமைவதுண்டு. அவர் அடிக்கடி சுயநல அரசியல், சேறு பூசல், கண் துடைப்பு போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்திப் பொய்களையும் உண்மையென நம்பும் வகையில் அழகுபடுத்திக் கருத்துரைப்பதுண்டு. இந்த வழிமுறை, பொறிமுறை வார்த்தைப் பயன்பாடும் அத்தகைய கவர்ச்சியைக் கொண்டிருக்கின்றன. அதில் உண்மை இருப்பதாகவே தோன்றும். அவரின் கருத்தில் உண்மையிருக்கின்றதோ, இல்லையோ உலகமே வியக்கும் விடுதலைப்போராட்டத்தை நடத்தி வெற்றி மேல் வெற்றியாகக் குவித்துச் சாதனைகள் புரிந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் தமிழ் மக்களின் ஜனநாயக சக்தியாக உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் மக்களால் துரோகிகள் எனப் புறமொதுக்கப்பட்டவர்களின் பல்லுக்கிதமாகப் போய்விட்டதை எந்தவொரு தமிழனாலும் பொறுத்துக்கொள்ள முடியாது. அப்படியொரு வேண்டத்தாகாத நிலை உருவாகுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய தலைமையே காரணம் என்பதும் மறுப்பதற்கில்லை.

**அரசின் செல்லப்பிள்ளைகளே ஈ.பி.டி.பியினர்**

தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட, போட்டியில் வேறு கட்சிகள் கலந்து கொள்ளாத ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்றப் பிரவேசம் ஆரம்பமானது. அதில் வெற்றி பெற்ற ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் நூற்றுக்கு உட்பட்ட வாக்குகளையே பெற்றனர். இதன்போது சாவகச்சேரித் தொகுதி உறுப்பினர் 23 வாக்குகளையே பெற்றார். அந்தச் சந்தர்ப்பத்தை டக்ளஸ் தேவானந்தா சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். அரச அனுசரணையுடன், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் அதிகாரத்துடன் வலம் வந்தார். தன்னைச் சுற்றி ஆதரவாளர்கள் கூட்டத்தையும், அடியாள்கள் கூட்டத்தையும் உருவாக்கிக் கொண்டார். அரச வானொலியில் தினமும் ஒரு மணி நேரம் தனது பரப்புரை நிகழ்ச்சியையும், புலி எதிர்ப்பையும் ஒலி பரப்புவதற்கு அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்த அளவுக்கு அரசின் செல்லப் பிள்ளைகளாக ஈ.பி.டி.பியினர் விளங்கினர்.

**இணக்க அரசியலில் ஈ.பி.டி.பி**

தொடர்ந்து ஆட்சிப்பீடம் ஏறிவந்த அனைத்து அரசிலும் அமைச்சர் பதவியைப் பெற்றுத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அவ்வளவையும் செய்தார் டக்ளஸ் தேவானந்தா. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற போலிக் கோசத்தை முன்வைத்து இணக்க அரசியல் என்ற பெயரில் சிங்களப் பேரினவாதச் சக்திகளுடன் சரணடைவு அரசியலைத் தொடர்ந்தார். அவர் சரணடைவு மூலம் மேற்கொண்ட மக்கள் விரோத அரசியலுக்கு அவர் சூட்டிய பெயர் தான் இணக்க அரசியல். அவரது அரசியல் வழிமுறையானது அன்றிலிருந்து இன்றுவரை இணக்க அரசியல் என்ற பெயரில் நிபந்தனையற்ற சரணடைவு அரசியலாகவே விளங்கி வருகிறது.

**கூட்டமைப்பின் சரணகதி அரசியல்**

2018ஆம் ஆண்டில் தேசிய அரசு என்ற பெயரில் மைத்திரி - ரணில் ஆட்சியமைத்த பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்க அரசியல் என்ற பெயரில் நிபந்தனையற்ற சரணகதி அரசியலில் இறங்கியது. தமிழ் மக்களின் நலன்களைப் பின்தள்ளி, மனித உரிமைகள் பேரவை உட்பட்ப் பன்னாட்டு மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அரசைக் காப்பாற்றுவதை முதன்மைப்படுத்துகின்ற அரசியலையே கூட்டமைப்பு முன்னெடுத்து வந்தது. அரச தரப்பால் மேற்கொள்ளப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டியது. இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் கேள்வி எழும்போது, அரசுக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்தால், அதைப் பயன்படுத்தி மகிந்த தரப்பு ஆட்சிக்கு வந்துவிடும் எனக் கூறப்பட்டது.

அதாவது டக்ளஸ் - மகிந்த அரசுடன் மேற்கொண்ட அதே வழிமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - ரணில் அரசுடன் மேற்கொண்டது. இந்த நிலையில், தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கான ஆதரவு நலிவடைய ஆரம்பித்தது. 2005ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து இடம்பெற்று வந்த சகல தேர்தல்களிலும் ஏகப் பெரும்பான்மையைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இரண்டு இடங்களில் மாத்திரம் தனித்து ஆட்சியமைக்கும் அளவுக்குப் பலவீனமடைந்தது.

**டக்ளஸ் - கூட்டமைப்பு**

பதவிக்காக இலட்சியத்தை விட்டுக்கொடுக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் வழிமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு வகையில் கையில் எடுத்துக் கொண்டது. தமிழ் மக்களுக்காகத் தான் பதினொரு முறை சிறை சென்றதாகச் சொல்லி அடிக்கடி பெருமைப்படும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா உள்ளூராட்சி மன்றங்களில் தமக்கு ஆதரவு வங்கும்படி டக்ளஸ் தேவானந்தாவிடம் மண்டியிட்டார். தங்களைத் துரோகிகள் என்று இதுவரைக் கூறி வந்தவர்கள் எங்கள் உதவியுடன் ஆட்சியமைப்பதன் மூலம் எங்கள் அரசியலை ஏற்றுக் கொண்டுவிட்டனர். எனப் பெருமைப்பட்டுக் கொண்டார் டக்ளஸ். இப்படியான ஒரு துர்ப்பாக்கிய நிலையில், டக்ளஸ் தனது வழிமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுவிட்டது எனச் சொலலிப் பெருமைப்படுவதில் என்ன தவறு இருக்கமுடியாது?

**கவனம் பெறும் டக்ளஸின் கவலை**

தனது பொறிமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பின்பற்றவில்லை என்ற டக்ளஸ் தேவானந்தாவின் கவலையையும் கவனத்தில் எடுக்காமல்விட முடியாது. அவர் அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சராக இருந்தபோதும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் அவரது பொறிமுறை சட்ட வரம்புக்கு உட்பட்டதாக அமைந்ததில்லை. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அவரது அடியாள்கள் துணைப் படையாகச் செயற்பட்டனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டவர்கள் வீதி வீதியாகவும் வீட்டு முற்றங்களிலும் சுட்டுத் தள்ளப்பட்டனர். வெள்ளை வான் கடத்தல் மூலம் பலரை ஈ.பி.டி.பியினர் காணமலாக்கியதாக விசாரணைக் குழுக்களுக்குச் சாட்சியங்கள் வழங்கப்பட்டன. பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர். படுகாயப்படுத்தப்பட்டனர். பல அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. ஒருகால கட்டத்தில் ஈ.பி.டி.பியினரை நினைத்தாலே மக்கள் நடுங்குமளவுக்கு விளங்கினர். இந்தப் பொறிமுறையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பின்பற்ற முடியுமா?

**கூட்டமைப்பால் மக்கள் பயமுறுவதில்லை**

ஈ.பி.டி.பினருக்கு மக்கள் பயப்பிடுவதுண்டு. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் பயப்பிடுவதில்லை. அது தங்களின் கட்சி என ஓர் அந்நியோன்னியம் மக்கள் மத்தியில் உண்டு. எனினும் மகிந்தவைக்காட்டித் தமிழ் மக்களை வேறு விதத்தில் கூட்டமைப்புப் பயப்பிடுத்துவதுண்டு. அதேவேளையில் ஈ.பி.டி.பியினரின் உறுப்பினர்கள் எவராவது யாரையாவது கொலை செய்து, அது பிடிபட்டால் மாத்திரம் அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றி ஈ.பி.டி.பியினர் அறிக்கை விடுவதுண்டு. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்படியல்ல. எவரையாவது வெளியேற்ற வேண்டுமானல் அவரைப் புறமொதுக்கி, நெருக்கடிகளைக் கொடுத்து, அவமானப்படுத்தி; தனிமைப்படுத்தி, தாங்களாகவே வெளியேற வைத்து விடுவர். எனவே பொறிமுறையைப் பொறுத்த வரையில் என்றுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியினருடன் இணங்கிப் போகவோ, பின்பற்றவோ சாத்தியமில்லை. அதேவேளை அவருடைய வழிமுறையில் செல்வதுகூடத் தமிழ் மக்களை இருளில் தள்ளும் ஆபத்தைக் கொண்டது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.


எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமை என்ற அடிப்படையில் இனியாவது தனது சரணகதி அரசியலைக் கைவிட்டு ஒரு பொது உடன்பாட்டின் அடிப்படையில் சகல சக்திகளையும் கையாள முனையவேண்டும். அதுவே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாலுள்ள வழிமுறையுமாகும்.

> தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்ட, போட்டியில் வேறு கட்சிகள் கலந்து கொள்ளாத ஒரு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் ஈ.பி.டி..பியின் நாடாளுமன்றப் பிரவேசம் ஆரம்பமானது. அதில் வெற்றிபெற்ற ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் நூற்றுக்கு உட்பட்ட வாக்குகளையே பெற்றனர்.



கட்டுரை

ஸுடோ ஸ்வாமி



# ஜெனிவா பரீட்சைக்கு தயாராகும் அரசு!

பல்கலைக்கழகக் கற்றல் காலத்தில் வருகின்ற 'ஸ்ரடி லீவு' என்று அழைக்கப்படுகின்ற காலங்கள் சிறப்பானவை. சாதாரண விரிவுரைக் காலங்களை வெறுமையாகக் கடத்திவிட்டு 'ஸ்ரடி லீவு' என்று தரப்படுகின்ற அந்தக் குறுகிய காலப்பகுதியை வெற்றிகரமாக பயன்படுத்தும் மாணவர்களை நான் நிறையவே கண்டிருக்கிறேன். குறித்த கல்வியாண்டில் சித்தியைப் பெறுவதற்குப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய காரியங்களை விரைவாக முடித்துக்கொடுப்பதிலும் எதிர்கொள்ளவிருக்கிற பரீட்சையைத் திறம்பட எதிர்கொள்வதற்கான ஆயத்தத்திலும் ஈடுபடுவார்கள் மாணவர்கள். போட்டோப் பிரதி எடுக்கும் கடைகளில் எல்லாம் அப்போது சூடு பறக்கும். முழு இரவிலும் விழித்தே இருந்து கற்றலை உள்வாங்கும் திறனை அந்த 'ஸ்ரடி லீவு' காலப்பகுதியில் பல்கலை. மாணவர்கள் பெற்று விளங்கு வார்கள். வன் பானங்களைத் தூர வைத்துவிட்டு காபனீரொட்சைட் நுழைக்கப்பட்ட மென்பானங்களை அரவணைத்து விழித்திருப்பார்கள். பரீட்சை வந்து போன பின் எல்லாம் படான்! நிலைமை தலைகீழாக மாறும். மீண்டும் வருகிற விரிவுரைக்காலங்கள் வெறுமனேயே கழியும். கிட்டத்தட்ட இதே யுக்தியை தான் இலங்கை அரசும் தற்போது நடைமுறைக்கிட்டிருக்கிறது. அது எதிர்கொள்ளப்போவது ஒன்றும் கல்வியாண்டின் இறுதிப்பரீட்சை ஒன்றை அல்ல. பன்னாட்டு அரங்கில் தான்; முகம் கொடுக்கவுள்ள ஜெனீவாப் பரீட்சையை. ஆமாம். எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் எதிர்கொள்ளவுள்ள பரீட்சையை முன்னிட்டுத் தன்னுடைய 'ஸ்ரடி லீவை' வெற்றிகரமாகப் பயன்படுத்துகிற பல்கலைக்கழக மாணவனைப்போல தன்னைத் தயார்படுத்தத் தொடங்கியிருக்கிறது இலங்கை அரசு.

**சாமி விடை கொடுத்தும் பூசாரி விடை கொடுக்காத நிலை**

காதலர் தினத்தன்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ். குடாநாட்டுக்குப் பயணம் செய்ய முன்பதாகக் கடந்த செவ்வாய்க்கிழமையன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பதற்கான அமைச்சர்வைப் பத்திரத்தை அமைச்சரவையின் அனுமதிக்காக அவர் சமர்ப்பித்திருக்கிறார். குறித்த அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வுகளை முன்வைத்து வெளிக்கிளம்பியுள்ள நிலையில், சாமி விடை கொடுத்தும் பூசாரி விடை கொடுக்காத நிலைவரத்தில் மாட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆமாம், குறித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அரச தலைவரின் ஆதரவு இன்னும் கிட்டவில்லை என அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

**பிரதி எடுக்கப்பட்ட ஆணைக்குழு தூசு தட்டப்படுகிறது!**

தென்னாபிரிக்க நாட்டில் தோன்றியதை அடியொற்றியதாகத் தோற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படும் இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2015ஆம் ஆண்டில் இந்த அரசு பதவிக்கு வந்த கையோடு நடந்த ஜெனீவா மாநாட்டில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவானதாகும். 2015ஆம் ஆண்டு செம்ரெம்பர் 30/01 தீர்மானத்துக்கு அமைவாக நிறை வேற்றப்பட வேண்டிய இந்த ஆணைக்குழு தொடர்பில் அப்போது அயலுறவு அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஏற்கெனவே கட்டியக்காரன் ஆற்றவேண்டிய பணியை நடத்தியிருந்த நிலையில், அது கிடப்பில் போடப்பட்டிருந்தது. இப்போது மார்ச்சில் நடைபெறவுள்ள ஜெனீவா நகர்வுகளை முன்னிறுத்தி அது தலைமை அமைச்சரால் தூசுதட்டப்பட்டிருக்கிறது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என நாமமிடப்பட்டிருக்கும் இந்த ஆணைக்குழு, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் என்பவற்றின் தொடர்ச்சியான நீட்டமாகும். இந்த ஆணைக்குழு, போர்க்குற்றம் இழைத்தவர்கள் தமது குற்றங்கள் தொடர்பில் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் ஒப்புக்கொள்ளும்இடமாக அமையுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனினும் இந்த ஆணைக்குழு தவறுகளை ஒப்புக்கொள்ளும் நபர்களைக் குற்றவியல் பொறுப்பாளியாக்கும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளாது எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**தாமதப்படுத்தல் தந்திரம்!**

2015ஆம் ஆண்டு செப்ரெம்பரில் போருக்குப் பின்னான இலங்கை நிலைவரத்தை முன்னகர்த்துவதற்குத் தேவையான முன்மொழிவுகள் ஜெனீவாநகரில் முரசறையப்பட்டிருந்தும் அவை ஒவ்வொன்றையும் நடைமுறைக்கிடுவதில் தாராள தாமதம் காண்பிக்கப்பட்டிருந்தது. இனிமேலும் தாமதமாகுதல் ஊக்குவிக்கப்படும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது என நம்புவோமாக.

**ஐக்கிய இராச்சியத்தின் சபதம்!**

கனடா, ஜேர்மனி, மசிதோனியா, மொன்டிநீக்ரோ மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றை உள்ளடக்கிய குழுவினர் இலங்கை மீது தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் நோக்கில் இயங்கிவருவதாகத் தெரிகிறது. அவர்களுடைய தீர்மானத்தின்படி, இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கையை முன்கொண்டுசெல்லும் வகையில் புதிய அழுத்தங்களை வழங்கும் செயற்பாடுகள் அமையவிருக்கின்றன. மனித உரிமைகள் தொடர்பான ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் இது தொடர்பில் ஐக்கிய இராச்சியப் பிரதிநிதி அண்மையில் தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசுக்குச் சார்பானதாக ஐக்கிய இராச்சிய அரசின் தீர்மானங்கள் மாறவேண்டுமென நேசப் பிரபு தரப்பால் அழுத்தங்கள் வழங்கப்படுகின்ற போதிலும், ஐக்கிய இராச்சியம் தனது தீர்மானத்தில் வலுவானதாக இருப்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கையின் நகர்வுகளுக்கு ஆதரவு அளித்து வரும் ஐக்கிய இராச்சியம், இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்னும் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் மாதத்தில் ஆரம்பமாகவுள்ள ஜெனீவாக் கூட்டத்தொடரை இலக்குவைத்து தனது 'ஸ்ரடி லீவு' நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறது இலங்கை அரசு. ஏலவே ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு மைத்திரிபால வழிவிட்டாரா? அந்த ஆணைக்குழுவின் இயங்கு பொறிமுறையும் அதன் உள்ளடக்கமும் பன்னாட்டுத் தரப்பையும் பாதிக்கப்பட்ட தரப்பையும் திருப்திப்படுத்தி யதா? என்பவை வரும் வாரங்களில் வெளிச்சத்துக்கு வரவிருக்கும் சங்கதிகளாகும்.



> கனடா, ஜேர்மனி, மசிதோனியா, மொன்டிநீக்ரோ மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவற்றை உள்ளடக்கிய குழுவினர் இலங்கை மீது தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் நோக்கில் இயங்கிவருவதாகத் தெரிகிறது. அவர்களுடைய தீர்மானத்தின்படி, இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கையை முன்கொண்டு செல்லும் வகையில் புதிய அழுத்தங்களை வழங்கும் செயற்பாடுகள் அமையவிருக்கின்றன

தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## நிறைவேற்று

"கபினட் பத்திரிகையை உடனடியாக அனுமதித்து அஞ்சல் சேவையாளர்களின் பிரச்சினைகளை நிறைவேற்று" இவ்வாறு கோரும் அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் சுவர்ப் பத்திரிகைகள் தென்கிழக்கிலுள்ள தபாலகங்களில் பொது மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
கடந்த வருடம் 6ஆம் மாதம் அஞ்சலக சேவையாளர்கள் தொடர்ச்சியாக வேலை நிறுத்தம் மேற்கொண்டு சேவைகளை முடக்கியதைப் பலரும் நினைவூட்டு கின்றனர்.


**அஞ்சல் சேவையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தான் எப்போதோ?**



## நெல் விலை பெரும் வீழ்ச்சி

இலங்கையின் முக்கிய நெல் உற்பத்தி மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் நெல் விலை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளதாக விவசாயிகள் கலை தெரிவிக்கின்றனர். பெரும்போக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள இந்தக் காலகட்டத்தில் 66 கிலோ கொண்ட ஒரு மூடை சிவப்பு நெல் ஆயிரத்து 800 ரூபாவாகவும் ஒரு மூடை வெள்ளை நெல் 2ஆயிரம் ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படுகின்றன. கடந்த சிறுபோக நெல் ஒரு மூடை 3ஆயிரம் ரூபாவும் அதற்கு மேலும் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது. எனினும் அறுவடை நெல்லை வெயிலில் உலர்த்திச் சேமித்து வைப்பதிலேயே விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**பாவம் விவசாயிகள்!**



## மூன்று மாடிக் கட்டடம்

ஐக்கிய அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடத்தின் ஏழு கோடி ரூபா நிதி உதவியில் நிந்தவூர் அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் மாணவர் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த மாடிக் கட்டடம் உட்பட நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை, மலசலகூடம் என்பவற்றின் திறப்பு விழா கடந்த வாரம் கோலாகலமாக நடைபெற்றது. அதிபர் ஏ.எல்.நிஜாமுடீன் தலைமையில் நடந்த இந்த விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டதுடன் இராஜாங்க அமைச்சர் எம்.பைஸால் காசிம் உட்பட அமெரிக்கத் தூதரக உயரதிகாரிகளும் மதிப்புறு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.
இந்தக் கட்டடத்துக்குப் பரிந்துரை வழங்கிய கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.நிஸாமுக்கு விழாவில் பலரும் நன்றி பகர்ந்தனர்.

**கல்வியை வாழ வைப்போம்!**

## நூல் வெளியீடு

இளம் எழுத்தாளர் எம்.ஏ.எம். ஜரீத் எழுதி சுயஅறிவியல் புனைகதை 'பர்முடா இரகசியம்' எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 19ஆம் திகதி நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிந்தவூர் கலை. இலக்கியப் பேரவையின் இந்த நூல் வெளியீட்டு விழா பேரவையின் தலைவர் டாக்டர் ஏ.எம்.ஜாபிர் தலைமையில் நடைபெறும். தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா இதில் முதன்மை அதிதியாகக் கலந்துகொள்வார்.

**இளையோரை ஊக்குவிப்போம்.**





## வேண்டாம் மாலை மரியாதைகள்

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.
கிழக்கில் தாம் கலந்து கொள்ளும் பாடசாலை நிகழ்வுகள் மற்றும் நிகழ்வுகளின்போது மாலைகள் அணிவித்து வரவேற்க வேண்டாமெனவும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கும் மதிப்பளிப்பு தேவையில்லை எனவும் அவர் கண்டிப்புடன் தெரிவித்துள்ளார்.
கடந்த 12ஆம் திகதி நிந்தவூர் அல்- மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழாவில் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்ள வருகை தந்த அவர் பாடசாலை நுழைவாயிலில் வரவேற்கப்பட்டபோது மலர் மாலைகளை அணிய மறுத்ததுடன் விழாவில் பொன்னாடை போர்த்தல், மதிப்பையும் ஏற்க மறுத்தார்.

**இதுவன்றோ முன்மாதிரி!**

## மூன்று சபைகள்

ஆசிய அபிவிருத்தி வங்கியும் உள்ளூராட்சி அமைச்சும் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் இரண்டாம் தர நகர அபிவிருத்தித் திட்டத்துக்குக் கிழக்கிலுள்ள மூன்று உள்ளூராட்சிச் சபைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. கல்முனை, மட்டக்களப்பு மாநகர சபையும் கிண்ணியா நகர சபையும் இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.
தலா இரண்டாயிரம் மில்லியன் ரூபா நிதி குறித்த 2ஆம் தர நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

**அபிவிருத்தி! அபிவிருத்தி!**

## ஓய்வுபெற்றார் தம்பி ஐயா

அஞ்சல் திணைக்களத்தில் 37 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வந்த அக்கரைப்பற்று- அம்பாறை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எம்.தம்பி ஐயா அண்மையில் ஓய்வு பெற்றார்.
நேர்மைமிகு அதிகாரியான தம்பி ஐயாவின் சேவைகளை விதந்து பாராட்டும் வகையில் அக்கரைப்பற்று பெங்கோ கார்டன் அரங்கில் அஞ்சல் சேவையாளர்களால் அவருக்குச் சேவை நலன் பாராட்டு விழா ஒன்று கடந்த வாரம் நடத்தப்பட் டது. கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி திருமதி ஜெயனந்தி திருச்செல்வம் உட்பட அஞ்சல் திணைக்கள உயரதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தம்பி ஐயாவின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டினர்

**நல்ல சேவையாளர்கள் என்றும் மறக்கப்பட முடியாதவர்கள்.**

## ஊடகர்களுக்கு...


அம்பாறை மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கென இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்படவிருக்கின்றது. அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் இந்த மருத்துவப் பரிசோதனை முகாம் இடம்பெறவுள்ளது.
இந்த முகாமில் கலந்துகொள்ளவிரும்பும் ஊடகவியலாளர்கள் 18ஆம் திகதி திங்கள் இரவு 8 மணிமுதல் உணவுக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துமாறு சம்மேளனச் செயலாளர் ஏ.ஜே.எம்.ஹனிபா கோரியுள்ளார்.

## சபாஷ்! பயிலுநர்கள்

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2016/17 கல்வியாண்டில் இரண்டு வருடக் கற்கையை நிறைவு செய்த ஆசிரிய பயிலுநர்களின் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்திய இந்த பரீட்சையில் பயிலுநர்கள் சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளதாக மேற்படி அரசினர் ஆசி ரிய கலாசாலை அதிபர் ஏ.முகம்மது பைஸால் தெரிவித்தார். கல்விப் பணிக்குள் நுழையவிருக்கும் இவர்களுக்கு ஒரு சபாஷ்.

கவிதைகள்

விவேகானந்தூர் சதீஸ்



## சமத்துவம்

மேல் வீட்டு
மரக்கறித் தோட்டத்தில்
கோட்டுச் சூட்டுடன் பொம்மை
கீழ் வீட்டுப் பொம்மைகள்
கிழிந்த கோமணத்தோடு

உயர்வும் தாழ்வும்
ஒரு முகட்டில்
இதுதான் நியதி
நம் நாட்டில்

சமத்துவம் பேசும்
சான்றோரே
சாதியம் பார்க்கும்
சபையோரே
சற்றுச் சிந்தியுங்கள்!



## நிலம் பெயர்ந்தவன்

பெயர்ந்தேன்
என் தாய் நிலத்தைவிட்டு
நான்
பெயரவில்லை
என்னை வீட்டு என்
தாய் நிலம்

பேனா முனையை
பேப்பரில் நிறுத்தும் போதெல்லாம்
என்
தாயகத்தின் நினைவலைகள்
தாளை நனைக்கிறது

நிலம் பிரிந்த நான்
நித்தமும் உழைக்கின்றேன்
நீசர்களின் நாசமடக்க...!

# இலவசங்கள் பல விதம்! கவனம்!

கருத்து

மகேஷ்

**சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி**

அரசியல்வாதிகள் இங்குள்ள மக்களை இலவசத்தால் ஏமாற்றி வாக்குகளைப் பெற முயற்சிக்கிறார்களே, ஏன்? என்று கேட்டார் சிவபாதத்தார். அந்த இலவசம் என்ற சொல் காதில் மோதியதும் "சும்மா கொடுத்தால் பொலிடோலையும் வாங்கிக் குடிப்பார்கள்!" என்று பலரும் சொல்லும் வாக்கியம் தான் செல்லத்தம்பியரின் நினைவுக்கு வந்தது.

சிவபாதத்தாரின் கேள்வியில் மேலும் அழுத்தி நின்ற ஏமாற்றம் என்ற வார்த்தை மக்கள் ஏமாறுகிறார்களா? அல்லது ஏமாற்றப்படுகிறார்களா? என்பதை அறிய இயலாதவாறு குழப்பத்தைத் தோற்றுவிப்பதாக இருந்தது. செல்லத்தம்பியர் சில பொழுது தடுமாறினார். இந்த இரண்டு தோணிகளிலும் காலை வைத்துச் சில பொழுது தத்தளித்தார். பின்னர் அதை விடுத்து ஒவ்வொன்றாக எடை போட்டுப் பார்த்தார் அவரின் சிந்தனையில் ஆயிரம் உண்மைகள் வெளிப்பட்டன.

✪ ✪ ✪

பாதையிலும், பஸ் நிலையத்திலும் பிச்சை எடுக்கின்ற பலரையும் நாம் பார்த்திருக்கின்றோம். இவர்கள் இலவசமாகக் கேட்பதெல்லாம் அவர்தம் தேவைக்காகச் செலவு செய்வதற்கு வேண்டிய சிறு தொகைப் பணம்! ஆனால் சிறு துளி பெருவெள்ளமாவதும் உண்மைதான். அநேகமானோர் ஒருவேளை உணவுக்காகவே பிச்சை எடுப்பதாகக் கூறுகிறார்கள். வீடு தேடி வருபவர்கள் உடுக்க உடை வேண்டுமென்றும் கேட்டுப் பெறுவார்கள். இவற்றையெல்லாம் நாம் பிச்சை என்று சொல்லி எம்மிடம் இருப்பதை இலவசமாக வழங்குகிறோம். இவை தவிர கோவில்களுக்கும், நலன்புரி நிலையங்களுக்கும் பற்றுச்சீட்டுக்களை வழங்கி உதவி கேட்டு வருபவர்களைப் பார்த்திருக்கின்றோம். இதிலே பல பக்திமான்களும், பண்புசால் சேவையாளர்களும் இருப்பார்கள். இதற்கென வழங்கப்படும் பொருளோ, பணமோ நன்கொடை என்றே சொல்லப்படும் இவற்றை இலவசமாகப் பெறுபவர்கள் தாம் பெற்றுக்கொண்டவற்றுக்கு அடையாளமாகப் பற்றுச்சீட்டுக்களை வழங்குகிறார்கள். இவ்வாறு இலவசத்தைப் பெறுபவர்கள் சில வேளைகளில் தமது தேவைக்கு மேலாகவும் பயன் பெறக்கூடும்.

இங்கே கொடுப்பவன் பெறுபவனிடமிருந்து எதையும் சிறப்பாக எதிர்பார்ப்பதில்லை. ஏனென்றால் இவை கொடைகள்.

செல்லத்தம்பியர் இதுவரை எண்ணிப் பார்த்தவைகளிலிருந்து வேறு பட்டதாக இருந்த அரசியல்வாதிகளின் கொடைகள், இலவசங்கள் என்ற பெயரால் சுட்டப்படுவது பொருத்தமாகவே அவருக்குத் தெரிந்தது. இவற்றை எவரெல்லாம் பெறுகிறார்கள் என்பதையும், எவருக்கெல்லாம் வழங்கப்படுகின்றன என்பதையும் எண்ணிய போதே செல்லத்தம்பியரின் மனத்தைச் சூழ்ந்து செல் அரித்தது.

✪ ✪ ✪

சைக்கிள், தையல் இயந்திரம், வீட்டுத் தளபாடங்கள், பாத்திரங்கள் பாடசாலை உபகரணங்கள் எனப் பலவற்றையும் படம்பிடித்துக் காட்சிப்படுத்தி வழங்குகிறார்கள். இல்லை என்பவனுக்கும், கிடைப்பதை முறையாகப் பயன்படுத்துபவனுக்கும் கொடுப்பதில் நிறையவே புண்ணியம் உண்டுதான். வர்த்தக நோக்கத்தோடு வழங்கப்படும் இலவசங்களும் உள்ளன. சில அரசியல்வாதிகள் சுயநல நோக்கத்தோடு மக்களிடத்தில் ஆசையை வளர்த்து இலவசமாகப் பணம், பொருள் என்பவற்றைக் கொடுக்கிறார்கள். கொள்கையை மறந்து அதை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று முந்தும் வாக்காளர் தொகையினரோ இன்று அநேகர் இருப்பதாகத் தெரிகிறது. இங்கே மீண்டும் மீண்டும் ஒரு சிலரே இலவசங்களைப் பெறுவதற்கு முந்துவதுவதாகவும் பேசப்படுகின்றது. இந்தக் கொடைகளெல்லாம் வாக்குகளைப் பெறுவதற்காக ஒரு சில அரசியல்வாதிகள் நடத்தும் நாடகம் என்பதை அறிந்தவர்கள் ஒருபோதும் இந்த இலவசங்களுக்கு ஏமாறுவதில்லை என்பதே உண்மை.


ஒரு சமூகத்தின் நன்மையை நோக்கி முன்வைக்கும் கொள்கை மக்கள் அனைவரையும் காக்கும், மேலுயர்த்தும் நோக்கங்களைக் கொண்டதாகும். கொள்கையில் நம்பிக்கையும் மக்கள் ஒற்றுமையில் உறுதியும் கொண்ட அரசியல்வாதிகள் என்றுமே தமது செயற்பாடுகளை இலக்கு நோக்கியே நகர்த்துவார்கள். கொள்கையைக் குலைக்கும் பொய்யான பரப்புரைகளில் ஈடுபட மாட்டார்கள். ஆனால் அவர்களின் இலவசங்கள் கொள்கையைக் குலைக்கும் நோக்கம் கொண்டவையல்ல. அதற்கேற்பவே கொள்கைவழி நிற்கும் மக்கள் அல்லது வாக்காளர்கள் மத்தியில் இந்த இலவசங்களால் ஏமாறுபவர்கள் ஒருபோதும் இருக்கப்போவதில்லை. எனினும் இலவசங்களால் ஏமாறுபவர்கள் சிலர் இந்த வகை இலவசங்களுக்காகத் தங்கள் வாக்குகளை விற்கிறார்கள் என்பதுவும் மறுக்க இயலாத உண்மையாகும். இதையெல்லாம் எண்ணிய செல்லத்தம்பியர் கவலையடைந்தார்.

✪ ✪ ✪

அண்மையில் நடந்த ஆட்சிக் குழறுபடிகள் பலரை இங்கே இனங்காட்டியதைச் செல்லத்தம்பியர் நினைத்துக் கொண்டார். சுயநலமான சிந்தையுடையோர் மக்களின் தனிப்பட்ட நலன்களைப் பேணுவதாகப் பாசாங்கு செய்து பொதுமக்களின் உரிமைகளைக் காப்பதற்கு முழுமையாக உழைப்பதில்லை. இலவசத்தைத் தேடும் ஒவ்வொருவரும் தமது தேவைக்காகவே பலதையும் பத்தையும் பெறுகிறார்கள். ஆனால் ஒருவருக்குத் தேவை எதுவுமில்லாதபோதும் அடுத்தவர் ஒரு பொருளைச் சும்மா தருகிறார் என்ற காரணத்துக்காகக் கைநீள்வதும் இன்று வழக்கமாகிவிட்டது. அந்த வகையைத்தான் சிவபாதத்தார் கருத்தில் கொண்டாரோ, என்னவோ தெரியவில்லை. இலவசமாக வாங்குபவர் யார்? என்பதும் அதை இலவசமாகக் கொடுப்பவர் யார்? என்பதுமே செல்லத்தம்பியரின் மனதில் இப்பொழுது எழுந்துள்ள கேள்விகளாகும். அரசியல்வாதிகள் தவிர்ந்த ஏனையோரிடமிருந்து தனிப்பட்ட நிலையில் மக்கள் இலவசமாக அதிகமாக எதையும் எதிர்பார்ப்பதில்லை. எனினும் மக்களுக்கு மக்கள் கொடுப்பதற்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலரும் முன்வருகிறார்கள். இந்த நிலையில் அரசியல்வாதிகள் செய்யும் சேவைகளும், இலவசங்களும் வாக்குப் பெறும் நோக்கத்துடனேயே வழங்கப்படுவதான எண்ணம் பரவலாகவே மக்கள் மனதிலே உள்ளது. இந்தவகையில் அவர்களின் பக்கத்தில் நியாயங்கள் இருப்பதாகவே பார்க்கலாம் ஆனால், இந்த இலவசக் கொடைகள் யாவும் பயன்படுத்துவோரின் தேவையை நோக்கிப் பங்கிடப்படுவதாகச் சொல்லப்படுவதையும் செல்லத்தம்பியர் அறிந்திருக்கிறார்.

அரசியல்வாதிகளில் சிலர் சிலவேளைகளில் அவை தமது ஆதரவாளர்களுக்கே கொடுக்கப்படும் என்பதான இரகசியங்களோடும் பகிர்ந்து கொள்வதுண்டு. எது எவ்வாறிருப்பினும் இந்த இலவசக் கொடைகளை மக்கள் எத்தகைய மனோநிலையில் தமது வாழ்வுக்கான ஆதாரமாகப் பெற்றுக் கொள்கிறார்கள்? என்பது மிகப்பெரிய கேள்வியாகச் செல்லத்தம்பியரின் மனத்தை உறுத்தியது.

✪ ✪ ✪




தமது தேவையின் அவசியத்தை உணர்ந்தே தமக்குத் தரப்பட்டுள்ளது எனப் பெற்றுக்கொள்வோர் சிலரும், சும்மா கிடைக்கிறது என வாங்கிக் கொள்வோர் சிலரும், தந்துவிட்டார்கள் என்ன செய்வது! அதை விற்றாவது எமது பொழுதுபோக்குத் தேவையைப் பூர்த்தி செய்வோம் எனச் சிலரும் பல நிலைப்பாடுகளுடன் சிந்திப்பதும், செயலாற்றுவதும் யாவரும் அறிந்தவையே. அரசியல்வாதிகள் கொடுக்கும் இந்த இலவசங்கள் அவர்கள் எதிர்பார்க்கும் முழுமையான நோக்கத்தையும் நிறைவு செய்யும் என்பதும் சந்தேகமே!

எனினும் இந்த இலவசங்கள் இந்த மக்களைக் கையேந்தி வாழும், வளரும் இழிந்த நிலைக்கு இட்டுச்செல்கிறது என்பதும் உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஆசையைத் தூண்டாது சோம்பேறிகளாக ஆக்கி விடுகின்றது என்பதுவும் உண்மையே. இந்த இலவசங்கள் பல வேளைகளில் பணத்தையும் பொருளையும் பெறுவதற்கு இலகுவான தந்திரமான வழிகள் உள்ளனவா? என்பதை ஆராய்ந்து சுழியோடவும் பயிற்சியளித்து விடுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகள் மக்களுக்கான சேவைக்குப் பதிலாக மக்களுக்கு வழங்கும் இலவசங்களின் ஊடாகவே தமது வாக்கு வங்கிகளை நிரப்ப முயல்கிறார்கள். அரசியலின் பாதையில் தமது கொள்கை, குறிக்கோள் என்பவற்றின் மூலம் வெற்றி பெறும் வாய்ப்பை இழக்கக்கூடும் எனச் சந்தேகிப்பவர்கள் தமது கொள்கையை அடகு வைத்தேனும் இலவசங்களை வழங்கி ஆசனங்களைக் கைப்பற்றவே துணிகிறார்கள். மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் கொள்கையின்றி ஆசனங்களைத் தக்கவைக்கும் நோக்கத்தைக் கொண்ட அரசியல்வாதிகளிடம் மக்கள் நலன்நோக்கும் கொள்கைகள் இருக்கப்போவதில்லை.

இவ்வாறு வெற்றி பெறும் அரசியல் வாதிகளால் ஆளப்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுமாயின் இங்கே பல துறைகளிலும் ஊழல்கள் உற்பத்தியாவதற்கு வாய்ப்புக்கள் இருக்கவே செய்யும். பொருத்தமற்றதும் தேவையற்றதுமான தனிப்பட்ட கொடுக்கல் - வாங்கல்கள் நிகழ்காலத்தில் பலருக்கும் மகிழ்ச்சியைத் தந்தாலும் எதிர்காலத்தில் குறிப்பிட்ட சமூகத்தினரின் பாரதூரமான துன்பங்களுக்குக் காரணமாகலாம். நிகழ்கால இலவசங்களும் அத்தகையவையே! அரசியல்வாதிகளின் இலவசங்களை நோக்கிய ஆழமான சிந்தனை அவசியமானதாகும். இவ்வாறு பலதையும் சிந்தித்த செல்லத்தம்பியர் எதையுமே வெளியே சொல்லவில்லை.







5

# சுவிஸ் எனும் அழகிய நாடு!

பயணக் கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

பலத்த இசை, சுலோகங்களுடன் கூடிய பாதகைகள், பல்வேறு தோற்றங்களில் முகமூடிகள், வினோத ஆடைகள் அணிந்த மனிதர்கள், வாரி வீசப்படும் சொக்லெட்டுகள், சிறு சிறு பொருள்கள் அவற்றைப் பெறுவதற்க முண்டியடிக்கும் சனநெரிசல், குஷியாகப் பால்பேதமின்றி பியர் அருந்தி மகிழ்பவர்கள், வீதிகளை நிறைக்கும் மின்னும்துகள்கள்அடடாஎதைச்சொல்வதுஎதைவிடுவது? ஆண்டாண்டு தோறும் சுவிஸ் நாட்டில் வந்து போகும் மூன்றுநாள்கள்நீளும்தபசுகாலத்திருவிழா. தலைநகரான பேர்ன், வர்த்தகத் தலைநகரான சூரிச், பாசல் ஆகிய மூன்று நகரங்களும்குறிப்பிடத்தக்க அளவில், பெரிதாக இந்தவிழாவைக் கொண்டாடுகின்றன. மூன்று நகர விழாக்களில், பாசல் நகரின் விழாவிலுள்ள பிரமாண்டம், மற்றைய நகர்களில் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. சுவிஸ் நாட்டின் மிகப் பெரிய களியாட்ட விழாவென்றே பாசல்விழாவைக்குறிப்பிடுகிறார்கள்.மாரிகாலத்துக்கு விடைகொடுத்து, கெட்ட ஆவிகளை விரட்டியடித்து, வசந்தத்தை வரவேற்பதுதான் இந்த 3 நாள் தபசு காலப் பெருவிழா. கிறிஸ்தவர்களின் 40 நாள் தபசு காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, இந்த விழா இடம் பெறுவதுண்டு.

விபூதிப் புதன் இடம்பெற்ற அடுத்த வாரம், ஒரு திங்கள் விடிகாலை ஆரம்பமாகி வியாழன் அதிகாலைமுடிவடையும். 2019ஆம்ஆண்டில்அதாவது அடுத்த ஆண்டு, மார்ச் 11ஆம் திகதி புதன் விடிகாலை 4 மணிக்கு ஆரம்பிக்கும் விழா, 14ஆம் திகதி வியாழனன்று விடிகாலை 4 மணிக்கு முடிவடைகின்றது. இந்தத் திகதிகள் ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும்.

**மின்னும் துகள்களை எதிர்கொள்ளும் விழா**

இந்தவிழாஆரம்பிப்பதற்குமுன்பாகஇந்தக்களியாட்டவிழாவின் வேறுபட்ட உருவங்கள் பொறித்த பதக்கம் பொது மக்களுக்கு விற்பனைக்கு விடப்படும். இது வெள்ளி, தங்க, செப்பு நிறங்களில் மாறுபட்ட விலையில் விற்கப்படும். இந்த இலட்சினை ஆண்டுக்கு ஆண்டு மாறும். முத்திரை சேகரிப்பது போல, இதை ஆர்வமாகச் சேகரிக்கும் நண்பர்கள் பலரைச் சந்தித்துள்ளேன். இதைத் தங்கள் மேலாடையில் குத்திக் கொண்டுசெல்பவர்களைத்தான்பவனிவரும்வாகனங்கள் நன்கு 'கவனிக்கும்'. 'இலவசங்கள்' தாராளமாக அவர்களை நோக்கி வீசப்படும். இதை அணியாதவர்கள் மீது மின்னும் துகள்கள் தாராளமாக தலைமீது வாரிவீசப்படும். இந்த நாள்களில் அனேகமாக எல்லோரது வீடுகளிலும், அலுவலகங்களிலும், உணவகங்களிலும், இந்தத் துகள்கள் பரவலாகச் சிந்திக் கிடப்பதைக் காணமுடியும்.

**மலைபோல குவியும் குப்பைகள்**

சுவிஸ்நாட்டின் மிகப் பெரிய இந்தப் பாசல் விழாவைப் பற்றி விரிவாகச் சொல்வதற்கு முன்பு, மூன்று நாள்களில் சேரும் குப்பைகள்பற்றிஎழுதியேதீரவேண்டும்.திங்கள்விடிகாலை 4 மணிக்கு அலுவலக ரீதியாக ஆரம்பிக்கும் இந்த விழா, வியாழன்விடிகாலை4மணிக்குஅலுவலகரீதியாகநிறைவு பெறுகின்றது. இந்த மூன்று நாள்களும் இங்குள்ள உணவகங்கள் இரவு பகலாகத் திறந்திருக்கும். இரவு பகலாக ஓய்வின்றிப் பியர் அருந்திக் குதூகலிக்கும் ஆண்களையும் பெண்களையும் இங்கே தாராளமாகக் காணலாம். இந்த 3 நாள் காலகட்டத்தில் சுவிஸ் நாட்டில், குறிப்பிட்டுச் சொல்லும் படியாக 'சனப்பெருக்கம்' நிகழ்கின்றது என்ற ஒரு செய்தியை எங்கோ வாசித்த ஞாபகம் வருகின்றது.

(இதில் உண்மையும் இருக்கலாம். பொய்யும் இருக்கலாம். சுவிஸ் நண்பர்களிடம் விசாரித்தபோது இருக்கலாம் என்ற மழுப்பலான பதிலே அவர்களிடமிருந்து வந்தது.) சரி இனிக் குப்பைச் சமாச்சாரத்துக்கு வருவோம். 2017ஆம் ஆண்டில் இந்த விழாக் காலத்தில் மழை தூறியது. இது இந்தக் கழிவுகளை நனைய வைத்து, நிறையை அதிகரிக்க வைத்தது. சுத்திகரிப்புத் தொழிலாளிகளுக்கு இது வேதனை தரும் விவகாரமாக இருக்கும். மூன்று நாள் முடிவில் பொதுவாக 100 தொன்னுக்கு மேற்பட்ட கழிவுகள் நகர வீதிகளில் இருந்து அகற்றப்படுவதுண்டு. 120 வாகனங்களில் 250 பேர் வரையில் ஒரு படையாகச் சுத்திகரிப்புப் பணியில் இறங்கி இருப்பார்கள்.

குறிப்பிட்ட இந்த ஆண்டில் அவர்கள் எப்படித்தான் துப்புரவு செய்தாலும், ஈரத் தன்மையோடு வீதிகளில்இந்தத்துகள்கள்ஒட்டிக்கொண்டுஅகலமறுத்தன. பொலிஸாருக்குப் பெரிய வேலை இருக்கவில்லை. பெரும் சனத்திரள் காரணமாகப் பெற்றோரிடமிருந்து பிரிந்த பிள்ளைகளை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் பணியோடு, பிழையான இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மகிழுந்துகளையும், உந்துருளிகளையும், சரியான இடத்துக்கு அகற்ற வேண்டியிருக்கும்.

**'பெருக்குடி'யினரிடமிருந்து அழைப்பு**


அவசர கால மருத்துவ சேவைப் பிரிவினர், இந்தக் காலத்தில் அவசர அழைப்புகளுக்கு முகம் கொடுப்பார்கள். எல்லாமே 'பெருங்குடி' மக்களிடமிருந்து வந்த அழைப்புகள்தான்...

(தொடரும்)

# தெய்வமே நிலைமை அறிவாயோ?

கவிதை

ஆர்த்திகா சுவேந்திரன்



உயர்தரப் பரீட்சையை
உஷாராய் எழுதிவிட்டு
உரிய பெறுபேறு அதை
உருக்கமாய் எதிர்பார்த்து
உள்ளுக்குள் போராடியபடி
உருண்டிடும் நாள்கள்

எல்லாவற்றையும் சரியாய் ,
எழுதியவன் சிரிப்புடனும்
எதுவும் எழுதாதவன்
எந்தக் கவலை இன்றியும்
இயல்பாய் இருந்துவிட
அரைகுறையாய் எழுதியவனோ
அவலங்களைத் தாங்கியபடி
அழுகிறான் தினம் தினம்

வீட்டைவிட்டு வெளிவர
பண்பாடு தடுத்து விட்டது
பழைய காலமதில்–ஆனால்
வினாக்கள் பலவற்றுக்கு
விடை சொல்ல முடியாமல்
வீட்டுக்குள் பூட்டி வைக்கிறது
விந்தையான இந்நாள்கள்

தெரிந்தும் தெரியாததுபோல
தெரிந்தவர்கள் கணையாய்
தொடுத்திடும் வினாக்கள்
ஈயத்தை உருக்கி எடுத்து
இரு காதுக்குள்ளும் ஊற்றி
இதயத்தைக் குறிவைத்து
ஈட்டி எறிந்தாற்போல
வாட்டி எடுத்துவிடும்

நலம் அறிய வேண்டிய
நன் நேரம் அதில்
நன்றாய்த் தெரிந்தும்
நல்வாய் எழுதினாயா?
நாளை வெளி வருகிறதா
பரீட்சை முடிவுகள்? என்ற
பலரது விசாரிப்புக்கள்
பதைக்க வைத்துவிடும்
பட்டென மனதை
எரிமலையாய் சட்டென
ஏறிவரும் வார்த்தைகள்
தொண்டைக் குழிக்குள்
சிக்கி நின்று விட
சிரிப்புடன் நகரவேண்டிய
சினமான காலங்கள்

பரீட்சை எழுதும் வரை
பட்டபாடு தன்னை
பக்கத்திலே இருந்து
பார்த்தவரோ பக்குவமாய்
வாய்மூடி நிற்க
வெட்டிக்கதை பேச மட்டும்
வெளிவருவதாய்ப் பெறுபேறை
நினைத்துக் கொண்டிருக்கும்
நினைப்புக்கள் பலவற்றின்
நிலைமை தான் எப்போது
நிலை மாறிவிடுமோ?
தெய்வமே! நீ அறிவாயோ?

# தேவ்



## வழக்கமான தொகுப்பு

**கதை**

கார்த்தி, அம்ருதா, விக்னேஷ் காந்த் ஆகிய மூவரும் பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே நண்பர்கள். விக்னேஷ் காந்த் நகைச் சுவையில் தலைசிறந்து விளங்குகிறார். பயணங்கள் மேற்கொள்வதில் கார்த்திக்கு அலாதிப் பிரியம். திட்டமிட்ட இலக்கு என்று எதுவும் இல்லாமல் பயணம் தரும் மகிழ்ச்சியான அனுபவங்களின் மூலம் வாழ்க்கையை அதன் போக்கில் வாழ்கிறார் கார்த்தி. நண்பர்கள் அம்ருதா, விக்னேஷ் காந்துக்கும் அதையே தத்துவார்த்தமாகச் சொல்கிறார். கார்த்தியுடன் இருந்தால் நிம்மதியாக இருக்க முடியாது என்று நினைக்கும் விக்னேஷ் காந்த் அவரைக் காதலில் விழ வைக்க வியூகம் வகுக்கிறார். முகநூல் மூலம் ரகுல் ப்ரீத் சிங் அறிமுகம் ஆகிறார். மிகப்பெரிய நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ரகுல் ப்ரீத் சிங்கின் பின்னணி என்ன, கார்த்தியை ஏன் அவர் கண்டுகொள்ள மறுக்கிறார், அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினை என்ன, ஏன் அந்தக் காதலுக்காகக் கார்த்தி தன்னை வருத்திக்கொள்கிறார், பிரச்சினைகளைத் தாண்டி அவர்கள் இணைந்தார்களா? எனப் பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக் கதை.

**பாத்திரங்கள்**

28 வயது இளைஞனுக்கான தோற்றத்தில் கார்த்தியைப் பொருத்திப் பார்க்க முடியவில்லை. சாகசப் பயண விரும்பியாகத் தன்னை வடிவமைத்துக்கொள்ளும் விதத்தில் கவனம் ஈர்க்கிறார். விதம் விதமான ஆடைகளில் பளிச்சென இருக்கிறார். ஆனால், சொல்லக்கூடிய அளவுக்கு கார்த்தி நடிப்பதற்கான ஒரு காட்சி கூடப் படத்தில் இல்லை. தத்துவார்த்தம் பேசும் கார்த்தியே காதலில் விழுந்த பிறகு சுய சிந்தனையும், தன்னம்பிக்கையும் இல்லாமல் ஒடுங்கிப் போவதும், அதிலிருந்து மீள முடியாமல் தவிப்பதும், அதற்காக விபரீத முடிவுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதும் கதாபாத்திரச் சறுக்கல். ரகுல் ப்ரீத் சிங்குக்கு எது பிரச்சினை, ஏன் பிரச்சினை என்பதெல்லாம் பொதுவாகவே சொல்லப்பட்டுள்ளதால் கதாபாத்திரப் படைப்பில் குழப்பமே மேலோங்குகிறது. அலட்சியம், ஈகோ இதை வைத்தே அவருடைய பாத்திரம் வடிவமைக்கப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. பெயர், பதவி எல்லாம் வலுவாக இருக்கிறதே தவிர, ரகுலின் பாத்திரத்திலும் அவ்வளவு கனமில்லை. அதனால் அவர் நடிப்பிலும் எந்த அழுத்தமும் இல்லை. பிரகாஷ்ராஜ் அந்த மருத்துவமனைக் காட்சியில் மட்டும் தன் இருப்பை நிலைநிறுத்திக் கொள்கிறார். ரம்யா கிருஷ்ணன் பாவம். எதுவும் செய்ய முடியாமல் வந்து போகிறார். அம்ருதா சீனிவாசன் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தில் குறை வைக்கவில்லை. ரேணுகா, பழைய ஜோக் தங்கதுரை, கார்த்திக், நிக்கி கல்ராணி ஆகியோர் ஓரளவுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளனர்.


**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

ஹாரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் படத்துடன் பொருந்தாமல் துருத்தி நிற்கின்றன. வேல்ராஜ் படத்தைத் தூக்கி நிறுத்தியிருக்கிறார். அமெரிக்கா, உக்ரைன், மும்பை, சென்னை என்று கண்டங்கள் தாண்டிய பிரதேசங்களின் அழகைக் கமராவில் அள்ளி வந்திருக்கிறார். ஆண்டனி எல். ரூபன் படத் தொகுப்பில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். பயணம் தொடர்பான காட்சிகள் வசீகரிக்கின்றன.

**பலம் பலவீனம்**

காதலும் காதல் நிமித்தமுமாக ஒரு படத்தைக் கொடுக்க முயற்சித்திருக்கிறார் அறிமுக இயக்குநர் ரஜத் ரவிசங்கர். ஆனால், படத்தின் பேசுபொருள் கதையின் மையத்துக்கு நேர்மையாகவும் உண்மையாகவும் இல்லை. விக்னேஷ் காந்தின் நகைச்சுவையில் தான் படம் தொடங்குகிறது. ஆனால், இடைவேளை தாண்டியும் அந்த நகைச்சுவை என்று கருதப்படும் நீண்ட பேச்சு விடாமல் துரத்துகிறது. சில இடங்களில் சிரிக்க வைக்கும் விக்னேஷ் அதிகப்படியான பேச்சால் சோர்வையும் கடுப்பையும் வரவழைக்கிறார். முதல் பாதியின் சேதாரத்துக்கு விக்னேஷ் காந்த் பாத்திரப் படைப்பே காரணம். படத்தின் சாதகமான அம்சம் இது மட்டுமே. காதல் மலர்வதற்கான தருணங்களை சரியாகச் சொல்லாதது படத்தின் பெருங்குறை. பயணங்களில் லயிக்கும் முதிர்ச்சியான நாயகன் தன்னையே தொலைக்கும் அளவுக்குப் போவது, பொய்யாக உருவாகும் சண்டைகள், தேவையே இல்லாத ஈகோ, அதனால் வரும் பிரிவு, நெடுஞ்சாலையில் குழந்தையைக் காப்பாற்றுவதற்காகவே வலிந்து திணிக்கப்பட்ட சண்டைக் காட்சி எனப் படம் முழுக்கச் செயற்கைத்தனம். கார்த்தி ரகுல் ப்ரீத்சிங் இடையேயான உறவு நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்தவில்லை. அப்பாவிடம் வளர்ந்த பையனுக்கு இருக்கும் சிக்கல்களை சுதந்திரத்தைப் படம் பதிவு செய்யவில்லை. அம்மா வளர்த்தெடுத்த பெண்ணுக்கு இருக்கும் உளவியல் சிக்கலைப் படம் ஓரளவுக்குக் கூடப் பேசவில்லை. மனங்களின் ஊடலையும் கூடலையும்கூட நேர்த்தியாகப் பதிவு செய்யத் தவறியிருக்கிறார் இயக்குநர். ■







# ‘ஒரு அடார் லவ்’

**கதை**

பாடசாலையில் 11ஆம் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ரோஷனுக்கும், நூரின் ஷெரிப்புக்கும் இடையே நட்பு ஏற்படுகிறது. இந்த நிலையில், அதே பாடசாலையில் இணையும்; பிரியா வாரியரை பார்க்கும் ரோஷனுக்கு அவள் மீது காதல் ஏற்டுகிறது. ஒரு கட்டத்தில் இருவருமே காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். ரோஷன், நூரின் ஷெரிப்புடன் தோழமையாகப் பழகுவது பிரியா வாரியருக்குப் பிடிக்காமல் போக, இருவருக்கும் இடையே விரிசல் ஏற்டுகிறது. பிரியா வாரியருடன் மீண்டும் இணைய நினைக்கும் ரோஷன், நூரின் ஷெரிப்புடன் நெருக்கமாக பழகுவதுபோல நடிக்கிறார். ஒரு கட்டத்தில் ரோஷன் நூரின் ஷெரிப் இடையே நெருக்கம் அதிகமாகிக் காதலாகிறது. கடைசியில், ரோஷன் யாருடன் இணைந்தார்? எந்தக் காதல் நிறைவேறியது? என்பதே படத்தின் கதை.



**பாத்திரங்கள்**

காதல் காட்சிகளில் ரோஷன், பிரியா வாரியர் கவர்கின்றனர். இருப்பினும் இரண்டாவது பாதியில், அனைவரையும் கவர்ந்து இரசிகர்களின் கவனத்தைத் தன்வசமாக்குகிறார் நூரின் ஷெரிப். மற்றபடி அனீஷ் ஜி மோகன், தில்ருபா, மிச்செல் அல் டேனியல், ரோஷ்னா அன் ராய் என மற்ற கதாபாத்திரங்களும் படத்தில் நடித்துள்ளார்கள்.

பள்ளிப்பருவத்தில் நடக்கும் காதலை, இளைஞர்கள் இரசிக்கும்படியாகப் படமாக்க முயற்சித்திருக்கிறார் இயக்குநர் ஓமர் லூலு. இளைஞர்கள் தமது பள்ளி, கல்லூரி காலங்களில் யாரிடமும் பகிர முடியாமல் இருக்கும் இரகசியங்கள் பற்றியும் படத்தில் பேசியிருக்கிறார். எனவே இளைஞர்களைக் கவரும் ஒரு படமாக இது இருக்கும்.

**இசை, ஒளிப்பதிவு,**

ஷான் ரஹ்மான் இசையில் 'மாணிக்க மலராய பூவே' என்ற பாடல் வெளியாகி பிரபலமாகியிருந்த நிலையில், படத்திலுள்ள மற்றைய பாடல்களும் கேட்கும்படியாக உள்ளன. சினு சித்தார்த்தின் ஒளிப்பதிவில் காட்சிகள் மெருகூட்டப்பட்டுள்ளன. காதலர் தினத்தை இலக்கு வைத்து வெளியாகியதால் இளயோரைக் கவரும் வகையில் அமைந்துள்ளது படம்.





# ‘53 வோர்ஸ்’

## போரின் வலி உணர்த்தும் படம்

போர்க் களத்தில் நின்று நேரடியாகச் செய்திகளைச் சேகரிப்பவர் பத்திரிகையாளர் விடேக். அவருடைய காதல் மனைவி அன்னா. உள்ளூர் நிலவரங்களைச் சேகரித்து வழங்கும் அன்னாவும் ஒரு பத்திரிகையாளர் தான். மனைவியும் குழந்தைகளும் நிம்மதியாக ஊருக்குள் வசிப்பதால் போர்ப் பூமியில் நிதானமாக இருக்கிறார் விடேக். ஆனால், தன்னுடைய கணவருக்கு எந்தத் தருணத்திலும் இறப்பு நேரிடும் என்ற பயத்தில் கலவரப்பட்டுக் கிடக்கிறாள் அன்னா. ஏதேனும் தொலைபேசி அழைப்புவந்தால்கூட அது விடேக்கின் சாவுச் செய்தியாக இருக்குமோ என்ற பயம் அவளைச் சூழ்கிறது. தனது குழந்தைகளைக்கூடக் கவனிக்க முடியாமல் எந்த நேரமும் போர் குறித்த நிலவரங்களைத் தொலைக்காட்சியில் பார்த்தபடியே கிடக்கிறாள். குழந்தைகளிடமும் அவ்வப்போது வீடு திரும்பும் கணவனிடமும் தன்னுடைய வலியை மறைத்துக்கொள்கிறாள்.

### மனப்பிறழ்வுக்குட்படும் அன்னா

சொல்லொணாத் தனிமை அவளைப் பிடித்தாட்ட நாளடைவில் அன்னா மனப்பிறழ்வுக்கு உட்படுகிறாள். அக்கம்பக்கத்தில் நடக்கும் கட்டுமானப் பணியில் எழும் இரைச்சல் கூடக் குண்டு பொழியும் சத்தம்போல அவளைத் துளைக்கிறது. சின்ன ஒலியைக்கூடச் சகித்துக் கொள்ள முடியாமல் அலறுகிறாள். ஓலமிடுகிறாள். கணவன் உயிரோடு வந்து சேர வேண்டும் என்ற மனநிலையில் இருந்து அவருடைய சாவுச் செய்திக்காகக் காத்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள்.

நிஜத்துக்கும் கற்பனைக்கும் இடையிலான இடைவெளி மயங்குகிறது. கணவர் போர்க் களத்தில் சாவடைந்து விட்டார் என்ற முடிவுக்கு வந்து இறுதிச் சடங்குக்கான ஏற்பாடுகளைச் செய்கிறாள் அன்னா. திடீரென்று விடேக் கண்முன்னே வந்து நிற்கிறார். இனியும் இந்த மனப் போராட்டத்தைத் தாங்கிக்கொள்ள முடியாதவளாகக் கணவனையே கொன்றுவிடுகிறாள். பின்பு அதுவும் அவள் மனம் ஏற்படுத்திய மாயை என்று தெரியவருகிறது.

### போர் பற்றிப் பேசிய விதம்

இப்படிப் போரால் ஏற்படும் மன அழுத்தத்தை, பெண்ணின் தனிமையைத் தீவிரமாகத் திரையில் புனைந்திருக்கும் படம், ‘53 வார்ஸ்’. போலந்து நாட்டின் பெண் எழுத்தாளர் கிரஜினா ஜகல்ஸ்காவின் சுயசரிதையைத் தழுவி எடுக்கப்பட்டிருக்கும் போலந்து நாட்டின் படம் இது. போர் கொடியது. போர் ஏற்படுத்தும் அச்சுறுத்தலும் தாக்கமும். எப்படி எல்லாம் இருக்கும் என்பதை அழுத்தமாகக் காட்சிப்படுத்தி இருக்கிறார் போலந்து நாட்டின் பெண் திரைப்பட இயக்குநர் ஈவா புகோவ்ஸ்கா. பிரபல நடிகையான இவர் இயக்கியிருக்கும் முதல் திரைப்படம் இது.

### காட்சிகளற்ற போர்ச் சித்திரிப்பு

போர் மூண்டிருக்கும் உலகில் தங்களுடைய கணவனும் மகன்களும் பத்திரமாக வீடு திரும்பும் தருணத்துக்காக ஏங்கிக் காத்திருக்கும் பெண்களின் மனத்தைத் திரையில் விரித்துக்காட்டிய படம் இது. போரில் இருந்து மீண்டுவரும் நாழிகைக்கான காத்திருப்பின் வலியைத் திரை முழுவதும் படர வைத்திருக்கிறார் இயக்குநர் ஈவா. அதிலும் போர்க் களத்தைக் காட்டாமலேயே அத்தனை அதிர்வையும் ஏற்படுத்தி இருக்கிறார். செச்னியா, ஆப்கானிஸ்தான், ஜோர்ஜியா, இங்குஷாதினே எனப் போர் மூண்ட தேசங்களின் பெயர்கள் மட்டுமே ஆங்காங்கே சில காட்சிகளில் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ரஷ்யாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள செச்னியாவில் நிகழும் சில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அன்னா பார்க்கும் தொலைக்காட்சிப் பெட்டியில் மங்கலாகத் தோன்றுகின்றன. ஆனால், போர் ஏற்படுத்தும் ரணம் எத்தனை கொடியது என்பதை இந்தப் படம் பார்வையாளர்களின் ஆழ்மனத்தில் ஊடுருவ வைத்திருக்கிறது.



### ஒரே ஒரு பாத்திரம் கதை சொல்லும் விதம்

பேச்சு மொழியால் கடத்த முடியாத நுண்ணிய உணர்வுகளை அன்னாவாக நடித்திருக்கும் மேக்தெல்லெனா பாப்லவ்ஸ்காவின் முகம் நம் மனத்திடம் சொல்கிறது. ஒட்டுமொத்தத் திரைக்கதையின் கனத் தையும் அவர் மட்டுமே சுமக்கிறார்.

மறுபுறம் போரின் பெருமையைப் பேசும் ஆண் மைய உலகையும் படம் மறைமுகமாக விமர்சிக்கிறது படம். ஒவ்வொரு முறையும் தன் மனைவியையும் குழந்தைகளையும் காண வரும்போதுதெல்லாம் விடேக் கர்வத்தோடு போர்க் காட்சிகளை விவரித்துக்கொண்டே இருக்கிறார். அழிவைப் பதிவு செய்யும் போதை அவர் தலைக்கேறுகிறது. இதனால் தன்னுடைய காதல் மனைவியின் அழுகுரல் அவருக்குக் கடைசிவரை கேட்கவே இல்லை என்பதும் மறுபுறத்தில் பதிவாகியுள்ளது.



# ‘கப்டன் மார்வெல்’

கடந்த வருடம் வெளியான ‘அவெஞ் சர்ஸ்: இன்பினிடி வோர்’ படத்தின் இறுதியில் ‘கப்டன் மார்வெல்’ குறித்த எதிர்பார்ப்புகளை விதைத்திருந்தார்கள். அவெஞ்சர்ஸ் வரிசையின் அடுத்த திரைப்படத்துக்கு முன்பாகக் கப்டன் மார்வெல்லின் புகழ்பாடும் முழுநீளத் திரைப்படமாக மார்ச் மாதம் 8ஆம் திகதியன்று வெளியாக உள்ளது ‘கப்டன் மார்வெல்’. கப்டன் மார்வெலாக பிரீ லார்சன் தோன்றுகிறார். சாமுவேல் ஜாக்சன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அன்னா பிரைடன் ரையன் பிளாக் ஆகியோர் இயக்கி உள்ளனர்.

### முதல் பெண் சுப்பர் ஹீரோ

மார்வெல் கலையகத்தின் முதல் பெண் சுப்பர் ஹீரோ என்ற சிறப்பு அடையாளத்துடன் அறிமுகமாகிறார் கப்டன் மார்வெல். படத்தின் கதை 90களில் நடக்கிறது. பூமியைக் களமாகக் கொண்டு இருவேறு வேற்றுக் கிரகக் குழுக்களுக்கு இடையில் மிகப் பெரிய போர் நடக்கிறது. அப்போது போர் விமானியான கரோல் டான்வர்ஸ் என்ற பெண் அவற்றுக்கிடையே சிக்குகிறார். அந்த நேரம், தனது தனிப்பட்ட சுப்பர் ஹீரோ சக்திகளை அவர் அடையாளம் காண்கிறார். அவெஞ்சர் ஹீரோக்களை ஒருங்கிணைக்கும் நிக் ப்யூரி இதில் கப்டன் மார்வெல் உடன் பயணம் செல்கிறார்.

### முன்னோட்டக் காட்சிகள்

முன்னோட்டக் காட்சிகள் வாயிலாகக் கப்டன் மார்வெல் பேசும் அடுக்கு வசனங்கள் இரசிகர்கள் மத்தியில் பிரபலமாகி உள்ளன. மேலும், புதிய சுப்பர் ஹீரோவின் சிறப்புச் சக்திகள், சாகச உத்திகள் குறித்து அறிந்துகொள்ள மார்வெல் கொமிக்ஸ் இரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். சுப்பர் மன் போல வேகமாய்ப் பறப்பது, அயர்ன் மன் போல பிழம்பால் தாக்குவது, கப்டன் அமெரிக்காவைப் போலவே நேருக்கு நேர் நின்று மோதுவது என அவெஞ்சர்ஸ் பரிவாரத்தின் வெற்றிடத்தைப் போக்கும் வகையில் தானைத் தலைவியாகக் கப்டன் மார்வெல் காட்சியளிக்கிறார். ஆனால், வில்லாதி வில்லன் தானோஸை அவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது அடுத்த அவெஞ்சர்ஸ் திரைப்ப டத்தில்தான் தெரியவரும்.

கவிதை

முல்லைக்கிளி வி.பி.சிவேஸ்



விரைந்து சென்று வீண் விபத்தில் சிக்கி
மூச்சை விடுவோரும் முடமாகிப்போவோரும்
இந்தநிலை தனை
கண்ணால் கண்டும் காதால் கேட்டும்
கட்டுக்கடங்காத காளைபோல்
கடிவாளத்துக்குப் போவதென்ன...?

பாதையோரம் பக்குவமாய் பயணிக்கும்
பாதசாரியும் பலியாகும் நிலையாச்சு
முந்திச் செல்ல முற்பட்ட பலர்
முன்னெதிரேவரும் வாகனத்தில் முட்டி
சின்னா பின்னமாய்
சிதைந்து போவதும்
அவயவங்களையிழக்கும் அபாய நிலையும்
வீதி விதிமுறையை விளங்காத சில பேரால்
வீதி விபத்துக்கள் தொடர்கதையானதுவே...!

போதை தலைக்கேறிப் பொதுப்பாதையில் போவதால்
போகுமிடம் புரியாமல்
சாகுமிடம் சாலையாகும்
வீதிச் சமிக்ஞைகளைச் சரியாகப் பேணாத
சாரதிகள் சிலபேரால் பேரவல விபத்துக்கள்
சாலையதில் சல்லாபநடை நடந்து
கைபேசியில் உல்லாசமாய் உரையாட
வீதி என்ன வீட்டு முற்றமா...?

விடலைகளின் விளையாட்டரங்காகும்
வீதிகள் பல அதன் விபரீதங்களும் பல
பருவப்படாத உருவத்தில் சிறியவரும்
உந்துளிகளில் உல்லாச வலம் வேறு...!
பிஞ்சிலே பழுத்த நஞ்சு விதைகளால்
நாசச் செயல்கள் மிக மோசமாச்சு
நல்லின நாற்றுக்கள் நலிவடையும் நிலையிது

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

தொடர்

தாஸ் மாஸ்ரர்

கைதிகள் தமக்கு ஒதுக்கப்பட்ட அலுவகத்தில் ஏதாவது அறிவதாயின், மருந்து எடுப்பதாயின், கடிதம் பெறுவதாயின் முதல் அறைக்கு அருகில் இருக்கின்ற இரும்பு வெளிக்கு அருகில் செல்ல வேண்டும். அங்கு போய் ஜெயிலர் அல்லது பொறுப்பதிகாரியிடம் எங்கள் தேவைகளைச் சொன்னால் அவர் அதற்கான ஒழுங்குகளைச் செய்வார். ஏனைய சிறைச்சாலைகளைவிட இங்கு நிர்வாக ஒழுங்குகள் சிறப்பாக இருந்தன. அதற்கு இன்னோர் காரணம் கைதிகளின் தொகை குறைவாக இருந்தமையாகும். அடுத்து வந்த நாள்களில் எமது பொருள்களை உரிய இடங்களில் கட்டித் தூக்கி (மேலே போடப்பட்டிருந்த பெரிய கம்பி வலை இதற்குப் பெரிதும் உதவியது) எல்லாம் ஒழுங்குபடுத்தியாயிற்று. திடீரென களுத்துறையிலிருந்து மாற்றப்பட்டதால் குடும்பத்தினருடன் தொடர்புகளை வைத்திருப்பது மிகவும் சிரமமாக இருந்தது. கடிதங்களைச் சிறைச்சாலை ஊழியர்களுக்கூடாக அனுப்புகின்ற மார்க்கமும் பூஸாவில் மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால், ஏற்கனவே பூஸாவில் இருந்த கைதிகளுக்கு அவ்வாறான தொடர்புகள் சில இருக்கத்தான் செய்தன. இந்த விடயங்களில் களுத்துறையிலிருந்து புதிதாகப் பூஸாவுக்கு வந்தவர்களுக்கும் ஏற்கனவே அங்கு இருந்தவர்களுக்கும் இடையே சில முரண்பாடுகள் எழுந்தன. புதிதாக அங்கு சென்ற எமது குழுவிலுள்ள பலராலும் சிங்களம் கதைக்க முடிந்ததால் அங்கு ஏற்கனவே இருந்த கைதிகளின் உதவியின்றியே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதுவே இந்த முரண் பாட்டுக்கான முதன்மைக் காரணமாகும். சிங்களம் கதைக்கத் தெரியாத கைதிகள் சிங்களம் கதைக்கக் கூடியவர்களை நாடுவதைப் பெரிய விடயமாகக் கருதுபவர்களாக அங்குள்ள பழைய கைதிகள் இருந்தார்கள்.


✦ ✦ ✦

ஏற்கனவே இருந்த கைதி ஒருவர் கடிதம் அனுப்ப வேண்டும் அல்லது காசு மாற்றுவது அல்லது ஏதாவது பொருள்களைக் களவாக வாங்கிச் சிறைக்குள் எடுப்பது போன்ற விடயங்களுக்குத் தன்னையே நாட வேண்டுமெனவும், கண்டபடி சிறை அதிகாரிகளுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டாமென்று ஒரு பரப்புரையே செய்தார். இதனால் களுத்துறையில் இருந்து பூஸாவுக்குப் போனவர்களில் சிலர் அவருக்கு அடித்து விட்டார்கள். "நீ யாராடா எங்களை நடத்துவது நீ எம்மைப்போல கைதி தானே?" என்பதுதான் அந்த அடியின் அர்த்தம்.

நான் பூஸாவுக்குப் போய் 2 கிழமைகளில் நிலைமைகள் எல்லாம் வழமைக்கு வந்துவிட்டன. நடைமுறைகள் எல்லாம் பழக்கப்பட்டு விட்டன். அங்குள்ள வயதான ஒருவர் கைதிகள் மத்தியிலுள்ள விவரங்களை அதிகாரிகளுக்குச் சொல்கிறார் என்று அறிந்ததும் களுத்துறை கைதிகளில் ஒரு சிலர் அவரைத் தனியாகக் கூட்டிச் சென்று "உன்ர வழக்குகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போகிறாயா? அல்லது இங்குள்ள கழிப்பறையில் தலையில்லாமல் கிடக்கப் போகிறாயா? நீயே முடிவுசெய்' 'என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் அழுது கொண்டு தான் அப்படி இனிமேல் செய்ய மாட்டேன் என்று மன்னிப்புக் கேட்டாராம். அதுபற்றி அதிகாரிகளுக்கு அறிவித்தால் அவரைப் புறம்பாக அடைத்திருப்பார்கள். ஆனால் அவருடைய உயிருக்கு உத்தரவாதமோ, நிம்மதியோ இருந்திருக்காது.

✦ ✦ ✦

பூஸா சிறைச்சாலையில் உள்ளவர்களில் பெரும் பகுதிக் கைதிகள் பதுளை (பதுளை, அம்பாறை நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டவர்கள்) போகம்பறை, அனுராதபுரம், திருகோணமலை, மட்டக்களப்பு, தங்காலை போன்ற சிறைச்சாலைகளுக்கு வழக்குக்காக ஏற்றி இறக்கப்படுபவர்கள். சில நாள்களில் கொழும்பு, அனுராதபுரம், பதுளை வழக்குக்காரர்கள் போய்விட்டால் திடீரெனக் கைதிகளின் தொகை 40 பேர் வரையில் குறைந்து விடும். அவ்வாறு குறையும்போது பூஸாவில் இருக்கும் கைதிகள் ஆறுதல்படும் விடயம் கழிப்பறைக்குப் போகும் போது ஏற்படும் நெருக்கடி கொஞ்சமாவது குறையும்.




சிலவேளை இங்கிருந்து ஏற்றப்படுகின்ற கைதிகளில் ஒருவர் அல்லது இருவர் விடுதலையாகிவிட்டால் புதிதாக ஐந்து தொடக்கம் பத்துப் பேர் வரை உள்ளே வந்து சேர்வார்கள். சில சந்தர்ப்பங்களில் அனுராதபுரம், பதுளை, தங்காலை, கைதிகள் திரும்பவும் பூஸாவுக்கு வரும்போது பஸ் பழுதாகி அல்லது வேறுவகையில் தாமதம் ஏற்பட்டால் இரவு 1 மணியளவில் கூடக் கைதிகள் பூஸாவுக்கு வந்து சேர்வார்கள். ஐந்து பேரை மேலதிகமாகக் கொண்டு வந்தால் கூடச் சத்தம் பெரிதாக இருக்கும். முன்னையசிறைச்சாலையை விடப் பூஸாவில் ஒரு வழக்கம் உண்டு வேறு சிறைகளில் இருந்து வழக்குக்குப் போய்வருவோர் தாமதமாகி வந்தாலும் குளிப்பதற்கு அனுமதிப்பார்கள். குளிக்க விடப்படும் கொஞ்ச நேரத்தில் ஒவ்வொரு கைதியும் தனக்கு அன்று என்ன நடந்தது என்பதை நண்பர்களுக்குச் சொல்லுவார். ஏதாவது சாமான்களை ஏனைய நண்பர்களுக்குக் கொடுப்பதாகவிருந்தால் இவ்வாறானவர்கள் மூலம் பரிமாறிக் கொள்ள முடியும்.

✦✦✦✦


இரவில் சிறைச்சாலை மிகவும் அமைதியாகவே இருக்கும். இரவில் எவராவது சத்தம் போட்டால் கைதிகள் உடனடியாக விழித்துவிடுவார்கள். இதற்குக் காரணம் கடந்த காலத்தில் சிறைச்சாலைகளுக்குள் தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டதன் எதிரொலி தான். இதனால் சிறிய சத்தம் கேட்டால் கூட ஒவ்வோர் அறையிலும் எவராவது ஒருவர் எழுந்து கதவுத் துவாரத்துக்கூடாகப் பார்ப்பதுண்டு. சில கைதிகள் முகம் பார்க்கும் சிறிய கண்ணாடியை (கண்ணாடி வைத்திருக்க அனுமதியில்லை). மெதுவாக கதவின் கீழ்ப்பக்க இடைவெளியால் வெளியே நீட்டிக் கட்டட விறாந்தையில் எவர் வருகிறார் என்பதைப் பார்த்துக் கொள்வார். பூஸாச் சிறைச்சாலையில் கைதிகளின் தொகை ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிகமாக இருக்கும். அதுதான் மலசலகூடம். அது அதிகம் அனைவரையும் பாதிக்கின்ற இட மாகும். பொதுவாகக் காலைக்கடன்களைக் கழிப்பதுபோல மாலைக்கடன் கழிப்பதும் அங்கு ஒரு நடைமுறையாகி விட்டது. சிலவேளைகளில் மாலைக்கடன் கழிக்கவும் நீண்டநேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுவதுண்டு. நீண்ட வரிசையில் காத்திருந்து மலம் கழித்துவிட்டு மீளும்போது ஒரு விடுதலை உணர்வுவரும். இவ்வாறு சின்னச்சின்ன விடயங்களில் கூடத் திருப்தியடையும் நிலைமைக்குக் கைதிகளின் உணர்வுகள் சிறையில் நலினப்படுத்தப்பட்டு விட்டன என்பதுதான் உண்மை...

(தொடரும்)

# கைகெட்டியது...!

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்



மகாலிங்கம் மாஸ்ரர் வீட்டில திருமண விழா களை கட்டியிருந்தது. அவரின் ஒரேயொரு செல்லமகள் அமுதாவுக்கும் அடுத்த வீட்டு அம்பிகைபாகன் கிளாக்கர் மகன் சயந்தனுக்கும் பெருமெடுப்பில் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் சயந்தனும் அமுதாவும் திருட்டுத்தனமாகப் பேசிப் பழகிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியிருந்தனர். இதையறிந்த மகாலிங்கம் மாஸ்ரரும் அம்பிகைபாகனும் ஒருத்தரை ஒருத்தர் பேசி மோதலாகிக் கண்ணீர் வடித்து இறுதியில் இருவருமே சமரசமாகி மோதல் தவிர்த்து சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். முறைப்படி திருமணம் பேசி ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் நிலையில், இன்று திருமணம் வெகுவிமரிசையாக நடக்கின்றது.

◉ ◉ ◉

மகாலிங்கம் மாஸ்ரர் ஒரு பழமை விரும்பி. மண்டபத்தில் திருமணம் நடத்துவதைவிட, சொந்த வீட்டிலேயே அதை நடத்தி மகிழ வேண்டுமெனும் அவரின் விருப்பத்துக்கிணாங்க மணமகள் வீட்டிலே கோலாகலமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது திருமண விழா. அந்த விழாவுக்கு அடியேனுக்கும் அழைப்பிதழ் கிடைத்துவிட்டதில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. பெரிய இடத்துக் கொண்டாட்டம். போனால் வாய்க்கு ருசியாகப் பலதையும் பத்தையும் மூக்குமுட்ட ஒரு பிடி பிடிக்கலாம். ஆசைகளை வளர்த்துக் கொண்டு உள்ளே நுழைந்து கொண்டேன். பல நூற்றுக்கணக்கில் விருந்தாளிகள் கதிரைகளில் சாவகாசமாக அமர்ந்திருந்தனர். ஆங்காங்கே சில வெற்றுக் கதிரைகள் காணப்பட்டாலும் அதிலே போய்க் குந்துவதற்கு எனது மனம் விரும்பவில்லை. நடுவில் போய் அகப்பட்டால் அவ்வப்போது பரிமாறப்படும் குளிர்பானங்களோ, சிறுண்டிப் பல



காரங்களோ கிடைக்காமல் விடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். கரையில் அமர்ந்திருப்பவர்களுக்கு மட்டும் அதை இதைக் கொடுத்துவிட்டு மத்தியிலிருப்பவர்களை 'அம்போ' என்று விட்டு விடுவார்கள். அனுபவம் உள்ளே கிடந்து பேசியது. ஆகவே ஏதாவது ஒரு கரையில் போய் அமரலாமென்றால்... அவ்வாறு ஓர் ஆசனமும் வெறுமையாக இருக்கவில்லை. பெண்களின் வரிசையில் போய் மெல்லக் குந்திவிட மனம் விளைந்தாலும் அதுவும் நாகரிகமாகப் படவில்லை. நல்ல வேளை! சங்கரப்பிள்ளை வாத்தியார் தனது கரையோரக் கதிரையை விட்டெழுந்துவிட்டார். சங்கீத நாற்காலிப் போட்டியில் கலந்துகொள்ளும் ஒரு போட்டியாளனாக ஓடிப்போய் அந்த ஆசனத்தைக் கைப்பற்றிக்கொண்டேன்.

◉ ◉ ◉

மாப்பிள்ளை மணமேடையில் மணமகளின் வரவை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தார். எங்காவது பலகாரம், குளிர்பானம் ஏதாவது கொண்டு வருகின்றார்களா? என நான் ஏங்கிக் கொண்டிருந்தேன். அதோ! ஒரு சிறுமி தட்டு நிறையக் குளிர்பானத்துடன் வந்து கொண்டிருந்தாள். வாயைச் சப்புக் கொட்டியபடி அவளின் வரவை எதிர்பார்க்க அவளோ என்னுடைய வரிசையைக் கடந்து பின்புறப் பகுதிக்கு வேகமாகச் சென்றாள். பரவாயில்லை மற்றுமொரு மனிதர் முன்பகுதியில் குளிர்பானத்தைப் பரிமாறிக் கொண்டிருந்தார். ஐயோ கடவுளே! என்னுடைய முறையும் வர அவர் பரிமாறிக் கொண்டிருந்த குளிர்பானமும் தீர்ந்துவிட்டது. மிகுந்த ஏமாற்றத்துடன் அக்கம் பக்கம் பார்த்தேன். மீண்டுமொரு சிறுவனின் கையில் குளிர்பானத் தட்டுடன்... அடக்கடவுளே! அத்தனையும் வெற்றுக் கோப்பைகள். கோபமும் அவமானமும் சேர்ந்து என்னை வதைத்தெடுத்தன. மகாலிங்கம் மாஸ்ரருக்கு நாலு திட்டுக்கள் கொடுத்தேன். மனதுக்குள்தான்.

◉ ◉ ◉

மணமகள் மணமேடைக்கு வந்து தாலி கட்டும் முடிந்துவிட்டது. இந்தப் பாழாய்ப் போன குளிர்பானத்தைப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்ததில் தாலி கட்டைக் கூடப் பார்த்து இரசிக்க முடியாமல் போய்விட்டது.

அங்கே ஒரு புறத்தில் ஒரு கூடை நிறைய ஏதோ தின்பண்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஓ! லட்டு. அதுவும் பூந்திலட்டு. சாப்பிட்டால் சுவையாகத்தானிருக்கும். நாவில் நீரூறியது. அந்த மனிதர் இப்போது என்னை நெருங்கிவிட்டார். அப்படியொன்றும் இடிபாடுகள், முண்டியடிப்புக்களில்லாது பூந்திலட்டு என் கைகளில் கிடைத்துவிட்டது. வேண்டுமானால் இரண்டைத் தூக்கியிருக்கலாம். மரியாதையில்லை. வேண்டாம். ஒன்றேபோதும். வாங்கியவர்களனைவரும் பூந்திலட்டின் உறையை இலாவகமாகப் பிரித்தெடுத்து லட்டைச் சுவைக்கத் தொடங்கினர். என்னுடைய லட்டின் உறையை மட்டும் பிரிக்க முடியாமலிருந்தது. அதன் கழுத்தைச் சுற்றிப் பலமாக வரிந்து கட்டப்பட்டிருந்த அந்த முடிச்சை அவிழ்க்கவே முடியவில்லை. வாயில் நீரூற அதையாவது சுவைத்துவிடலாமென்று பார்த்தால் எங்கே! கட்டு அவிழ்ந்தால் தானே! பாழய்ப் போனவர்கள் எனக்கென்று தான் அப்படியொரு படு முடிச்சுப் போட்டுக் கட்டியிருப்பார்களோ! தெரிந்த வித்தைகளை யெல்லாம் விதம் விதமாய்க் கையாண்டு அப்பாடா ஒருவாறு லட்டின் உறை கழன்றுவிட்டது என்னவோ உண்மைதான். ஆனால் முடிவில் லட்டுத் தவறித் தரையில் விழுந்துருள என் கைக்கு மிஞ்சியது வெறும் உறை மட்டுமே. மிகுந்த ஏக்கத்துடன் தரையில் வீழ்ந்துருண்ட லட்டை நான் பார்க்க, பக்கத்தில் அமர்ந்தவர்கள் என்னைக் கேலியாகவும் பரிதாபமாகவும் பார்க்க சே! எல்லாம் வெறுத்துவிட்டது.

யாரடா அது செம்பும் கையுமாக! ஓகோ சாப்பாட்டுப் பந்திக்கு அழைக்கிறார்கள் போலும். போனதெல்லாம் போகட்டும். கடவுளே! அந்தப் பிரியாணிச் சோற்றையாவது ஒரு பொல்லாப்புமில்லாமல் வயிறு நிறையச் சாப்பிட்டு விட வேண்டும். கொடுக்கவிருக்கும் அன்பளிப்புக்கு நஷ்டமில்லாது அதையென்றாலும் சாப்பிட வேண்டும். அங்கலாய்ப்புடன் எழுந்து ஓடிமுண்டியடித்து ஒருவாறு சாப்பாட்டு வரிசைக்குள் இணைந்து கொண்டேன். எத்தனை சாப்பாட்டுப் பிரியர்கள் என்னைப் போலவே நெரிசலில் அகப்பட்டுப் புதுப்படத்துக்கு முதல் நாள் ரிக்கெற் எடுக்கும் இரசிகர்களைப்போல இடிபட்டு நெரிபட்டு ஒருவாறு சாப்பாட்டுமேசையை நெருங்கிவிட்டேன். அடடா! எத்தனை விதமான கறிகள்! பப்படம், மிளகாய், வாழைக்காய் பொரியல், அட! எனக்கு மிகப் பிடித்தமான கடலைப் பிரட்டல். ஒரு 'பைக்கோமெஷின்' ஆக எனது வலது கை பிரியாணியை அள்ளித் தட்டில் குவித்துக் கறி வகைகளையும் அதே பாணியில் குவிக்கத் தொடங்க ஐயோ வாயை அடக்க முடியவில்லை. எனது உமிழ் நீர்ச் சுரப்பிகள் எனது கட்டுப்பாட்டையும் மீறித் தமது கடமையை அவசரமாகச் செய்ய எனது வாயிலிருந்து 'பொட் பொற்' இரண்டோ, மூன்றோ வீணித் துளிகள் அந்தக் கறிச் சட்டிக்குள் வீழ்ந்து தொலைத்தன. நல்லவேளை எவர் கண்களிலும் இந்தக் காட்சி படவில்லை. ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பி மண்கும்பான் மணற்குவியலாகக் குவிக்கப்பட்டிருந்த சோற்றுத் தட்டுடன் மிகக் கவனமாக... மிக மிகக் கவனமாக... மேசையொன்றில் கொண்டு போய் வைத்துவிட்டேன். மீண்டும் உமிழ் நீர்ச் சுரப்பிகள் குத்தாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. இனியென்ன அள்ளி வாய்க்குள் அடைய வேண்டியதுதான். அந்த நேரம் பார்த்து எனக்கு முன்னால் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த தடியன் தங்கவேலுவுக்கு அடக்க முடியாத தும்மல் வர அவன் 'அ...ச்..செ...' என்று மோசையில் பெருமெடுப்பில் தும்மித் தொலைக்க என்னுடைய தட்டின் பிரியாணி அத்தனையும் நாசமாகிவிட்டது. படு பாவிப்பயல் பார்த்திருந்து என்னுடைய சோற்றில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டான். இல்லையில்லை எச்சிலை விசிறித் தள்ளிவிட்டான். கடவுளே இத்தனை நேரமாகக் காத்திருந்தும் ஒரு துளி பச்சைத் தண்ணீர் கூடக் கிடைக்காத நிலையில் இதையாவது சாப்பிட்டுத் தொலையலாமென்றால் நம்பி வந்த காரியம் நாசமாகிவிட்டது. சோற்றுத் தட்டை அப்படியே விட்டு விட்டு மெல்ல எழுந்தேன். நேரம் செல்லச் செல்லப் பசி அதிகமாகியது. இன்றைக்கு எப்படியும் இதுபோன்ற பிரியாணி சாப்பிட்டேயாக வேண்டும். மனம் கச்சை கட்டிக் கொண்டு எழுந்து நின்றது. ரவுணுக்குப் போனால் இலட்சுமி விலாசில் பிரியாணி சாப்பிடலாம்தான். ஆனால் அதற்குப் பணம்! திருமண விழாவுக்குக் கொடுக்க வைத்திருந்த ஐந்நூறு ரூபா அடங்கிய கடித உறையைத் தட்டிப் பார்த்த படி உணவகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். "கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை" ஏமாந்து போயிருந்த எனது வாய் தன் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டது.

■

அங்கே ஒரு புறத்தில் ஒரு கூடை நிறைய ஏதோ தின்பண்டங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஓ! லட்டு. அதுவும் பூந்திலட்டு. சாப்பிட்டால் சுவையாகத்தானி ருக்கும். நாவில் நீரூறியது. அந்த மனிதர் இப்போது என்னை நெருங்கிவிட்டார். அப்படியொன்றும் இடிபாடுகள், முண்டியடிப்புக்களில்லாது பூந்திலட்டு என் கைகளில் கிடைத்துவிட்டது

# மௌனம் பரவிய இருள்

மௌனம் பரவிய இருளின் இருப்பை
தொலைபேசியழைப்பு மணி
இடையறுத்துக் கலைத்தது

முந்திய சிந்தையில் சிந்திய
சிதறல்கள் பறந்துபரவிடும்
காற்று வெளியினில்

பிந்திய பிறழ்வினில் தங்கிய
தரவுகள் விரல்களின் விரசத்தில்
தகர்ந்திடும் தடுமாறி

வயதினில் வந்த சறுக்கலின்
வடுக்கள் வயதாகும்வரை வலுவாகப்
வருமேபின் தொடர்ந்து

கந்தையாகிப் போன கதைகள்
இன்று விந்தையாகிப் பல
விளக்கம் கேட்கும்

நொந்துபோன நொடிகள் யாவும்
இன்று ஆழ்ந்தவோர் அனுபவத்தின்
பரந்தவொரு பாடமாகும்

கவிதை

கந்தர்மடம் அ.அஜந்தன்





# அதியுயர் காண்டத்து மேடைகள்

மேடை - 19

தையிட்டி அ.இராசதுரை

இண்டைக்கிக் காலமை பத்துமணிக்குத்தான் ஐ.சி.ஆர்.சிக் கப்பல் கே.கே.எஸ். காபறிலையிருந்து உங்காலை போறதுக்குப் பதிஞ்ச ஆக்களோடை புறப்படப்போற ரேர்ன்... வலு வேளை, காலையோடையே... வீட்டை வந்த ஐ.சி.ஆர்.சி. வாகனத்திலே, உங்காலை போறதுக்குக் கழுத்தையுளத்திற கரடியார் பமிலியிட்டை ஒருக்காய்ப் போய்... சரியா 9 மணிக்கு, வாகனம் வரும் எண்டு அறிவிச்சுப்போட்டு வருவமெண்ட ஐடியாவிலை போய்க் கூப்பிட்டாலெங்கை... எந்த மூச்சுப் பேச்சுச் சத்தம் சந்தாடியுமில்லை...!

அந்த ஐ.சி.ஆர்.சி வெள்ளைக்காற லேடியும்,"ஹலோ... ஹலோ... கந்தையா! மிஸ்ரர் கந்தையா பிளீஸ்! கம் அவுட்... கம் அவுட்" என்றெல்லாம் சத்தம் போட்ட இடத்திலும், நத்திங்... நத்திங்...,ஜே.பி சேர் இந்த ஐ.சி.ஆர்.சி சிப் அயிட்டத்தை, கட் பண்ணுற ஐடியாவிலை, இந்த இவங்கள் ரெண்டு பேரும் ஆமியடிச்ச வீடுகளுக்க போய்... ஒளிச்சு இப்படியாந்த வாகனத்தின் சாரதியான... அந்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பையன் எனக்குச் சொன்னதும் தமிழ் விளங்காத அந்தக் ஹொலண்ட் லேடி என்னை அண்ணாந்து பார்த்தா, நான் இங்கிலீசிலை அதை அவாவுக்கு ட்றான்சிலேற் பண்ணிவிட, "நோ நோ... தே கான்ற் ரூ இற்... தே கான்ற் ரூ இற்..." அந்த லேடியின்ரை பேஸ் அந்த நேரம் என்ன பாடு பட்டுது...

⊙ ⊙ ⊙ ⊙

"வேய்ற் வேய்ற்..." எண்டு அந்த லேடி சொன்ன வீச்சாக வீட்டுக்கை போறதுக்காகக் கதவைப்போய்த் தள்ளினது தான் தாமதம் பூட்டாமலுக்குச் சும்மா சாத்திக் கிடந்த கதவு, ஓப்பின் பண்ணி விட்டுது... சடின்லியாக அந்த ஐ.சி.ஆர்.சி. வுமன் அறைக்குள்ள போன கையோடை, ஏதோ பேய் பீசாசைக் கண்டுவிட்ட மாதிரி ஷேயுட் பண்ணத் தொடங்கினாள்

"ஹறியப் ஹறியப் சம்திங் ஹப்பினிட் ஹப்பினிட்?" அந்த அரியாலை டிரைவர் போயைப் பார்த்தா ஒரே அப்செற் மூட்டிலை பங்சன் பண்ண முடியாமலுக்கு நிண்ட இடத்திலையே நிண்டுகொண்டிருந்தான். ஒண்டுக்கும் கைகால் ஏலாத முறையா நானும் அந்த ரூமுக்குள்ளை ஓடிப்போனன்...

ஜே.பி. சகல விவரங்களையும் அடி நிண்டு நுணி போக, தறோவாய்ச் சொல்லி முடித்துவிட்டு எல்லாத்துக்கும் ஐ.சி. ஆர்.சிப்பின்ரை அலுவலைக் கிளியர் பண்ணி முடிச்சுக் கொண்டு ஓடிவாறனென்ற ஆத்துப் பறதியோடு வாகனத்தில் பறக்கின்றார்.

⊙ ⊙ ⊙ ⊙

ஜே.பி. சொல்லிவிட்ட கரடியார் வீட்டுக் கிளைமாக்ஸோடு நல்லாகக் கெடிக் கலங்கிக், கெலித்துப் போன குருக்களையாவும், குருக்களம்மாவும், அர்ச்சுணாவும் எதுவுமே கதைத்துக் கொள்ள முடியாத, அற்றாய்க்கில் முகபாவனையால், சில விநாடிகளுக்குக் கதைத்தும் கொண்டார்கள்... இந்த மூவருக்கும் அருளிச் செய்வது போல் அந்தப் பிரணவப் பொருள் பிள்ளையார் பிள்ளையார்பெருமைவாய்ந்தபிள்ளையாராய்... மூலஸ்தானத்தில் அருளொளி பரப்பிக் கொண்டிருந்தார். இந்த நாட்டுப் பிரச்சினையைவிட பன்மடங்கான மலேசியா - கோலாலம்பூரில் இருக்கும் ஆசை மகள் பிரணவியின் தகப்பனையும், தாயையும் அங்காலுக்கிழுத்துப்போடும், பிரச்சினைக்கு ஈடுகொடுத்துக்கொள்ள முடியாமல், தேவாரத்தார் நித்திரையால் எழும்பி, நித்திரைக்குப் போகிறவரைக்கும்... மண்டையைப் போட்டுடைக்கும் இந்த நெருக்கடி வாய்ந்த சந்தர்ப்பம் பார்த்துத் தானிந்த, கரடியாரும் மண்டையைப்போட்டு விட்டாரோ... இந்தக் கரடியாரின் அட்டாதுட்டித் தனங்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டாமலுக்கு, எப்படியும் இந்தக் கரடியாரை வைபோசாய் என்றாலும் விடாது பிடித்து டிபென்சுக்கு அப்பால் கிளியர் பண்ணி விடும்படியாக இந்தக் குருக்களையா ஜே.பிக்குத் துருக் கொடுத்த கடனுக்கு இன்றைக்கு இதே குருக்களின் மலேசியாவிலிருக்கும் ஒரே மகள் பிரணவி தனது தாயையும் தகப்பனையும் எப்படியும், என்ன விதப்பட்டும் அங்காலுக்கு இழுத்துப்போடுற ஐடியாவிலை... அர்ச்சுணா மூலமாக ஜே.பியின் தொலைபேசி இலக்கத்தைச் சத்தப்படாமலுக்கு வாங்கியெடுத்து வைத்துக்கொண்டு, இதே ஜே.பிக்கு அடிக்கடி அம்மியும் நகரும், பாணியில் கீ கொடுத்துக் கொண்டேயிருக்கும், பாச நெருக்குதலின் அகோர வேகமும்... இந்த மூவருமாய் ஜே.பி. வந்துபோன ஐயிற்றத்தைப் பற்றித்தான் அலசத் தொடங்க... வாகனம் வந்துபோன அசுகைக்கு ஒருக்கா என்னவென்று பார்ப்போமென்ற துணிவில் வீட்டை இலேசுவில் விட்டு வெளிக்கிடாத மாதவியும் இப்ப முந்தின மாதிரி எந்த அவுட்டோர்க் கிலேசங்களும் இல்லைத்தானே என்ற துணிவில், பிள்ளையார் வாசலில் வந்து குந்தி, கரடியார் பமிலிக் கதையைக் கொத்துப் பிடித்தளந்து கொட்டத் தொடங்கியும் விடுகின்றாள்...!

⊙ ⊙ ⊙ ⊙

திடீரென்று இருவர் காட்சியாய்க் கிழக்குத்திசையிலிருந்து... கருட பகவானின் தரிசன வருகை, அந்தக் கையோடு கதை, காரியங்களும் ஸ்ரொப்ஆகிவிடுகின்றன. கோவிலைச் சுற்றிச் சுற்றி ஆவே சமாகவும், அழகாகவும் இரண்டு மூண்டு தரமாய் றவுண்டடித்துக் கோவிலை வலம் வந்து கொண்ட... பகவான்கள் இருவருமாய் கிழக்கு வீதிப் பனங்கூடலின் ஓர் ஆண் பனையிலும், ஒரு பெண் பனையிலுமாக இடம்பிடித்துக் கொண்டார்கள்...!

திடீரட்டியனவாய்... அந்த ரெண்டு பகவான்களும், இருப்புக் கொண்டு விட்ட அந்த ரெண்டு பனைகளையும் இலக்கு வைத்துக் காகக் கூட்டங்கள்... மெய்த்துக் கத்திச் சத்தம் வைத்து மிகப்பெரியதாகக் கலவரப்பட்டு, ஏலம் வலிக்கத் தொடங்கிவிட்டதும், அந்தக் கருடர்களிருவரும் மீண்டும்; கோவிலுக்கு மேலால் வட்டமடித்துப் பறக்கத் தொடங்கி, உயர உயரவாய்... எழுப்பம் கண்டும்விட... அம்மட்டுக் காகக் கூட்டங்களும் கலைவுகாணத் தொடங்கி, திக்காலுக்குத் திக்காலாய்... சிந்துண்டு, சிதறுண்டு போய்... கண நேரப் பொழுதுக்குள் மாயத் தோற்றங்களாகிப் போயும் விடுகின்றன.

⊙ ⊙ ⊙ ⊙

இன்றைக்கென்ற இந்தக் கோவிலுக்குப் பின்புறமாயுள்ள விக்னேஸ்வர வீதியாய்... இராணுவ வாகன ஓட்டங்களுக்குக் குறைச்சலில்லையென்று, அர்ச்சுணா விடியக் காலத்தாலை, ஐ.சி.ஆர்.சி வாகனத்தில் வந்து ஜே.பி. கதைத்துவிட்டுப்போன, கரடியார் வீட்டு ஐயிட்டத்தோடு தொடர்புபடுத்திக் கதைக்க வெளிக்கிட்ட நேரம் பார்த்து, கவச வாகனமொன்று, பைலாப் பாட்டோடு, வடக்கு வீதியால் வந்து, கிழக்கு வீதியில் வந்து மிதந்து, கோவில் வாசலில் அற்றென்சனில் தரித்தும் விடுகிறது.

"ஓ யெஸ். இண்டைக்கு ஐப்பசி 10. இவங்களின்ரை ஆமி தினம். அதுதான் இவ்வளவு பன்பல்" என்றெல்லாம். கருக்களையா சொல்லி முடித்தபோது, கவச வாகனத்துக்கு மேலே இருந்த ஆமிக்காரன் ஒருவன், ஆமி பாக்கோடு குதித்து,"இறங்கி ஆளுக்கு இவ்விரண்டு, சோற்றுப் பார்சல்களைப் பணிவன்புடன் கையளித்துவிட்ட... கைவாங்க முன்னராய்... ஏதோ ஒரு முக்கியத்துவத்தையும் சொல்லி விட எண்ணி வந்தவனாய் வாய் திறக்கின்றான்.

"நீங்க நீங்க... தம்பி, தங்கச்சி தெக்கம ஆள் சரியா செத்திபோச்சு" தங்களுடைய மகத்தான ஆமி தினக் கொண்டாட்டத்தோடு, கரடியார் பமிலியின் டேத் டே திண்டாட்டத்தையும் மிக்ஸ் பண்ணி அவன் பேசிய பெரும் தமிழின் விதத்தையும், நினைத்துக் குருக்களம்மாவும், மாதவியும், சிரித்து விழவும் பார்த்து... அவனும்தான் சிரித்து விழவும் பார்த்து... தாங்கள் பன்பலாய்க் கொடுத்தும்விட்டந்த ஆமிப் பார்சல்களின் ஆமிக் கனதியை, நினைத்தும் விட்ட புளுகத் தெறிப்பிலேதான். கவசம் சத்தம் போடத் தொடங்கியும் விடுகின்றது. இந்த மாதவியின் ரைற்றான உருவ அமைப்பு அவன் கண்ணுக்கையும், நெஞ்சுக்கையும், ஒரு யதார்த்தமாய்க் குந்தித் தள்ளிக் குழப்படி செய்ய...

(தொடரும்)

"வேதவியாசர் யார் தெரியுமோ" எனக் கேட்டார்.
"வேதா எண்டு வருவதால் அவர் ஒரு கிறிஸ்தவராக இருக்கலாம்" என்றான் கிரிசாந்.
"இல்லையடா தம்பி அவர் தான் வேதங்களை நான்காகப் பிரித்தவர்"
"எதாலை சேர் பிரிச்சவர்?" கபிலன் என்ற மாணவன் கேட்டான். "பிரிச்சது எண்டால் வெட்டிப் பிரிச்சது இல்லைத் தம்பி வேதங்களில் பொதிந்துள்ள பொருள்களுக்கு ஏற்ப அதை நான்காக வகைப்படுத்தியது என்று அர்த்தம்."

# போதுமப்பா இந்த வாத்தி வேலை

சிறுகதை

மாகியப்பிட்டி ஆனந்தன்

பாடசாலை ஆரம்பமாவதற்கான மணி ஒலித்து ஓய்ந்தது. அந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்திருந்த தங்கவேல் மாஸ்ரர் முதன்முதலாகத் தரம் பதினொன்று வகுப்பு மாணவர்களுக்குச் சைவநெறிப் பாடத்தைப் போதிப்பதற்காக வகுப்பறைக்குள் நுழைந்தார்.

அந்தப் பாடசலையிலே அந்த வகுப்பு மாணவர்கள் தான் குழப்படிக்கும் குறும்புத்தனத்துக்கும் பெயர் போனவர்கள். அதுமட்டுமல்ல எந்த ஆசிரியரிடமும் ஏடா கூடமாகக் கேள்விகேட்டுத் திக்குமுக்காடச் செய்து, விழிபிதுங்கச் செய்வதில் வல்லவர்கள். இதனால் ஆசிரியர் எவராகினும் அந்த வகுப்புக்குள் நுழையும்போது சற்று அச்சத்துடனும், தயக்கத்துடனும், எச்சரிக்கையுடனும் நுழைவது வழக்கம். இதைப்பற்றி எதுவுமே தங்கவேல் மாஸ்ரருக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் வகுப்பறைக்குள் நுழைந்தார்.

✦ ✦ ✦



வெள்ளை வேட்டி நஷனல் சட்டையுடன் சற்றுக் குள்ளமாகவும் ஒல்லியாகவும் காட்சியளித்தார் அவர். தமக்குப் புதிதாகப் பாடம் படிப்பிக்க வந்த ஆசிரியரை வினோதமாகப் பார்த்தபடி மாணவர்கள் எல்லேரும் எழுந்து நின்று "குட் மோர்னிங் சேர்" என்றார்கள். "குட்மோர்னிங் பிள்ளைகளே உட்காருங்கள்" என்றார் தங்கவேல் மாஸ்ரர் மிகுந்த உற்சாகத்துடனும் சந்தோசத்தோடும்.

"நான் என்ன பாடம் படிப்பிக்க வந்திருக்கிறேன் என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும் தானே பிள்ளைகளே?" என்று தங்கவேல் மாஸ்ரர் கேட்டார். "ஓம் சேர் தெரியும். சைவநெறி போதிக்க வந்திருக்கிறீர்கள்" என்றார்கள் எல்லா மாணவர்களும் ஏககாலத்தில். சைவநெறிப் பாடத்தை அதன் ஆரம்பத்திலிருந் தொடக்க நினைத்த தங்கவேல் மாஸ்ரர், "நல்லது மாணவர்களே! உலகத்தில் பல சமயங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் யாரல் எப்போது தோற்றுவிக்கப்பட்டன என்பதைக் கூறிவிடலாம். உதாரணத்துக்குப் புத்த சமயம் கௌதம புத்தாரலும், கிறிஸ்தவ சமயம் இயேசுக் கிறிஸ்து நாதராலும் இஸ்லாமிய மதம் முகம்மது நபியாலும் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால், இந்து சமயம் யாரால்? எப்போது? தொடங்கப்பட்டது என்று எவராலும் கூற முடியாது. அத்தகைய அநாதியானது அது" என்றார்.

"ஏன் சேர்! அனாதையானது என்று செல்லுறியள்? எத்தனையோ கோடிப் பேர் இந்து சமயத்தைப் பின்பற்றி இருக்கிறார்கள் தானே?" எனக்கேட்டான் தனுசன் என்ற மாணவன். "அனாதையில்லையடா தம்பி அநாதி. அநாதி என்றால் மிகவும் பழமையானது என்று பொருள்" என்ற தங்கவேல் தங்கவேல் மாஸ்டரோ, "நாம் கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்று தெரியுமோ?" எனக் கேட்டார். "நடந்துதான்" என்றான் அருள் என்ற மாணவன். "அதைக் கேட்கவில்லையடா?" என்றார் வாத்தி.

"நீங்களே சொல்லுங்கோ சேர்" என்றார்கள் மாணவர்கள். "நல்லது சொல்லுறன் கேளுங்கோ. நாம் கோயிலுக்குப் போகும் முன் குளித்துத் தோய்ந்து உலர்ந்த ஆடையுடுத்து மிகவும் ஆசாரமாகப்போக வேண்டும்."

"ஆம்பிளையளை விடுங்கோ சேர் பொம்பிளையள் கோயிலுக்குப் போகேக்கை பளபளக்கிற பட்டுச் சேலையைக் கட்டிக்கொண்டு போகினம். அவை பட்டுச்சேலையைத் தோய்ச்சதை நான் ஒரு நாளும் காணேல்லை" என்றான் நிர்மலன் என்ற மாணவன். தங்கவேல் மாஸ்ரருக்கும் அது தெரியும். அதைப்பற்றிக் கூறப்போய் பெண்களின் பகையைச் சம்பாதிக்க விரும்பாமல் அந்தக் கேள்விக்குப் பதில் கூறாமல், "நாம் கோயிலுக்குப் போகும் போதே சிரசின் மேல் இரண்டு கரங்களையும் கூப்பித் தொழுதல் வேண்டும். கோபுரமானது தூலலிங்கம் எனப்படும்" என்றார். கோபுரமில்லாத கோயிலெண்டால்...?" கேட்டான் ரமணன். அந்தக் கேள்விக்குத் தகுந்த பதில் கூறமுடியாது போனதால் அந்தக் கேள்வியையும் காதில் கேளாதவர்போல, "கோயிலிலே நாம் செய்யக்கூடாதது எண்டு சில இருக்குப் பிள்ளைகளே. அவை வீண் வார்த்தை பேசுதல், எச்சில் துப்புதல் தாம்பூலம் தரித்தல் அதாவது வெற்றிலை போடுதல் என்பன கோயிலிலே தவிர்த்துக் கொள்ளவேணும்" என்றார்.

"சேர்! நீங்கள் உப்பிடிச் சொல்லுறியன் எங்கடை ஊர்ப் பிள்ளையார் கோயில் ஐயர் எப்ப பார்த்தாலும் வாய்க்குள்ளை வெற்றிலையை வைச்சுக் குதப்பிக் கொண்டு தானே சேர் பூசை செய்யிறார்?" என்றான் பிரதாப்.

"அது கூடாது தான். கோயில் நிர்வாகம் ஐயாவுக்கு அதை எடுத்துச் சொல்லிப் பூசை நேரத்திலை வெற்றிலை போடுவதைத் தவிர்க்கச் செய்யவேண்டும். சரி... ஆண்கள் எப்படியான நமஸ்காரம் செய்ய வேணும் எண்டு தெரியுமோ?"

"தெரியலையே சேர்" என்றனர் மாணவர்கள்.

"ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேணும்"

"எந்தப் பஞ்சாங்கம் சேர்? திருக்கணித பஞ்சாங்கமோ வாக்கியப் பஞ்சாங்கமோ சேர்?" நிமலன் என்ற மாணவன் கேட்டான்.

தங்கவேல் மாஸ்ரருக்கு மெல்ல மெல்ல அந்த வகுப்பு மாணவர்களின் குணம் புரிய ஆரம்பித்தது. ஆயினும் என்ன செய்ய, படிப்பித்தே ஆகவேணுமே?

✦ ✦ ✦

"இந்து சமயத்தில் ஆறு சமயப் பிரிவுகள் இருக்கின்றன. அந்த ஆறு சமயங்களுக்கும் வேதம் பொதுவானது. வேதத்தை நான்மறை, எழுதாமறை, எழுத்தாக்கிளவி எண்டெல்லாம் சொல்வார்கள்" என்றார். "ஏன் சேர் எழுத்தாக் கிழவி எண்டவை அந்தக் கிழவிக்கு எழுதப்படிக்கத் தெரியாதோ சேர்?" இது தீபன் என்ற மாணவனின் திடீர்க் கேள்வி. "கிழவி இல்லைத் தம்பி கிளவி. அதாவது வயது போன கிழவிக்கு வாற மௌ "ழ" இல்லை இது கொம்பு "ள" வேதங்கள் தொன்றுதொட்டுச் செவி வழியே ஓதி அறியப்பட்டதால் அதற்கு எழுத்தாக்கிளவி என்று பேர் ஏற்பட்டது" "சரி சேர்" என்றான் தீபன்.

"இந்த வேதங்களுக்கு முன்னொரு காலத்தில் பெரும் ஆபத்து உண்டானது. அசுரன் ஒருவன் வேதங்களைப் பாய்போல சுருட்டிக்கொண்டு சமுத்திரத்துக்குள் புகுந்து ஒழிந்து கொண்டான். மகா விஷ்ணுவானவர் ஆமை உரு எடுத்துச் சமுத்திரத்துக்குள் சென்று அதை மீட்டு வந்தார்"

"என்ன சேர் சொல்லுறியள் வேதம் எழுதப்படாதது என்று சொன்னியள் பிறகு என்னத்தை அந்த அசுரன் பாயைப் போல எண்டாலும் மெத்தையைப்போல எண்டாலும் சுத்துவான்?" தங்கவேல் மாஸ்ரருக்குத் தலை சுத்தியது. செருமியபடி வகுப்பறையின் கூரையைச் சிறிது நேரம் பார்த்தபடி நின்றார். தன் தலைவிதியை நொந்தபடி "வேதவியாசர் யார் தெரியுமோ" எனக் கேட்டார்.

"வேதா எண்டு வருவதால் அவர் ஒரு கிறிஸ்தவராக இருக்கலாம்" என்றான் கிரிசாந்.

"இல்லையடா தம்பி அவர் தான் வேதங்களை நான்காகப் பிரித்தவர்"

"எதாலை சேர் பிரிச்சவர்?" கபிலன் என்ற மாணவன் கேட்டான். "பிரிச்சது எண்டால் வெட்டிப் பிரிச்சது இல்லைத் தம்பி வேதங்களில் பொதிந்துள்ள பொருள்களுக்கு ஏற்ப அதை நான்காக வகைப்படுத்தியது என்று அர்த்தம்."

"சரி...சரி..சேர்" என்றார்கள் மாணவர்கள். "வேதத்திலுள்ள நான்கு பிரிவுகளும் எவை எண்டு தெரியுமோ? "ஓம் சேர் தெரியும்" என்றான் பிரதாபன் என்ற மாணவன். "சரி சொல்லு பாப்பம்? என்றார் தங்கவேல் மாஸ்ரர் சற்று உற்சாகம் வரப் பெற்றவனாக. "கத்தோலிக்க வேதம், பாதிரி வேதம், பெந்துக்கோஸ், ஏழாம்நாள் திருச்சபை, யேகோவாவின் சாட்சிகள்... என்ன சேர்? நாலுக்கு கூட வருகுது?"

தங்கவேல் மாஸ்ரருக்குத் தலையில் அடித்து "ஓ" என்று கத்தவேணும் போலிருந்தது. தான் காலையில் புறப்படும் பொழுது எவர் முழுவிய எத்துக்கு நின்றது என யோசித்துப் பார்த்தார். ஞாபகத்துக்கு வரவில்லை. பெருமூச்சு விட்டபடி, "வேதங்களின் பெயர்களை நானே சொல்லுறன். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்" என்றார் பற்களை நறுமியபடி.

✦ ✦ ✦

இந்த வேதங்களைப் பற்றிப் படிப்பிக்க தொடங்கிய நேரம் தொடக்கம்இவங்களோடைபெரியபிரச்சினையாக்கிடக்கு. அதை விட்டுவிட்டு வேறு பகுதிக்குப் போவோம் என எண்ணிய தங்கவேல் மாஸ்ரர். "முருகப் பெருமான் எப்படி அவதாரமானார் தெரியுமோ?" எனக் கேட்டார். "ஓம் சேர் தெரியும்" என்றார்கள். "தெரியுமோ?" எனக் கேட்டார். "சேர் தெரியும்" என்றார்கள். சில மாணவர்கள் "சரி எப்படி அவதரித்தார் எண்டு சொல்லுங்கோ பாப்பம்"

"சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிவந்த தீப்பொறிகளிலிருந்து ஆறு குழந்தைகள் தோன்றி அந்த ஆறு குழந்தைகளும் பிறகு ஒன்று சேர்ந்து அறுமுகங்களாகின" இந்தப் பதிலால் தங்கவேல் மாஸ்ரர் கொஞ்சம் மன அறுதலும் உற்சாகமுமடைந்தார். "நல்லது பிள்ளைகளே நீங்கள் கெட்டிக்காரப்பிள்ளைகள் தான் அது எனக்குத் தெரியுது. ஆனால் அவசரப்பட்டுக் கதைக்கிறியள்... சரி.. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கோ பாப்பம்"


"இறைவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீப்பொறிகள் எங்கே வீழ்ந்தன?"

"தெரியும் சேர் மகாவலி கங்கையில் வீழ்ந்து சரவணையிலுள்ள குளத்துத் தாமரைகளில் ஆறு குழந்தைகளாகத் தவழ்ந்தன சேர்"

என்றான் பிரசாத். தங்கவேல் மாஸ்ரருக்கு வந்திருந்த உற்சாகம் பறந்தது. பற்களை நற நறவெனக் கடித்தபடி "டேய் தீப்பொறிகள் விழ்ந்தது மகாவலி கங்கையில் இல்லையடா இமயமலையில் உற்பத்தியாகும் கங்கை நதியிலடா. ஆறு குழந்தைகளும் தவழ்ந்தது. சரவணையிலுள்ள குளத்துத் தாமரைகளில்லை சரவணப் பொய்கையிலிருந்த தாமரைகளிலடா" உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதால் மூச்சு வாங்கியது.

கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு சற்றுநேரம் அங்குமிங்கும் நடந்தார். மனக்கொதிப்பும் ஆயாசமும் சற்றுத் தணிந்தன. ஆனாலும் தங்கவேல் மாஸ்ரருக்கு நாக்கிலே சனியன் போலும். அதனால்தான் "முருகனின் அவதாரம் ஏன் நிகழ்ந்தது தெரியுமோ?" என்று கேட்டார்.

தொடர்ச்சி)




"சூரனைக் கொல்லத்தான்" என்றான் பிரகலாதன் என்ற மாணவன். "சரியாய் சொன்னாய் தம்பி. சூரன் பெரிய மாமரமாய் மாறி நின்றபோது முருகன் தனது அம்பை எய்து அவனை இரண்டு கூறு களாக்கினார். ஒரு கூறு மயிலாகவும் ஒரு கூறு சேவலாகவும் மாறின. சேவலையும் மயிலையும் முருகன் என்ன செய்தார் தெரியுமோ?" "சேவலைக் கறியாகவும்... இல்லை சொறி சேர் கொடியாகவும் மயிலைத் தன் வாகனமாகவும் ஆக்கிக்கொண்டார்" மீண்டும் பிரகலாதன் கூறினான். தங்கவேல் மாஸ்ரர் அவனை உற்றுநோக்கிய பின் சொன்னார். "தம்பி நான் பார்த்த அளவில் மாற்றவர்களைவிட உனக்குச்சமய அறிவு கொஞ்சம் கூடுதலாக இருக்கு. உன்ரை பேரென்ன தம்பி?" எனக் கேட்டார். "பிரகலாதன் சேர்" என்றான் அவர்.

"உன்ரை பேரைக் கேட்க இரணியன் - பிரகலாதன் கதை எனக்கு நினைவுக்கு வருது. இரணியன் தன்ரை மகன் பிரகலாதனைப் பார்த்து "நாராயணன் நாராயணன்" எண்டு எந்தநேரமும் சொல்லுறியே உன்ரை நாராயணன் எங்கே இருக்கிறான்? எனக் கேட்கிறான். அதற்குப் பிரகலாதன் நாராயணன் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் எண்டு பதில் சொல்வான். அந்தக் கதைதான் எனக்கு நினைவுக்கு வருது" என்றார்.

இந்த வேளையில் வகுப்பின் பின் வரிசையில் இருந்த மாணவர்கள் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்ட தங்கவேல் மாஸ்ரர் அவர்களில் ஒருவரைப்பார்த்து "டேய்.. எழும்பு! எழும்பி நில்! பிரகலாதன் என்ன சொன்னான்?" எனக் கேட்டார்.

தங்கவேல் மாஸ்ரரின் இந்தக் கேள்வியால் குழப்பமடைந்த அவன் "நீங்கள் தானே சேர் பிரகலாதனோடை கதைச்சுக்கொண்டிருந்தனீங்கள் அவன் உங்களுக்கு என்ன சொன்னான் எண்டு நான் கவனிக்கேல்லை சேர்" என்றான். வகுப்பைவிட்டு ஓடிவிடுவோமா என்று கூடத் தங்கவேல் மாஸ்ரர் யோசித்தார்.

தங்கவேல் மாஸ்ரர் இவங்களுக்குப் பாடம் படிப்பிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அந்த அளவுக்கு மனதாலும் உடம்பாலும் களைத்துப் போனார். பாடம் முடிய இன்னும் எவ்வளவு நேரம் இருக்கு இந்த உபத்திரவத்தைவிட்டு வெளியேறுவதற்கு என்பதை அறியக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி 6 எனக் காட்டியது. ஆம் அவரது கடிகாரம் காலை 6 மணியோடு நின்றுவிட்டது. கோபமும் எரிச்சலும் எல்லை கடந்தன. வெடுக்கென மணிக்கூட்டைக் கழற்றி வெளியே எறிவதற்குக் கையை உயர்த்தினார். பின் என்ன நினைத்துக்கொண்டாரோ அதைத் தமது நஷனல் சட்டைப்பையில் போட்டுக் கொண்டார். அங்கும் இங்கும் நடந்தபடி யோசனை செய்தார்.

சைவநெறி படிப்பிப்பதை விட்டுவிட்டு வேறுபாடம் கற்பிக்க அனுமதி கோருவது. இல்லையேல் வேறு பாடசாலைக்கு மாற்றம் கேட்பது. இல்லையேல் தனது பரம்பரைத் தொழிலைச் செய்வது என்றெல்லாம் எண்ணவோட்டங்கள் அவர் மனதுக்குள் ஓடிக்கொண்டிருந்தன...

## சொற்சிலம்பம் போட்டி இல: 558

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | ■ |
| 12 | | | ■ | 13 | | | 14 |
| | ■ | 15 | 16 | | | ■ | |
| ■ | 17 | | | | ■ | 18 | |
| 19 | | ■ | | ■ | 20 | | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

முழுமையான தபால் விலாசம்: ......................................

........................................................................

கையொப்பம்:.................................................................

### இடமிருந்து வலம்

1. சமமாக மதிக்கும் போக்கு
6. உயிர்ப்பின் ஆரம்பம்
7. ஒரு பறவை
8. இது பெண்ணுக்கு வேலி
9. ஒருபுறம் கொடுக்கல் மறுபுறம்...
11. ஒரு குறி
12. துரியோதனன் மாமன்
13. சரீரம்
15. உலோகத் தகடு
17. ஐஸ்வரியம்
18. கோவில்களில் இருக்கும் ஒருபொருள்
19. தாய் ஊட்டுவது
20. பொழுது புலர...
21. தண்டிகை
22. நண்பகல் வேளை

### மேலிருந்து கீழ்

1. தொடர்பு பேணல்
2. அருகில்
3. புடைவை
4. காற்று
5. நோவு
8. விடாய்
10. பழுத்தல்
11. உயிரற்றது
13. பானை
14. பாவத்துக்கு எதிர்ச்சொல்
16. மனக்கஷ்டம்
17. திருமணமாகாத பெண்ணுக்கான அடைமொழி
18. இறக்க
19. நீர்ப்பிடிப்பான இடத்தில் வளரும்
20. தலையெழுத்து

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 555 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) இதிகாசம் (5) அவா (7) யன்னல் (8) பகல் (9) கல்யாணம் (11) புலம் (13) சம்பாதி (15) தவி (16) பானை (17) வரி (18) கட (19) அம்பு (20) அலம்பல் (22) குருவி (23) திலகம்

**மேலிருந்து கீழ்**

(1) இயம்புதல் (2) தின் (3) கானகம் (4) சல்லி (5) அகம்பாவம் (6) வால் (8) பணம் (10) யாசனை (12) ரவி (14) திரிபுரம் (16) பாடம் (18) கலவி (19) அல்ல (20)அரு (21) பதி

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.558**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (27.02.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.558 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.032019ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 556 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

திருமதி ப.சிவபாலேஸ்வரி
'தாத்தா மனை' 22/18 விதானை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**

கே.இராஜகோபால்,,
அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி
கோவிலடி, வட்டுக்கோட்டை

**3 ஆம் பரிசு**

ஞா.இம்மனுவல்,
இல.85/4, கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

திருமதி சூ.சிவராஜமலர்
சம்பியன் வீதி.
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**5 ஆம் பரிசு**

செல்வி ஜெகநாதன் கோவிகா,
குப்பிளான் தெற்கு, ஏழாலை.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி இராஜமுத்து மஞ்சுளா,
பிரதேச வைத்தியசாலை,
அச்சுவேலி.

சி.பானுராஜா
சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

ந.ஜெயகணேசன்,
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 553 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்த வாரம்

**17.02.2019 முதல் 23.02.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

ராகு, சுக்கிரன், சூரியன், புதனால் அனுகூலபலன் கிடைக்கும். குடும்ப உறுப்பினர் ஆதரவாகச் செயல்படுவர். புகழ் தரும் வகையில் பணி அமையும். வீடு, வாகனத்தில் சிறு அளவில் பராமரிப்பு தேவைப்படும். பிள்ளைகளின் வெகுநாள் விருப்பத்தினை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். தொழிலில் இலாப விகிதம் குறைப்பதால் உற்பத்தி விற்பனை சீராகும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டுக்குத் தேவையான உதவியை வழங்குவர்.

## இடபம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் ஆதாயபலன் தருவர். நல்ல செயல்களால் சமூக மதிப்புக் கூடும். உறவினர்களின் பாசம் நெகிழ்ச்சி தரும். தம்பி, தங்கைக்கு சுபநிகழ்ச்சி நடந்தேறும். பிள்ளைகளின் ஆர்வமிகு செயல்களை ஊக்கப்படுத்துவீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். பகைவர் சொந்த சிரமங்களால் விலகுவர். மனைவியின் அன்பு பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். வெளியூர்ப் பயணத்தில் உரிய பாதுகாப்புப் பின்பற்றவும். தொழில், வியாபா ரத்தில் போட்டி குறைந்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் இலக்கை நிறைவேற்றி நற்பெயர் பெறுவர்.

## மிதுனம்

சந்திரன், செவ்வாய் மட்டுமே ஓரளவு நற்பலன் வழங்குவர். செயல்களில் முன்யோசனையுடன் ஈடுபட வேண்டும். பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்றவும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வர். கடன் தொந்தரவு பெருமளவில் குறையும். தகுந்த ஓய்வினால் உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரம் வளர அளவான மூலதனத்தில் அதிக உழைப்பு தேவைப்படும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறிட இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

## கடகம்

குரு, கேது, சனீஸ்வரர், புதன், சந்திரனால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தம்பி, தங்கையின் பாசம் புதிய நம்பிக்கையை தரும். அறிமுகமில்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். வாழ்க்கை அனுபவங்களைப் பிள்ளைகளிடம் எளிய நடையில் சொல்வீர்கள். அன்பு நிறைந்த அணுகுமுறை எதிர்ப்பாளர் மனதிலும் நல்ல மாற்றம் தரும். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி ஒற்றுமையுடன் நடந்து குடும்பத்துக்குப் பெருமை சேர்ப்பார். தொழில், வியாபாரம் செழித்து லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

## சிங்கம்

சுக்கிரன், ராகு, சந்திரன் அனுகூல பலன் தருவர். இனிய அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள். பிறந்தவர்களுக்கு சுப நிகழ்ச்சி நடந்தேறும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் நம்பிக்கை வளர்ந்து படிப்பு வேலையில் முன்னேறுவர். பூர்வ சொத்துப் பராமரிப்பில் செலவு கூடும். மனைவியிடம் பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர்.

## கன்னி

சுக்கிரன், சூரியன், புதன் நற்பலன் தருவர். பொது நிகழ்வுகள் நல்லவிதமாக அமைந்து மனதில் ஊக்கம் தரும். தகுதி மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். வெளியூர் பயணம் அளவுடன் மேற்கொள்ளவும். தாய்வழி உறவினர்கள் ஓரளவு உதவுவர். பிள்ளைகளின் உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். வழக்கு விவகாரத்தில் சமரச முயற்சியால் சுமுகத் தீர்வுக்கு வழி ஏற்படும். மனைவி விரும்பி கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவில் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்களை மதித்துச் செயல்படுவர். பெண்கள் சிக்கனச் செலவுகளால் பணம் சேமிப்பர். மாணவர்களுக்குப் படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## துலாம்

குரு, சுக்கிரன், கேது சனீஸ்வரரால் ராஜயோக பலன் உண்டாகும். வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வழி பிறக்கும். பணிகளை ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். திட்டமிட்டதைவிட குடும்பச்செலவு கூடும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகள் படிப்பில் மேம்பட உரிய பயிற்சி மேற்கொள்வர். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் பாசம் மிகுந்த சொல்லும் செயலும் மனதில் நம்பிக்கையை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்.

## விருச்சிகம்

செவ்வாய், புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். பணிகளை நிறைவேற்றி உரிய நன்மை பெறுவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோர் சொல் ஏற்று நடப்பர். அவர்கள் விரும்பிய பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். சத்து நிறைந்த உணவு உண்டு மகிழ்வீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்பநலன் பேணுவார். தொழிலில் அதிக உழைப்பால் உற்பத்தி விற்பனை சீராகும். பணியாளர்கள் பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம்.

## தனுசு

சூரியன், சந்திரன், சுக்கிரனால் அதிக நன்மை கிடைக்கும். கடந்த கால உழைப்புக்கான பலன் வந்து சேரும். வெளியூர்ப் பயணத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். சமூகப்பணியிலும் ஈடுபாடு கொள்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதச் செயல்களை இதமான அணுகுமுறையால் சரி செய்யுங்கள். சொத்து ஆவணம் பிறர் பொறுப்பில் வழங்க வேண்டாம். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியிடம் உறவினர் குடும்ப விவகாரம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர்.

## மகரம்

குரு, சுக்கிரன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். அக்கம் பக்கத்தினருடன் பாசம் மலரும். வாகனத்தின் பயன்பாடு அளவுடன் இருக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள்களை தாராள செலவில் வாங்கிக் கொடுப்பீர்கள். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். வழக்கு விவகாரத்தில் நன்மை தருகின்ற திருப்பம் உருவாகும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்பநலன் பேணிக் காத்திடுவார். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிவர். திருப்திகரமான சலுகை கிடைக்கும்.

## கும்பம்

செவ்வாய், கேது, சனீஸ்வரர், சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டு. ஒதுக்கி வைத்த பணிகளை நிறை வேற்றுவீர்கள். உடன்பிறந்தவர் இயன்ற அளவில் உதவுவர். புதிய வீடு, வாகனம் வாங்க நிதியுதவி கிடைக்கும். பிள்ளைகள் சில விடயங்களில் பிடிவாதம் கொள்வர். வழக்கு விவகாரங்களை சமயோசிதமாக அணுகுவீர்கள். இஷ்டதெய்வ அருள் சில நன்மையை தரும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் சொந்தம் பாராட்டுவர். வெளியூர்ப் பயணம் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிகள் நிறைவேறும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் பூர்த்தி செய்வர். பெண்கள் கணவரின் பாசத்தில் சந்தோஷ வாழ்வு நடத்துவர்.

## மீனம்


குரு, சந்திரனால் ஓரளவு நன்மை ஏற்படும். மனதில் உற்சாகத்தைப் பாதுகாத்திடுவீர்கள். பணிகளை புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் கருத்து பேதம் வளராத அளவுக்குப் பழகவும். பிள்ளைகளின் செயல் குறையை இதமாக சரி செய்யுங்கள். உடல் ஆரோக்கியத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் ஆலோசனை குடும்ப நலனுக்கு உதவும். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். தொழில், வியாபாரம் புதிய வாடிக்கையாளர்களின் ஆதரவில் வளரும். பணியாளர் கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் தாய் வீட்டு உதவியைக் கேட்டுப் பெறுவர். மாணவர்கள் நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேறலாம்.



## நித்திய சுகம்

உடலே கோயில்

# உயிர் மாய்ப்பைத் தடுப்பதில் உளவளத்துணையின் பங்கு



பு.நக்கீரன்

“அரிது அரிது மானிடர் ஆதல் அரிது” இற்றைக்கு பலநூறு வருடங்களுக்கு முன்பே மூத்த தமிழ்க் கவி ஔவையார் இவ்வாறு பாடியுள்ளமையானதுமனிதஉயிரின்உயர்வுமற்றும் மகத்துவம் பற்றிப் பறைசாற்றுகிறது. இன்று எமது நாட்டில் "தற்கொலை" செய்து அருமருந்தன்ன வாழ்வைத் தானாக முடித்துக்கொள்ளும் தன்மை தொற்றுநோய்போன்றுபரவிவருகிறது. குறிப்பாக முப்பதாண்டுகாலப் போர் காரணமாக இனத்தின் இருப்பு ஆட்டம் கண்டுள்ள எமது தமிழ்ப் பிரதேச மெங்கும் நாளாந்த நிகழ்வாகப் பரவிவரும் தற்கொலைகளைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

பொலிஸ் திணைக்கள தகவல்களின் அடிப்படையில்2017ஆம்ஆண்டுமொத்தமாக 3ஆயிரத்து 250க்கும் மேற்பட்ட தற்கொலை முயற்சிகளும், புள்ளி விவரத் திணைக்களத்தின் தகவலின்படி ஒரு லட்சம் மக்களுக்கு 19 வரையான தற்கொலை இறப்புகளும் இடம்பெறுகின்றன. சுகாதார அமைச்சின் தரவுகள் நாளொன்றுக்கு 8 வரையான தற்கொலைமுயற்சிகள்இடம்பெறுகின்றன என்றுதெரிவிக்கின்றன. யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத் தகவல்களின்படி ஆண்டொன்றுக்கு 75 வரையான தற்கொலைகள் பதியப்பட்டுள்ளன. ஆனாலும் ஒரு மாதமளவில் ஊடகங்களில்வெளிவந்ததற்கொலைகள்பற்றிய செய்திகள் இருபதைத் தாண்டுகிறது. இவ்விரண்டுதகவல்களையும்விடவும் உண்மையில் இடம்பெற்றிருக்கக்கூடிய தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கும் என்பது தான் விஞ்ஞானபூர்வமானஉண்மை. உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தகவல்களின்படி தற்கொலை இறப்புகளில் இலங்கை மிக உயர்வான இடத்தில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் கவலைக்குரிய வியம் என்னவெனில்எதிர்காலச்சமுதாயத்தைநகர்த்திச் செல்லவேண்டியஇளம்சமுதாயத்தினர் தான் அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அதிலும் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் இளஞ்சந்ததியினர் ஒப்பீட்டளவில் மிக உயர்வாகும்.

### ஆரோக்கியமற்ற உளவியல் வெளிப்பாடுதான் தற்கொலை


தற்கொலைஎன்பதுமுற்றுமுழுதாய்ஒரு மனிதனுடைய ஆரோக்கியமற்ற உளவியல் தன்மையின் வெளிப்பாகவே உள்ளது. ஒரு மனிதனின் சுகநலம் என்பது தனியே உடலியல் சார்ந்த ஒரு விடயமாகப் பார்க்கப்பட்ட காலம் மலையேறி பல வருடங்களாகிவிட்டது. ஒரு மனிதனின்சுகம்அல்லதுஆரோக்கியம் என்பது தனியே நோயற்ற உடலியல் மட்டுமல்ல மாறாக உடல்நலம், உளநலம், சமூகநலம், ஆன்மிகநலம் ஆகிய அனைத்துக்கூறுகளையும்கொண்டது என்ற கருத்து மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இன்றும் எமது மக்கள் மத்தியில் உள ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வு மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதன் வெளிப்பாடாவே தற்கொலைகளின் அதிகரிப்பு என்பது சுட்டிநிற்கின்றது.

தற்கொலைகள் என்பதற்கு மேலாக எமது மக்கள் மத்தியில் அதிகரித்துச் செல்லும் தேவையற்ற இறப்புக்கள்கூட இந்த வகையைச் சார்ந்தவையே. ஒவ்வொரு மனிதனும் ஆளுமை தொடர்பான ஒரு பண்பாக சுயபாதுகாப்பு என்பதைக்கருதலாம். ஆனால்இன்றுஎமது பிரதேசமெங்கும் அதிகரித்துச் செல்லும் அகாலச் சாவுகளுக்குக் காரணமான வீதிவிபத்துக்கள், மின்சாரவிபத்துக்கள், நீரில்இறத்தல்போன்றஅனைத்துக்கும் கூடசுயபாதுகாப்புதொடர்பானஆளுமை விருத்திக் குறைபாடே காரணமாகிறது. ஆளுமை விருத்தி என்பது முற்றுமுழுதான உளவியல் ஆரோக்கியம் தொடர்பான ஒரு எண்ணக்கருவாகும். எமது பிரதேச இளவயதினருக்கு வாழ்க்கையின் தத்துவம் தொடர்பான விழிப்புணர்வு போதாத நிலை காணப்படுவதாகவேதோன்றுகின்றது. மனிதவாழ்க்கை என்பது கிடைத்ததற்கரிய தொன்றென்பதை உணராத தன்மையால் இன்று எமது மண் தேவையற்ற சாவுகள் மலிந்த பூமியாகிவிட்டது. எப்படி இருப்பினும் தற்கொலை என்பது முற்று முழுதாய்த் தடுக்கக்கூடிய ஒரு விடயம் என்பதே உண்மை.

### காரணங்கள் என்ன?

பொதுவாகதற்கொலைசெய்பவர்களின் பின்னணிக்கதையை எடுத்துப்பார்ப்பின் அனேகமாக கையாள முடியாத கடன், புரிந்துணர்வு, காதல், பாதுகாப்பற்றபாலியல்,தத்துவம்அறியாவாழ்க்கை, கணவன் மனைவிச் சண்டை, கவனமற்ற பிள்ளை வளர்ப்பு என்று பட்டியல் நீண்டு செல்லும்.

தற்கொலைகளைத் தடுப்பதில் உளவள ஆலோசனைகள் என்பவை மிகவும் முக்கியமான ஒரு சேவை என்பது மறுக்கமுடியாத உண்மை. பொதுவாக பொது வாழ்வில் பல்வேறுவிடயங்கள் எமக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துவதுண்டு. இவ்வாறு மன அழுத்தம் ஏற்படுத்துகின்ற சில விடயங்கள் அதனையும்தாண்டிஉளநெருக்கீடு என்ற நிலைக்கு இட்டுச் செல்கின்றன. இவ்வாறு உள நெருக்கீட்டு நிலைக்கு இட்டுச் செல்லும்விடயங்களைத் தொடர்ந்து கவனமெடுக்காதுவிடில்பெரியஉளநெருக்கீட்டு நிலை ஏற்படுகிறது. பெரிய உளநெருக்கீட்டுநிலையைஉள்ளவர்களின் முக்கியமானதும் ஆபத்துமான குணக்குறி தற்கொலை எண்ணமும் தற்கொலை முயற்சியும் ஆகும். இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் உளநெருக்கீட்டு நோயாளர்கள் தம்முடன் நெருக்கமாகப் பழகும் சிலருக்கோ ஒருவருக்கோ தெளிவாகவோ மறைமுகமாகவோ நான் எனது வாழ்வை முடித்துக் கொள்ளப்போகிறேன் என்ற செய்தியைச்சொல்லிஇருப்பார்கள். அது விடயமாகக் கவனமெடுக்காமல் இருந்துவிட்டுப் பின் சாவு வீட்டிலே ஒப்பாரி சொல்லி அழுபவர்களைப் பார்க்கும் போது என்ன சொல்வது? யாழ். மாவட்டத்தில்பதியப்பட்டமனநோயாளர்களில் அதிகளவானவர்கள் உளநெருக்கீட்டு நோயாளர்களாக உள்ளனர்.



### உளவளத்துணையின் அவசியம்

மனநோயாளியாக மாறும் நிலைக்கு இட்டுச்செல்லக்கூடிய முதல் இரு நிலைகளானமனஅழுத்தம்மற்றும்நெருக்கீடு ஆகிய இரண்டு நிலைகளையும் சரியான தொழில் வாண்மைமிக்க உளவள துணையாளரால் பூரணமாகக் குணப்படுத்தமுடியும். உளவளதுணை செயற்பாட்டிலேஉளவளதுணையாளர் உளரீதியாகச் சிக்கல் நிலை ஒன்றில் உள்ள துணைநாடியுடன் மனந்திறந்து கதைப்பதன் மூலம் துணைநாடியைப் பிரச்சினையிலிருந்து சரியான திசையில்வெளிவரஉதவுகிறார். இந்தஉதவி செயற்பாட்டின்போதுஉளவளத்துணையானவர் துணைநாடிவந்துள்ளவரிடம் உள்ளபிரச்சினைஅல்லதுசிக்கல்நிலை ஏற்பட்டமைக்கான காரணங்களைத் தெளிவாகவெளிப்படுத்துவதுடன்இந்தப் பிரச்சினையில்இருந்துஅவர்வெளியே வருவதற்கான சாத்தியப்பாடான வழிகளை அடையாளப்படுத்தி அவ்வழிகளூடாக வெளியே வருவதற்கு அவரிடமேபுதைந்துள்ளதிறனகளைஅல்லது திறமைகளைவெளிப்படுத்திக்கொடுக்கிறார். எமது பிரதேசத்தில் இவ்வாறு திறமையுள்ளதொழில்வாண்மைமிக்க உளவளதுணையாளர்களை இனம் கண்டு அவர்களின்சேவையைபெற்றுக் கொள்ள பிரச்சினையில் உள்ளோர் முன்வராமைக்கு முக்கிய காரணம் என்னவெனில் ஒருவர் உளவளதுணை சேவையைப் பெற்றுக்கொண்டால்அவரைமனநோயாளியாகப் பார்க்கும் நிலை எமது மக்கள் மத்தியில் உள்ள பெரிய ஒரு குறைபாடாகும். இது ஒரு பிழையான எண்ணக்கரு. வாழ்க்கையில்எதிர்ப்படும்எல்லாப் பிரச்சினைக ளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஆளுமை எல்லா மனிதர்களுக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக இன்றைய சமூகத்தில் வாழ்க்கைச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஆளுமைப்பண்பு எம் இளம் சமுதாயத்திடம் மிகவும் குறைவாகவே உள்ளது. எமது சமூகத்தில் இன்று மலிந்து போயுள்ள வாள்வெட்டுக்கள், வன்முறைகள், மதுப் பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை, வீதிவிபத்துக்கள்நீதிமன்றில் காணப்படும்மணமுறிவுமற்றும்குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வழக்குகள் பறைசாற்றுகின்றன. இவ்வாறான புறநிலையில் வாழும் எம்மக்களின் வாழ்க்கைச் சிக்கல் நிலைகளை ஆரம்பத்திலேயே இனம்கண்டு பொருத்தமான ஆரோக்கியமான மகிழ்ச்சியான தீர்வுகளைஏற்படுத்திக்கொள்வதற்கான தொழில் ரீதியான புலமைமிக்க வழிகாட்டலாகவேஉளவளத்துணைசெயற்பாடு பார்க்கப்படவேண்டும்.

இந்த வகையில் தற்கொலை முயற்சிகளும் தற்கொலை இறப்புக்களும் அதிகரித்துக்கொண்டுசெல்லும்உளரீதியான ஆரோக்கியம் குறைவான சமூக்கத்தில் மனநலஆலோசனைஅல்லதுஉளவள துணைச்சேவை என்பது மிக அவசியமான ஒரு முற்பாதுகாப்பு நடவடிக்கையானக் கொள்ளப்படவேண்டும்.

*கட்டுரையாளர்*
*மனநல ஆலோசகர்*
*சுகாதாரக்கல்வி அதிகாரி,*
*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை*

# வள்ளுவர் கண்ட தமிழ்த் தேசியம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

பகுதி 2

## தமிழ்நாடு வெனி இளங்குமரன் அடிகளாரின் தனிநாயகம் அடிகளாரைப் பற்றிய பேருரை

கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் தனிநாயகம் அடிகள் ஆய்வுமைய பணிப்பாளர் அமிர்த ஜெயசேகரம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் 3ஆம் நினைவுப் பேருரை பற்றி கடந்த வாரம் நோக்கினோம். அதன் இரண்டாம் பகுதி பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது.

**செ.ரெ.வெனி இளங்குமரன் அடிகளாரின் இரண்டாம் பகுதி உரை...**

வள்ளுவர் கண்ட தமிழ்த் தேசியத்தை மூன்று தளங்களில் கூர்மைப்படுத்தலாம். மொழி, அறம், நாடு என்பனவே அவை.

*1. தமிழ் மொழி*

உலகில் உள்ள பல்லாயிரம் மொழிகளைப் போன்றே தமிழும் 'ஒரு' மொழி என்றே தமிழர் தமிழைப் பார்க்கின்றனர். மேலும், மக்கள் தம் வாழ்க்கைத் தேவைக்காகப் பயன்படுத்தும் பல்வேறு கருவிகளைப் போல் தமிழும் ஒரு 'கருவி என்று அணுகும் தமிழர் பலரும் உள்ளனர்.

ஆனால், தமிழ் ஏதோ 'ஒரு' மொழியன்று அது தமிழரின் 'தாய்மொழி'. தமிழ், உலக மொழிகளின் தாய். தமிழ், திராவிட மொழிகளின் தாய் என்றெல்லாம் உலக மக்களை ஏற்றுக்கொள்ள வைப்பது கூட எளிது. காரணம், உலகப் பேரறிஞர்கள் தமிழின் மேன்மையை அறிந்து அறிவித்துள்ளார்கள். ஆனால் 'தமிழ் தமிழின் தாய்' என்று தமிழர்களை ஏற்க வைப்பதுதான் கூடுதல் கடினமாக உள்ளது. இத்தகைய தாழ்ந்த எண்ணம் உடையோர் இன்று வயதான தாயை தூக்கி எறிவது போன்று தாய் மொழியையும் தூக்கி எறிகிறார்கள்.

அதனால்தான் தமிழரின் பெயரில் தமிழ் இல்லை. ஒலிப்பளக்கத்தில் (உச்சரிப்பில்) பிழை, எழுத்து, சொல், இலக்கணம், ஆகியவற்றில் அறியாமை, கையெழுத்து, முன்னெழுத்து ஆகியவற்றில் பிறமொழி வன்முறை, பயன்படுத்தும் சொற்களில் அயல்மொழிக்கலைப்பு இவ்வாறாக பல தீய கூறுகளால் தமிழுக்கு நாளும் ஏற்படுகிறது சிதைவு.

*2. தமிழ் அறம்*

'அறம் செய விரும்பு' என்றார் ஔவை. ஒவ்வொரு மாணவரும் மாந்தரும் குறைந்தது 100 குறள்களாவது படித்து அதை வாழ்ந்து காட்ட முயற்சி எடுத்தால் அது அறம் நிறைந்த வாழ்வாக அமையும் என்று பலரும் தெரிவிக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று நம் தாய்த் தமிழ் உலகுக்கு எடுத்துரைக்கின்றது. தன்னலம் மறுத்து, பயன்கருதாது அறம் செய்தல் என்பதே அறத்தின் ஊடகமாய் உள்ளது.

*பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (103)*

(கைம்மாறு கருதாமல், செய்த உதவியை ஆய்ந்து பார்த்தால் அதன் நன்மை கடலை விடவும் பெரிதாகும்)

*தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை (327)*

*ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (656)*

*அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல (39)*

(அறவழியால் வருவதே இன்பம் தீய வழிகளால் வருவன துன்பமும் பழியும் ஆகும்)

இறைவன், இயற்கைசான்றோர், அறன் வலியுறுத்தல் எனப் பாயிரவியலில் நான்கு அதிகாரங்களைத் தருகின்ற வள்ளுவர், இல்லறத்தில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு கணவன், மனைவி, பிள்ளைகள் என மூவரைப் பற்றி எடுத்துரைத்து, இவர்கள் மூவரும் கடைப்பிடிக்க வேண்டிய 16 பேரறங்களை முன்வைக்கின்றார். இப்பேரறங்களைக் கடைப்பிடிப்போர் புகழ் உள்ளிட்ட (இல்லறத்தில் இறுதி அதிகாரம்) 16 பேறுகளையும் பெற்று வாழ்வர். துறவறத்தில் அருளுடைமை தொடங்கி அவாவறுத்தல் வரை 13 அறங்கள் முன்வைக்கப்படு கின்றன. இவ்வாறு வெவ்வேறு வாழ்க்கை நிலையினருக்கும், பொருட்பாலில் வரிசையாக கொடுக்கப்பட்டுள்ள ஆட்சியில் ஈடுபடுவோருக்கும் என எல்லா வகையினருக்குமான அறங்கள்சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

*3. தமிழ் நாடு*

'குடும்பத்துக்கு ஒரு வீடு மொழிவழி தேசிய இனத்துக்கு ஒரு நாடு'. இந்த அடிப்படையான மாந்த நேயச் சிந்தனை உலகெங்கிலும் உள்ள மாந்த ஆட்சியாளர் அனைவருக்குமே இருக்க வேண்டிய ஒன்று. ஓர் இனத்தின் பண்பாட்டுச் சரக்கறை மொழியாகும். அந்த மொழி பாதுகாக்கப்படுவதற்கு, அதைத் தாய்மொழியாக கொண்டிருப்போருக்கு நாடுவேண்டும். ஐ.நா.வில் கொடிபறக்க வேண்டும். உலகில் பல மொழிகள் அழிந்து வருவதற்குக் காரணம் அவர்களுக்கான நாடு இல்லை என்பதே.

12 கோடிகளுக்கு மேற்பட்ட தமிழர்கள் உலகமெங்கிலும் வாழ்கின்றார்கள். தமிழர் இல்லாத நாடு இல்லை தமிழருக்கென்று ஒரு நாடு இல்லை. புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்ற பாவேந்தரின் கூற்றை நெஞ்சில் ஏந்தி புதிய நாடுகளுக்கான ஏற்பாடுகளைச்செய்ய உலக நாடுகள் அறத்தோடு முன்வரவேண்டும். ஒரு நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வைக்கின்றார்.

*உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு (734)*

*நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு (739)*

(தேவையான வளமெல்லாம் தன்னகத்தே கொண்டது நாடு ஆகும். பிற நாட்டுப் பொருள்களை நாடி பெறுவதினால் வளம் பெறும் நாடு நாடாகாது)

*ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு (740)*

(வேண்டிய எல்லாவற்றையும் ஒரு நாடு கொண்டிருந்தாலும் நல்ல ஆட்சி அமைப்பும் சிறந்த தலைமையும் இல்லாத நாடு பயனற்றநாடே)

வள்ளுவர் கூறும் நாடு தொடர்பான கருத்துக் கூறுகளை உலகம் தன் இதயத்தில் ஏற்றி போர்களற்ற முறையில் மொழி வழியாக நாடுகள் மலர இசைந்து, இணைந்து வர வேண்டும் அறம் செறிந்த முறையில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு நாட்டை உலகம் ஈன்றெடுக்க வேண்டும்

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு (231)*

தமிழீழப் போராட்டங்கள், உயிரீகங்கள் எல்லாம் தமிழுக்கு ஒரு நாடு அமைய வேண்டும் என்பதற்கானது மட்டுமன்று, ஒவ்வொரு மொழிக்கும் ஒரு நாடு அமைய வேண்டும் என்பதற்கான அறைகூவல்களும் அடித்தளங்களும் ஆகும். நேர்மையான நெஞ்சங்களும் தோழமைகைகளும் இணையட்டும்.

தமிழ் மொழி, தமிழ் அறம், தமிழ் நாடு என வள்ளுவர் காட்டும் தமிழ்த் தேசியத்தை விடியச் செய்வோம். அதற்கான முயற்சிகளை நேர்மையாகத் தொடர்ந்தால்,

*எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (666)*

(ஒன்றைப் பெற எண்ணியவர், அதைப் பெறுவதற்கான செயலில் உறுதியுடையவராய் இருந்தால் தாம் எண்ணியதை எண்ணியவரே அடைவார்)

*தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (619)*

**தடைகளும் விடைகளும்**

'எண்ணம் போல் வாழ்வு' என்பதற்கேற்ப நல்லெண்ணங்காளும் நற்செயல்களும் தொடர்வதற்குத் தடைகளாகப் பல இருப்பினும், குறள் கூறும் மூன்றினைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும்.

*காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (360)*

*1.காமம் (ஆசை)*

யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும் (346)

தன்னை தன் நலநன மட்டுமே நடுப்படுத்தி வாழ ஆசைப்படுகிற தீமை கொடியது.

*2. வெகுளி (சினம்)*

*நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற (304)*

முகத்தின் மலர்ச்சியையும் மனத்தின் மகிழ்சியையும் அழிக்கும் சினத்தை விடவும் வேறு பெரிய பகை இல்லை என்பதனால் சினத்துக்கான சூழல் தவிர்க்கப்பட வேண்டும். சாதி, மதம், பணம், பிளவு, ஏற்றத்தாழ்வு தீண்டாமை எனப் பலவும் மாந்தருக்குள் சினத்தை விதைக்கின்றன. சாதியை ம்றுத்து, மதத்தைக் கடந்து, இறைவனின், இயற்கையின் பிள்ளைகளாய், உழைப்பை அச்சாக ஏற்று, மொழி வழி தேசியங்களை மதித்து மாண்புடன் மாந்தர் வாழ அறம் ஆட்சி செய்ய வேண்டும்.

*3. மயக்கம் (அறியாமை)*

*பேதைமை என்பதொன் றியாதெனின்
ஏதங்கொண்
டூதியம் போக விடல் (831)*

கேடு தருவதைக் கைக்கொண்டு ஆக்கம் தருவதை விட்டுவிடுவதே அறியாமையாகும். அந்த வகையில் மது, சூது, உட்பகை, அறந்தவறிய செயல், ஒழுக்கமற்ற போக்கு போன்ற மயக்கக் கூறுகளை தவிர்த்தாக வேண்டும்.

ஆசை, சினம், அறியாமை ஆகிய மூவகைத் தடைகளையும் நீக்கி, குறள் கூறும் தமிழ்த்தேசியத்தை அமைப்பதற்குப் பல்வேறு அறங்களையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றுள் மூன்று முதன்மையான அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை என்பனவாகும்.

*அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை
தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று (682)*

தூதுரைப்பார்க்கு மட்டுமல்ல, குடும்பத்தை, நாட்டை நடத்துகிறவர்களுக்கும், வள்ளுவர் காட்டும் தமிழ்த் தேசியத்தை அமைக்க விரும்புகிறவர்களுக்கும் முயல்கிறவர்களுக்கும் அன்பு, அறிவு, ஆராய்ந்சொல்வன்மை ஆகிய மூன்றும் கட்;டாயத் தேவை.

*1. அன்பு*

தமிழ், அறம், நாடு, பண்பாடு, குறள், இயற்கை, உழைப்பு, மாந்தர், நேர்மை போன்ற அனைத்தின் மீதும் அன்பை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும்.

*அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்க்க உடம்பு (80)*

(அன்பிருக்கும் உடலே உயிர் தங்கிய உடல், அன்பு இல்லாதவரின் உடல் எலும்பைத் தோலால் போர்த்திய உயிருள்ள உடலே ஆகும்)

*2. அறிவு*

எவற்றின் மீதெல்லாம் அன்பு கொண்டிருக்க வேண்டுமோ அவற்றின் மீதும் மேற்சொன்ன அனைத்தின் தொடர்பாகவும் அறிவு வேண்டும் அறிவோடு செயல்பட வேண்டும்.

*ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார் (463)*

(உறுதியற்ற எதிர்கால வருவாயை எண்ணி இருப்பிலுள்ள முதலை இழக்கும் செயலை அறிவுடையோர் மேற்கொள்ள மாட்டார்கள்)

*3. ஆராய்ந்த சொல்வன்மை*

கதைக்கப்படும் சொற்களை ஆராய்ந்து, பண்பும் பயனும் நிறைந்த இன்சொற்களை மட்டும் கூறுவது வாய்மையாகும். எழும் எண்ணங்களையெல்லாம் ஆராய்ந்து நற்சிந்தனைகளை மட்டும் தொடர்வது உண்மையாகும்.

அறத்தோடு


, மனத்தில் மாசில்லா குணத்தோடு நேர்மையான முறையில் நன்மைகளை மட்டும் செய்வது மெய்ம்மை. இந்த மூன்றும் இருக்கையில் தமிழ்த்தேசியம் நம் கையாகும்.

*ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின் (484)*

தகுந்த காலம் அறிந்து, உரிய இடத்தில் செயல்பட்டால் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினாலும் கைகூடும். மொழிவழி தேசிய இனங்களுக்குரிய நாடுகள் உருவாகும். தமிழுக்கான நாடு தாய்த்தமிழ் மண்ணிலும் தமிழீழத்திலும் உறுதியாகட்டும். அறத்தோடு செயல்படுவோம்.

*12 கோடிகளுக்கு மேற்பட்ட தமிழர்கள் உலகமெங்கிலும் வாழ்கின்றார்கள். தமிழர் இல்லாத நாடு இல்லை தமிழருக்கென்று ஒரு நாடு இல்லை. புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் என்ற பாவேந்தரின் கூற்றை நெஞ்சில் ஏந்தி புதிய நாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய உலக நாடுகள் அறத்தோடு முன்வரவேண்டும். ஒரு நாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வைக்கின்றார்.*

# வழிகாட்டுவோம்



# ஆங்கிலம் கற்போம்

Just coming- இதோ வருகிறேன்
Very well - மிக நல்லது
Fine/Very good - நன்று/நல்லா இருக்கிறது
As you like/ As you please - உங்கள் விருப் பப்படி/ சந்தோசம்
Anything else - வேறு ஏதாவது?
OK - சரி
Why not - ஏன் இல்லை
Not a bit - கொஞ்சம் கூட இல்லை
Take care - கவனமாக இருங்கள்
See you tomorrow - நாளை சந்திக்கலாம்
Yes, by all means - ஆம் அவசியம்
That is too much மிகவும் அதிகம்
Yes! Sir - ஆம் ஐயா
Never Mind - கவலைபடாதே/பரவாயில்லை
Nothing special - விசேசம் ஏதும் இல்லை
Welcome - நல்வரவு
Rest assured - நம்பி இருங்கள்
good bye - சென்று வருகிறேன்
Bye bye - போய் வாருங்கள்
I say stop - நில் / நிறுத்து
Speak - பேசு
Listen - கவனி
Wait here - இங்கே காத்திரு
Come here - இங்கே வா
Look here - இங்கே கவனி
Take it - பெற்று கொள்
Come near - நெருங்கி வா
Wait outside - வெளியே காத்திரு
Go up - மேலே போ
Go down - கீழே போ
Be ready / get ready - தயாராக இரு / தயார் செய்து கொள்
Keep Quit - அமைதி காக்கவும்
Go at once - உடன் விரைந்து செல்
Stop here- இங்கே நிறுத்து.




## எடிசன் பொன்மொழிகள்

- திருப்தியின்மை, ஏக்கம் ஆகிய இரண்டும் வளர்ச்சிக்கு அவசியமானவை.
- நான் தோல்வியுறவில்லை; மாறாக நான் கண்டுபிடித்த 10 ஆயிரம் வழிமுறைக ளில் எதுவும் சரியில்லை.
- வாழ்க்கையில் முன்னேற, குன்றாத உழைப்பு, குறையாத முயற்சி, வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை இம் மூன்றும் இருந்தால் போதும்.
- கடிகாரத்தில் நேரத்தைப் பார்க்காமல் கடி னமாக உழைத்ததால்தான் என்னால் புதிய பொருள்களைக் கண்டுபிடிக்க முடிந்தது.



குழந்தைகளின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில்தான் தங்கியிருக்கின்றது.

- நெப்போலியன்.





# கிளித்தட்டு

அது ஒரு மாலை நேரம். மோகனும் அவனின் நண்பர்க ளும் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டி ருந்தனர். அமீர் துடுப்பெடுத்து ஆடினான். அவன் பந்தை அடித்த போது அது பற்றைக்குள் விழுந்துவிட்டது. எவ்வள வுதான் தேடிப் பார்த்தும் பந்து கிடைக்க வில்லை. நண்பர்கள் கவ லையோடு மைதான ஓரத்தில் அமர்ந்து விட்டனர். அப்போது அங்கே மோகனின் மாமா வந்தார்.

மாமா: என்ன பிள்ளைகளே விளையாடவில்லையா? ஏன் எல்லோரும் கவலையோடு இருக்கிறீர்கள்.

மோகன்: பந்து தொலைந்துவிட்டது மாமா. விளையாட வேறு பந்துகளும் இல்லை.

மாமா: அதற்கென்ன வேறு ஏதாவது விளையாடலாமே.

அமீர்: எங்களுக்கு வேறு எந்த விளையாட்டும் தெரியாதே.

மாமா: அப்படியா, நான் ஒரு விளையாட்டுச் சொல்லித் தரட் டுமா?

நண்பர்கள்: சொல்லுங்கள் மாமா சொல்லுங்கள்.

மாமா: நான் சொல்லித்தரப் போவது கிளித்தட்டு விளையாட்டு.

குமார்: இது புதிய விளையாட்டா?

மாமா: இல்லை இது ஒரு பழைய விளையாட்டு முன்பு கிரா மங்களின் இதனை எல்லோரும் விரும்பி விளையா டுவார்கள். இப்போது விளையாடுவது குறைவு.

அன்ரனி: எங்களுக்குச் சொல்லித் தாருங்கள் மாமா நாங்கள் விளையாடுகின்றோம்.

மாமா: சொல்கிறேன் கவனமாகக் கேளுங்கள். முதலில் மைதானத்தில் ஒரு செவ்வகம் வரைய வேண்டும்.

வரதன்: அதன் பிறகு என்ன செய்ய வேண்டும் மாமா!

மாமா: இப்போது நீளப்பகுதியாக நடுவில் ஒரு கோடு கீற வேண்டும். அகலப்பக்கத்தாலும் அளவான இடைவெ ளியில் இரண்டு கோடுகள் கீற வேண்டும். இப்போது ஆறு கட்டங்கள் வரும்.

அமீர்: எத்தனை பேர் விளையாடலாம் மாமா.

மாமா: இரண்டு அணிகளாகப் பிரித்து விளையாட வேண்டும். ஓர் அணியில் உள்ள ஆள்களின் எண்ணிக்கைப் படி கட்டங்கள் இருக்கலாம்.

வரதன்: சற்று விளக்கமாகச் சொல்லுங்கள் மாமா!

மாமா: நான் சொன்னது போல நான்கு பேர் விளையாடுவதா னால் ஆறு கட்டங்கள் கீற வேண்டும். ஐந்து பேர் விளையாடுவதானால் எட்டுக் கட்டங்கள் கீற வேண் டும்.

அன்ரனி: எப்படி மாமா விளையாடுவது.

மாமா: இரண்டு அணிகளில் ஒன்று இறங்கும். மற்றைய அணி அதை மறிக்கும் அணி.

மோகன்: இறங்குவது எப்படி? மறிப்பது எப்படி?.

மாமா: சொல்கிறேன். கேளுங்கள். மறிக்கும் அணியின் தலைவரை "கிளி" என்பார்கள். இறங்குபவர்கள் "காய்" என்று சொல்லிக்கொண்டு முன்பக்கத்தில் இறங்குவார் கள். இறங்குபவர்களை ஒவ்வொரு கோட்டிலும் ஒவ் வொருவர் மறிப்பர்.

அமீர்: கிளி என்ன செய்வார் மாமா!

மாமா: இறங்குபவர்களைக் கிளியும் மறிப்பார். ஆனால் அவர் கணக்கோடுகளிலும் நடுக்கோட்டிலும் ஓடி மறிக்க முடி யும். இறங்குபவர்களைக் கிளி அடித்தால் அந்த அணி தோற்கும்.

அன்ரனி: மறிப்பவர்கள் அடித்தாலும் அப்படித்தானா மாமா.

மாமா: அப்படியில்லை! மறிப்பவர்களைத் தாண்டி அடுத்த கட்டத்துக்குள் ஒருவர் நுழையும் போது அவர் அடிப் பட்டால்தான் அணி தோற்கும்.

அன்ரனி: இப்படி ஒருவர் மறிப்பவர் எல்லோரிடமும் தப்பித்து வெளியேறினால் அது வெற்றியா மாமா.

மாமா: இல்லை அப்படி ஒருவர் வெளியேறிய பிறகு மீண்டும் அதேபோல் மேலேறி ஆரம்பித்த இடத்துக்கு வர வேண்டும். இப்படி வருபவரை "பழம்" என்று அழைப் பார்கள்.

மோகன்: இவர்களையும் மறிப்பார்களா?.

மாமா: ஆமாம்! இவர்களையும் மேலேறி வெளியேற விடா மல் திரும்பி நின்று மறிப்பார்கள். முதலில் கூறியது போலவே இப்போது கிளி அடித்தால் தோல்வி அடைய வேண்டும். தடுப்பவரைத் தாண்டிப் போகும் போது அடிபட்டாலும் அந்த அணி தோற்கும். பழமும் காயும் ஒரே தட்டுக்குள் வந்தாலும் அணி தோற்கும்.

மோகன்: இப்படி இல்லாமல் எல்லோரையும் கடந்து வெளியே றினால் அது வெற்றியா மாமா.

மாமா: ஆம் அப்படி வெற்றி பெற்றால் அதே அணியே மீண்டும் இறங்கும்.

வரதன்: இது நல்ல விளையாட்டு. செலவில்லாத விளை யாட்டு. புத்திசாதுரியமான விளையாட்டு இது.

மாமா: நல்லது வாருங்கள் விளையாடிப் பார்க்கலாம். அப் போதுதான் தெளிவாக விளங்கும்.


## அறியாமை எனும் இருளை விரட்டுவோம்

மாணவர்களை மதிப்பதில்தான் கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது.
**எமர்சன்**

எங்கும் இருள் என்பது கிடையாது. அறியாமைதான் இருள். அந்த அறியாமை இருளை விரட்ட நாம் உலகமெங்கும் அறிவொளியைப் பாய்ச்சுவோம்!
**இங்கர்சால்**

கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது.
**பிளேட்டோ**

என்றாவது நான் ஆசிரியரானால், அது கல்வி போதிக்க மட்டுமல்ல, கல்வி கற்பதற்காகவும் இருக்கும்.
**டொரோதி தெலூஸி**



# விரைவில் 'மாமனிதன்'

சீனு ராமசாமி - விஜய் சேதுபதி கூட்டணி மூன்றாவது முறையாக இணைந்த படம் 'மாமனிதன்'. இதில் விஜய் சேதுபதி ஆட்டோ சாரதியாக நடிக்கிறார். விஜய் சேதுபதி ஜோடியாக காயத்ரி நடிக்கிறார். தென் தமிழகம் மற்றும் கேரளாவில் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வந்த நிலையில், இறுதிகட்ட படப்பிடிப்பு வட இந்தியாவில் நடந்தது. இந்த நிலையில், படப்பிடிப்பு முழுவதுமாக முடிந்து விட்டதாக இயக்குநர் சீனு ராமசாமி தெரிவித்துள்ளார்.

இந்த படத்துக்கு இளையராஜா, அவரது மகன்களான யுவன் ஷங்கர் ராஜா, கார்த்திக் ராஜா என மூன்று பேரும் இணைந்து இசையமைக்கின்றனர்.






## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** ஆன்மிக உரையாடலில் கலந்து கொள்வீர்கள். நண்பரின் வழிகாட்டுதல் புதிய உற்சாகம் தரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உருவாகும்.

**இடபம்:** மனம் வருந்தும் வகையில் சிலர் செயல்படுவர். பொது விஷயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும்.

**மிதுனம்:** சிறப்பான செயலால் புதியவர் நட்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலை திருப்திகரமாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** தயக்கத்தினால் செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நிகழ்வு இனியதாக அமையும். மனதில் கூடுதல் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்று உபாயம் பின்பற்றுவீர்கள்.

**கன்னி:** திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பேச்சில் மங்கலத் தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்:** எதிர்மறை குணம் உள்ளவரை சந்திக்க நேரிடலாம். பணி நிறைவேற்ற அதிக பொறுப்புணர்வு அவசியம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** எதிர்கால நலன்களை கவனத்தில் கொள்வீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாத்திடுவீர்கள்.

**தனுசு:** அதிர்ஷ்ட தேவதையின் அருள்பார்வை கிடைக்கும். வெற்றிப் பாதையில் நடைபோடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிரியால் இருந்த தொல்லை குறையும்.

**மகரம்:** எண்ணமும், செயலும் உற்சாகம் பெறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கும்பம்:** நற்செயலை சிலர் கேலி, கிண்டல் செய்வர். அவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் கூடுதல் முயற்சியால் வளர்ச்சி பெறும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர் ஒருவரின் கூடுதல் பாசம் வியப்பைத் தரலாம். தொழில், வியாபாரத்தில் அதிகம் பணிபுரிய வேண்டியதிருக்கும். செலவில் சிக்கனம் அவசியம்.



**புதிய அலைபேசி கிடைக்க மூன்று வழிகள் உள்ளன.**

அவையாவன..
1. சொந்தக் காசில் வாங்குவது
2. சொந்தக்காரர்/நண்பர்களிடம் இருந்து பரிசாகப் பெறுவது
3. சிவகுமாருடன் ஒளிப்படம் எடுப்பது.

(சூர்யாவின் தந்தை சிவகுமாருடன் தன்னைச் செல்பி எடுப்பவர்களின் அலைபேசியைத் தட்டி உடைத்து விடுகிறார். மகன் சூர்யா அலைபேசி வாங்கிக் கொடுக்கிறார்.)




இளமையில்
தாயை இழந்த
ஆணும்
முதுமையில்
மனைவியை இழந்த
ஆணும்
அதிக மனச்சுமை
அடைவார்கள்.

முஷர்ரப்@MMM_MUSHARRAF


தன் பிழைகளைத் தான் உணர்ந்து திருத்திக் கொள்ளாதவரை, வேறு எவராலும் உங்களைத் திருத்த முடியாது..!!

twitter.com/Yavanika_krish

நோக்கம் உயர்ந்ததாக இருந்தால் மட்டும் போதாது. அதை அடைவதற்கான வழிமுறையும் சரியாக இருக்க வேண்டும்

twitter.com/Scientist_Man

ஆயிரம் எதிரி இருந்தாலும் போராடி வெல்லலாம்/தோற்கலாம். ஆனால் ஒரு துரோகி இருந்தால்கூட போராட வாய்ப்பே கிடைக்காது. தோல்வி மட்டும்தான் நிரந்தரம்.



## முகமூடி

ஒவ்வொருவர் முன்பும்
ஒவ்வொரு முகமூடி..

அம்மணமாய்ச்சிரிக்கிறது
உண்மை முகம்

முயற்சிகள் முளைத்தாலும்
சமூகம் விடுவதில்லை

எனக்கு மட்டுமே தெரிந்த என்முகம்
என்றாவது ஒருநாள்
எதிர்ப்படலாம் யாருக்கேனும்..

அப்போது நான் மிகவும்
அழகாயிருப்பேன்.

ஆனால் உங்களுக்கு
என்னைப் பிடிக்காது.

## குறுங்கவிதைகள்

- மழையை அறிவிப்பதற்கு
  புறப்பட்ட தும்பி
  என் வீட்டில் சிறை.
- படிக்கத் தெரியாத ஈ
  புத்தகத்தைக் காலால்
  தொட்டுப் பார்க்கிறது.
- நடுத்தெருவில் ஏழு மாடுகள்
  எண்ணி முடிப்பதற்குள்
  கடந்த வண்டிகள் மூன்று.


வீசி எறிந்த
பொம்மையின் அருமை
அதை அடுத்த
குழந்தை எடுத்து
விளையாடும்
போதுதான் புரிகிறது.
சில நேரம் மனித
மனங்களும்
அப்படித்தான்



LG Life's Good

# முற்பணம், வட்டி இல்லாமல் 60 மாதங்கள் வரை சிறுக சிறுக செலுத்துங்கள்!

எந்தவொரு சூழலிலும் சாதாரண இன்வெர்டர் வளிச்சீராக்கிகளை போல் இல்லாமல் LG DUALCOOL இன்வெர்டர் வளிச்சீராக்கிகள் 40% வரையான அதிக குளிரூட்டல் மற்றும் 70% வரையான ஆற்றல் சேமிப்பை உறுதிசெய்கிறது. LG DUALCOOL இன்வெர்டர் வளிச்சீராக்கிகள் அபான்ஸில் மட்டுமே உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.




70%

INVERTER COMPRESSOR 10 YEAR WARRANTY

Dual Inverter COMPRESSOR

ANTICORROSION OCEAN BLACK PROTECTION For Sri Lankan Conditions

| Capacity | 12000btu (R410a) | 18000btu (R32) | 24000btu (R32) |
|---|---|---|---|
| Model No. | JS-Q126EAP8 | S3-Q18KL2WB | S3-Q24KE2WB |
| Price | ரூ.119,990/- | ரூ.159,990/- | ரூ.194,990/- |
| Discount | ரூ.24,000/- | ரூ.20,000/- | ரூ.27,000/- |

நிபந்தனைகள் உண்டு

60 மாதங்கள் வரை வட்டி இல்லை

Sampath Cards, Nations Trust Bank, HSBC, PAN ASIA BANK, HNB, NDB bank, Standard Chartered, DFCC BANK

0115 999 000 Buy Abans.com

அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.

Abans








126W
CL151
ரூ.22,499
விசேட விலை
ரூ.19,999




80W
CL15AE
ரூ.25,999
விசேட விலை
ரூ.23,299




230W
CL20AE
ரூ.29,999
விசேட விலை
ரூ.27,999




225W
CL30XC
ரூ.36,999
விசேட விலை
ரூ.34,999




230W
CL604AE
ரூ.41,999
விசேட விலை
ரூ.37,999

நிபந்தனைகள் உண்டு

60 மாதங்கள் வரை வட்டி இல்லை

Sampath Cards, Nations Trust Bank, HSBC, PAN ASIA BANK, HNB, NDB bank, Standard Chartered, DFCC BANK

0115 999 000 Buy Abans.com

அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.

Abans

HOTLINE: 011 5 999 000

சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.

அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் கொண்ட முகவர்களிடம் பெறலாம்.

LG Life's Good

# இதற்கு முன் கண்டிராத உயரிய வர்ணங்கள் மற்றும் இருண்ட கருமையுடன்

LG SUPER UHD TV 4K

55" | 65" ஆகிய அளவுகளில் கிடைக்கும்



நிலையான 3 வருட உத்தரவாதம்

IPS 4K
True Colour From Any Angle

LG யின் தனித்துவமான இந்த தொலைக்காட்சியில் எந்தவொரு கோணத்திலிருந்து மற்றும் திசையிலிருந்து பார்க்கும் போது அசல் காட்சிகள் மற்றும் அசல் வர்ணம் தெட்டத் தெளிவாக தெரியும்.

LG SUPER UHD TV 4K
4K Resolution

8.3 மில்லியன் பிக்சலுடன் ஃபுல் HD தொலைக்காட்சியை விடவும் 4 மடங்குகளுக்கு மேலான துல்லியத்தைக் கொண்டுள்ளதனால் பிரம்மாண்ட திரையிலும் தெட்டத் தெளிவாகவும், துல்லியமாகவும் பார்த்து ரசிக்க முடியும்.

Nano Cell™ Technology
நிற அலையிலுள்ள சகல வர்ணங்களையும் உள்ளடக்கி யதார்த்தமான முறையில் நேரடி காட்சிகளாக தருகிறது.

LG ThinQ®
voice recognition மற்றும் Google Assistant தொழில்நுட்பம் இதில் உள்ளது

webOS 3.5

DOLBY ATMOS™

*நிபந்தனைகள் உண்டு. முன்னறிவித்தலின்றி விலைகள் மற்றும் ஏனைய சலுகைகள் மாறலாம். மேலுள்ள சலுகைகள் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளுக்கு மாத்திரமே பொருந்தும்.


ரூ. 379,999 இலிருந்து

0% INTEREST FOR CREDIT CARD HOLDERS

Sampath Cards, Nations Trust Bank, HSBC, DFCC BANK, PAN ASIA BANK, HNB, NDB bank, Standard Chartered, UNION BANK

Abans

## மரண அறிவித்தல்



# நல்லதம்பி சுப்பிரமணியம்

யாழ்.சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் 15.02.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நல்லதம்பி (நல்லராசா மாஸ்டர்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ரதி (ரீச்சர்), காலஞ்சென்ற மதிவதனி, தேவி, ராஜ திலகம், சந்திரமதி, சிவபதி (சுசி ரீச்சர் - கனடா), கலாராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆறுமுகம் (T.A), நடராசா (I.S.A), நல்லையா (T.A), Dr.ஜெயராசா (அம்பிகை வைத்திய நிலையம், வட்டக்கச்சி), இராஜேஸ்வரன் (கனடா), தயாபரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாளினி, சரவணபவன், நிஷாந்தினி, மதி, காந்தரூபன், காந்தகுமார், தமயந்தி, ஜெகமதி, சுஜந்தினி, அகிலன், Dr.துஷியத்தி, ஜெயமாருதி, மோனிசா, கோபிசா, தேனுகா, கஜாலினி, காயத்திரி, காலஞ்சென்றவர்களான Dr.நாகரூபன், நளினி, சுகந்தன், கௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணா, மதுரிகா, மயூரா, கோபி, சர்மதா, காந்த நிகேதன், பிரேமிகா, ஆரியா, கிரிஷிகன், பிரதுவி, சனகன், ஆயூசன், கமலவன், அக்சவி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்தில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்தியக்காட்டு ஒழுங்கை,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

(CS/23398)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 913 1184, 077 800 7206

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17 . 12 . 1963

தோற்றம் 15 . 02 . 2019

### திருமதி தயாரூபி ராஜகுலசிங்கம்

(குண்டக்கா - தயா)

நேற்றுவரை நேரிருந்து நெஞ்சினிக்க உபசரித்தாயே
தேற்றிடவும் ஆளின்றி தேம்பியழ எங்குசென்றாய்
ஊற்றுப்போல் ஊறிடும் உன்னன் பிற்கும் இணையுண்டோ
ஆற்றிடயினி யார்தான் அன்னைக்கீடு ஏதுமுண்டோ
சாற்றவொண்ணாத் துயரெமக்கு சாந்திபெற வேண்டுமுன் ஆத்மா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் துயரிலும் பங்குகொள்கின்றோம்


**புதிய நதியா நகை மாடம்**
இல.73,103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8397, 222 3261

**மைதிலி நகை மாடம்**
89V, Kasthuriyar Road, Jaffna.
021 222 7902
E-mail: maithilynagaimaadam89@gmail.com
யாழ் மைதிலி கொழும்பு

**Bala Vinayakar Motors**
No.08, Stanley Road.
021 222 5376

**கந்தவேலன் றேடர்ஸ்**
110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2822 , 077 225 0377.
021 222 4496


## மரண அறிவித்தல்

# திருமதி செல்வம்மா (செல்வதி) பரமசிவம்



| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 23.07.1934 | 14.02.2019 |

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வம்மா பரமசிவம் 14.02.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பரமசிவத்தின்(பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வை.இளையதம்பி (மலாயன் ஓய்வூதியர்) - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவச்செல்வம்(லண்டன்), சிவதாஸ்(கனடா), சிவா(லண்டன்), சிவசந்தர்(லண்டன்), சிவப்பிரியா (ஆசிரியை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தா, தபோதினி, பத்மசேகரம், நிர்மலா, அஞ்சலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்லமுத்து காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், சிவஞானசுந்தரம் மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சிவபாக்கியம், சிவனேஸ்வரி மற்றும் சந்திரவதனா காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் புவனேஸ்வரி, செல்வராசா காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கனகரத்தினம் காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரண்யா, பானுஜா, திவ்யன், லக்ஸி, நிவேஷ், ஆதித்யன், ஆர்த்திஶ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2019) திங்கட்கிழமை காலை இடம் பெற்று முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயிலடி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(IN 9425)
(14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஹோட்டலுக்கு தங்கி நிற்க கூடிய மும்மொழியும் தெரிந்த முகாமையாளர் தேவை. (AKN 657)(04,17)

தொடர்பு: 077 802 5879

## திருவாசகம் முதியோர் இல்லம்

89, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

அண்மையில் ஆரம்பிக்கப்பெற்ற முதியோர் இல்லத்தில் இணைய விரும்புவோர் மேற்படி விலாசத்துடன் தொடர்பை மேற்கொள்ளவும். (CS/23397)(11,17)

நிர்வாகி
021 435 5082, 011 485 2232

வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் வழங்கிய கடன்களை வசூலிக்கும் அதிகாரபூர்வமான எமது நிறுவனத்தில்

## யாழ் மாவட்டத்தில்

வெற்றிடங்கள் உள்ளன.

## கடன் வசூலிக்கும் அதிகாரி

- வயது 18-45ற்கு இடைப்பட்டவர்கள்
- மோட்டார் சைக்கிள் உரிமையுடையவராயிருத்தல்
- இத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அடிப்படை சம்பளம், கமிஷன் மற்றும் மோட்டார் வாகன கொடுப்பனவுடன் மாதமொன்றிற்கு ரூ. 30,000/-க்கு அதிக சம்பளம்.

நேர்முக பரீட்சை 20, 21 காலை 9.00 மணி முதல் பகல் 1.00மணி வரை

**CENTRAL RECOVERIES**
40/2, N.J.V. குரே மாவத்தை, ராஜகிரிய. (கேட்வே சர்வதேச கல்லூரிக்கு அருகில்)
தொடர்பு: 0704-800711
E-mail: centralrecoveries@yahoo.com

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகர், சிவன்பண்ணை வீதியில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு.

077 239 8221

## விற்பனை முகவர்களும் விநியோகத்தர்களும் தேவை

றியல் வூட் தன்மை கொண்ட வூட் பினிஷ் 100% நீர்புகா தன்மை மற்றும் கறையான் எதிர்ப்பு மற்றும் ஏற்கனவேயுள்ள உங்கள் நிலங்களுக்கான லேஓவர் எட்ட முடியாத உத்தரவாதமும் செயல்திறனுக்குமான உறுதி.

076 827 7833 (IN/11583)(11,17)

## மணமகன் தேவை

யாழ்.இந்து சைவபோசனம் 1987.05.25 இல் பிறந்த லக்கினத்தில் சூரியனும் 2இல் புதன், செவ்வாய், கிர.பாவம் 49. அச்சுவினி 3ஆம் பாதமும் உடைய பட்டதாரி அரசதொழில் புரியும் மணமகளுக்கு மணமகன் தேவை. (CS/23389)(11,17)

077 460 6507
(பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

## வேலை ஆள்கள் தேவை

கோழி இறைச்சிக்கடையிலும் கோழிப்பண்ணையிலும் வேலை செய்வதற்கு (இரவும் பகலும்) ஆண்கள் தேவை.
குறிப்பு: மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் தேவை. (CS 23396)(04,17)

077 271 8149

## வேலை ஆள்கள் தேவை

**மாடு, ஆடு, கோழி** ஆகியவற்றுடன் கூடிய **விவசாய பண்ணைக்கு** பராமரிப்பாளர் தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. (CS 23400)(04,17)

077 773 0567

## மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலி.வடக்கு பிரதேசசபையின் கருகம்பனை வித்தகபுரம் (சீதாவலை) சவாரி விடந்தையில் யாழ்.மாவட்ட சவாரி சங்கத்துடன் இணைந்து வலி.வடக்கு மாட்டுவண்டிச் சவாரிச் சங்கம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் A,B,C,D ஆகிய நான்கு பிரிவுகளிலும் முதல் இடம்பெறும் காளைகளுக்குத் துவிச்சக்கரவண்டி பரிசாக வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த காளைகளும் தவறாது வருகைதரவும். மேலும் மூன்று இடங்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

**வலி.வடக்கு மாட்டுவண்டிச் சவாரிச்சங்கம்.** (CS/23386)(11,17)

## அதி கூடிய வட்டிக்கு ஈடு வைத்து மீட்க முடியாமல் உள்ள உங்களது காணிகளை மீட்க அழையுங்கள்




- குறைந்த வட்டி
- குறைந்த ஆவணங்கள்
- விரைவான சேவை



070-5979286

## Edlocate Study Abroad Day in Jaffna

23rd Feb'19 | 10am - 4pm
Tilko Jaffna City Hotel
Study in Australia, New Zealand & Malaysia in
75 Universities & Polytechnics | TAFE Colleges

**Courses Available:**
Foundation | Diploma | Bachelor Degrees | Postgraduate Diploma | Masters | PhD

- சிறந்த பல்கலைக்கழக விரிவுரையாளரின் நிபுணத்துவமிக்க பயிற்சியின் மூலம் நீங்கள் அடைய விரும்பிய IELTS மதிப்பெண்ணை பெற்றுக்கொள்ளலாம்
- கற்கைநெறியை நிறைவு செய்யும்பொழுது Australia or New Zealand ஆகிய நாடுகளில் 2-3 வருடங்கள் work visa பெற்றுக்கொள்ள தகுதியுடையவராகுங்கள்
- Study, Work & Live in Australia or New Zealand
- உங்கள் குடும்பத்தினரின் முக்கிய நிதிக் கட்டுப்பாடுகளின்றி மாணவர்கள் உயர்கல்வியை தொடர வழிகாட்டல்கள் வழங்கப்படும்
- கற்கைநெறி விண்ணப்பங்களை தாக்கல் செய்வதிலிருந்து விசா வரையான அனைத்து சேவைகளும் மிகவும் திறமையாகவும் எவ்வித கட்டணமும் இல்லாமல் கையாளப்படும்

50% off for IELTS Classes*

Scholarships For High Achievers

*Conditions apply

edlocate — Reach Light Beyond Borders — www.edlocate.lk
Address: C/O IIS, City Campus, 200, Sivan Pannai Road, Jaffna
Email: jaffna1@edlocate.lk To Register: 0772223178

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராஜா



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராஜா 11.02.2019 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்து ராசா - சித்திரா தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தியின் பாசமிகு கணவரும், நந்தகுமார், டிலிப்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துஷா, டிலானி ஆகியோரின் மாமனாரும், ஜென்சி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், துரையப்பா, சுந்தரலிங்கம், சின்னத்தங்கம், இராசமணி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவநாதன், ஜீவசோதி, ஜெயந்தி, ராஜெயந்தி, கிரி, காலஞ்சென்ற பாபு ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2019) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32, பிரம்படி லேன், கொக்குவில். (CS/23381)(11,17)

தகவல்: அ.ஜெயபாலன்

### செல்லையா கோடீஸ்வரன்

சட்டத்தரணி - B. A London
(அகில இலங்கை எழுதுவினைஞர் சங்கத் தலைவர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் நீராவியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் உருத்திரா மாவத்தை வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி செல்லையா கோடீஸ்வரன் 15.02.2019 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பென்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr. சித்திரவேலு - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கோணேச ரஞ்சிதம் அவர்களின் பாசமிகு கணவரும், Dr. பரமேஸ்வரன் (U.S.A), கோணேஸ்வரி (U.K), சித்திரா (Dubai), Dr. செல்லையா சிவகுமாரன் (பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. ஞானசெல்வி (U.S.A), சிறீவசந்தன் (U.K), சிவனேசன் (Dubai), Dr. கிரித்திகா (தாவடி) ஆகியோரின் அன்பு மாமனும், மயூரன் மது ஷாலினி, அஞ்சனி, வானதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்சாலையில் காலை 8.00 மணிமுதல் 11 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 18.02.2019 திங்கட்கிழமை உவர்மலை திருகோணமலையில் உள்ள அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 12.30 மணிக்கு இறுதிக்கிரிகைள் நடைபெற்று திருகோணமலை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த இந்த அறிவித்லை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

146, கீழ் வீதி (Lower Ra)
உவர்மலை (orr's hill)
திருகோணமலை.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

077 613 1944 (cs 23388) (13.17)

## ABB நாடு தழுவிய விநியோகஸ்தர்கள் தேவை

பவர்லைன் மின்சாரகம்பனி.12 வருடகால சேவை வழங்களின் சிறப்பை கொண்டாடுவதுடன் இலங்கை மின்சார பொறியிலாளர்கள் துறை மதிப்பிற்குரிய ABB Group உடன் சேனல் பங்காளராக வெகுமதி அளித்துள்ளது. இது பவர்லைனின் அர்ப்பணிப்பினாலும் கடுமையான உழைப்பினாலும் கிடைக்கப் பெற்றதாகும். நாம் உங்களை எமது விநியோகஸ்தர் வலைபின்னலுடன் இணைந்து சிறந்த நன்மைகளை அறுவடை செய்வதற்காக அழைக்கின்றோம்.

- நாம் அனைத்து வகையான உலகறிந்த ABB உற்பத்திகளான MBC, MCCB, RCCB, தொடுவான்.தேடல் உற்பத்தி சாதனம் (மின்னலிலிருந்து பாதுகாப்பதற்கான உபகரணங்கள்) மற்றும் ஏனைய சாதனங்கள். அவை உங்களுக்கு எப்போதும் எந்நேரமும் சிறந்த பாதுகாப்பு மற்றும் பணத்தின் பெறுமதியை வழங்கும்.
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நாங்கள் கால அட்டவணையில் எப்போதும் உங்கள் குறிப்பிட்டதேவைகளைப் பூர்த்திசெய்யக் கடமைப் பட்டுள்ளோம்.
- எமது கையடக்க செயலியைப் பயன்படுத்தி உங்களுக்கு உங்களது தேவைகளை இலகுவாக மற்றும் உடனடியாகப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

**POWERLINE ELECTRIC COMPANY** (IN/115624)(11,17)
No. 458, Kandy Road, Kelaniya.
Te: 114 544 444, 0759 000 898, 0759 000 822, 0773 000 838
E : info@powerlinelanka.com W: www.powerlinelanka.com

## வேலைவாய்ப்பு

**வியாபாரத்தை செய்யும் மக்களுக்கு செலுத்தும் குறுகிய கடன் தொகையினை எமது நிறுவனம் வழங்குகின்றது. அதில் வேலை செய்வதற்கு 22 - 35 வரையான வயது எல்லை உடைய ஆண்களுக்கு எமது நிறுவனம் சிறந்த வேலை வாய்ப்பை வழங்குகின்றது.**

- 50.000 இற்கு மேலான மாத வருமானம் (பயிற்சி காலத்திலும்)
- மோட்டார் வாகனம் மற்றும் எரிபொருள் வசதி வழங்கப்படும்.
- தொலைபேசி மற்றும் தொலைபேசி இணைப்பும் வழங்கப்படும்.
- உணவு வசதி இலவசம் மற்றும் தங்கும் வசதியும் உண்டு. (திருமணம் செய்தவர்களுக்கு வெவ்வேறு தங்குமிடம் வழங்கப்படும்)
- நிறுவனத்தினால் சீருடை வழங்கப்படும்.
- EPF / ETF

**தகைமைகள்**

1. சாரதி அனுமதிப்பத்திரம் வேண்டும்.
2. O/L வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
3. சிங்களமொழி பேசக்கூடிய தகைமை இருத்தல் வேண்டும்.

**நேர்முகப்பரீட்சை**

நேர்முகப் பரீட்சை **2019.02.18** இல் இருந்து குறிப்பிட்ட நாள்களுக்குள் இடம்பெறும். நேர்முகப்பரீட்சையின் பின் வேலை வழங்கப்படும். வரும்போது உண்மை பிரதிகளைக் கொண்டு வரவேண்டும்.

**இல.198/1, ஹொரகஸ்முள்ள, டிவுலபிட்டிய.**
**077 225 6571, 077 731 6039,**
**031 224 3372**

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்ப நண்பர்
**க.இராசகுலசிங்கம்**
அவர்களின்
அன்பு மனைவியார்
**திருமதி**
**தயாரூபி**
**இராசகுலசிங்கம்**

அவர்களின் எதிர்பாராத இழப்பினால் தவித்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஐயாத்துரை சிவராசா
மீசாலை மேற்கு. (CSn 9427)(11,17) குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

**மெறையின் ட்ரைவ்**
முகப்பாக
**20 பேர்ச்சஸ் சதுர காணி**
தெஹிவளை, வெள்ளவத்தை நகர எல்லலைக்குள்
( கிளீன்பார்க் அருகில்)
0777 328 634 / 2 593 220

நிறைவாழ்வு மையம்
மக்லியோட் வைத்தியசாலை வளாகம்,
இணுவில்.

## சர்வதேச பெண்கள் தினம் 2019 - கவிதை, கட்டுரை, சித்திரப் போட்டிகள்

**சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி**
**"நன்மை தரும் சமத்துவம்" என்னும் தொனிப்பொருளில் கீழ்வரும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

- **கவிதை** :- A4 தாளில் 26 வரிகளுக்கு மேற்படக் கூடாது.
- **கட்டுரை** :- 5000 சொற்களுக்கு மேற்படக் கூடாது.
- **சித்திரம்** :- 17x18" தாளில் வர்ணங்கள் பாவித்தோ/ இன்றியோ கீறப்படலாம்.

**முடிவு திகதி:- 01.03.2019**

**அனுப்ப வேண்டிய முகவரி** :- **"நிறைவாழ்வு மையம்" இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகம், இணுவில்"** அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.

**வெற்றியீட்டியவர்களுக்கு**

- முதலாம் பரிசுத் தொகை - Rs.5000
- இரண்டாம் பரிசு தொகையாக - Rs.3000.
- மூன்றாம் பரிசுத் தொகையாக - Rs.2000 வழங்கப்படும்.

**சர்வதேச பெண்கள் தின நிகழ்வு மார்ச் 8 ஆம் திகதி**
**'Shiloh Auditorium'**
(யாழ்ப்பாண கல்லூரி. வட்டுக்கோட்டை இற்கு முன்பாக)
**முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி மதிய உணவுடன் முடிவுறும்.**
**வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும்.**

**- நிர்வாகம் -**

(CS/23372)(11,17) (IN/10761)(11)

**தொடர்புகளுக்கு:- 021 205 4443, 077 917 7230**

## சமையல் பராமரிப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள வீட்டில் தங்கியிருந்து வயதான தம்பதியினரைப் பராமரிக்கக் கூடிய சமையல் மற்றும் வீட்டு நிர்வாகம் தெரிந்த பொறுமையான 50 வயதுக்குட்பட்ட பொறுப்புக்கள் குறைந்த பெண் தேவை. மாதச் சம்பளம் ரூபா 25.000/- இற்கு மேல் வேலைத் திறமைக் கேற்றபடி வழங்கப்படும்.

**076 751 3527** (CS/11362)(11,17)

## வீடு இடித்து அகற்ற

யாழ்ப்பாணம் கில்னர் வீதியிலுள்ள முழுமையான பழமை வாய்ந்த வீட்டை இடித்து அகற்றுவதற்குத் தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 112 5931** (AVA/476)(11,17)

## சிறுநீரகம் தேவை

35 வயதுடைய ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு $O^+$ வகை சிறுநீரகம் தேவை. வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/23271)(11,17)

**076 634 5906**

**SINGER**
Trusted Excellence

## ஒரு மகத்தான இடம் உங்கள் சேவையை நாடுகிறது

### கிளை முகாமையாளர்கள்

**சகல மாவட்டங்களிலும் கிளைகளின் விரிவாக்கம் மேற்கொள்ளப்படுவதால் நாடெங்கும் வெற்றிடங்கள் உள்ளன.**

**தொழில் விபரம்**

- கிளையின் அன்றாட அலுவல்களைத் திட்டமிட்டு, ஏற்பாடு செய்து, முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு
- மாதாந்த விற்பனை இலக்குகளை நிறைவேற்றுதல் மற்றும் கண்டிப்பான மீட்பு விகிதத்தைப் பேணுதல்
- கையிருப்புப் பதிவேடுகளைப் பேணுதல்
- ஊக்குமுள்ள அலுவலர் அணிக்குத் தலைமை தாங்குதல்

**தகுதி விபரம்**

- மிகப் பொருத்தமான விண்ணப்பதாரர் தொழில் முனைவு மனநிலை உடையவராக இருக்க வேண்டும்
- வாடகைக் கொள்வனவு, கையிருப்புப் பதிவேட்டின் பேணுதல், வாடிக்கையாளர் சேவை மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் அறிவுள்ளவராக இருக்க வேண்டும்
- ஆட்களின் முகாமைத்துவத்தில் சிறந்த திறமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும்

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், அவர்களின் நிதி வலிமையை நிரூபிப்பதற்காக, ரூ.150,000/- ஐ பாதுகாப்பு வைப்பாகச் செலுத்த வேண்டும். ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் தரகுப்பணம் உட்பட ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மாதாந்த வருமானத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு விற்பனைகள் மற்றும் விற்பனை நிலையத்தின் நிர்வாக அலுவல்கள் குறித்து விரிவான பயிற்சி வழங்கப்படும்.

நாம் கோரும் தகுதிகள் உங்களிடம் இருந்தால், உங்கள் சுயவிபரக்கோவையும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களும் உள்ளடங்கிய விண்ணப்பத்தை இந்த விளம்பரம் பிரசுரமான 07 தினங்களுக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும். நீங்கள் விரும்பினால், careers@singersl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் விண்ணப்பத்தை அனுப்பலாம்.

உதவி முகாமையாளர் - மனித வளங்கள்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. 80, நவம் மாவத்தை, கொழும்பு 02.

Great Place To Work. Best Workplaces



## பெண் வேலையாள்கள் தேவை

**காசாளர், Photo copy Operater, விற்பனையாளர்**

*Note:*

1. A/L. படித்திருத்தல் விரும்பத்தக்கது.
2. படம் ஒட்டிய Bio data கட்டாயமாக கொண்டு வரவும்.
3. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 23352)(4,17)

**Add: 386, Clock tower Road, Jaffna.**
(புதிய Lingan Cool Bar அருகே)
**077 063 3116**

## விற்பனையாளர் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(N 9423)(04,17)

**த.குமாரசாமி அன் சன்ஸ்**
252, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## ஆள்கள் தேவை

மணிக்கூட்டு வீதியில் உள்ள **போன் கடை** ஒன்றுக்கு வியாபாரம் செய்யக்கூடிய **18 அல்லது 19 வயதுடைய ஆண் தேவை.**

**077 285 0811** (CS/23380)(11,17)

## WANTED

**JAFFNA** 15 to 20 Acres Land Needed For Tourism Project in Sea Front with Good Beach.

FORESIGHT

**0712 841 221**

## திருமண இணைப்புச்சேவை

காளி துணையுடன் எமது சேவையில் உள்நாட்டு உத்தியோக மணமகன்மார் வெளிநாட்டு மணமகன்மார் மற்றும் உள்நாட்டு உத்தியோகம் மணமகள்மார் மற்றும் வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் மணமகள்மார் ஏராளம் உள்ளனர். RC, Non RC மணமக்களும் உண்டு. உங்கள் வீட்டில் மாங்கல்யம் மகிழ இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

வேறு சேவைகள்

வெளிநாடுகளுக்கான Student Visa, Visit Visa சகல விதமான வீசா ஏற்பாடுகள் செய்து தரப்படும். (CS 23374)(04,17)

**077 946 4287/077 215 1329**

## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் உள்ள நடுத்தர குடும்பம் ஒன்றுக்கு பகல் நேரத்தில் குழந்தை பராமரிப்பு செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 23376)(04,17)

**077 977 7871**

## PHYSICS PAPER CLASS 2019

முப்பத்தாறு ஆண்டுகால வினாத்தாள்கள் தனியாகவோ, குழுவாகவோ 78, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் செய்து காண்பிக்கப்படும்.

(CS 23370)(4,17)

**076 6643257/077 1772359**

## வீடு வாடகைக்கு

மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து 2 கி.மீட்டர், தூரத்தில் பிரதான வீதியுடன் பிரயோசனங்களுடன் கூடிய வீடு வளவு வாடகைக்கு கொடுக்கப்படும்.

**தொடர்பு: 0711 915 386**

## குத்தகைக்கு இடம் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீட்டுடன் நீர், மின்சார வசதியுடன் காணி தேவை. (குறைந்தது 4 பரப்பு தேவை)

(CS 23383)(04,17)

**077 025 6640**

## அறை வாடகைக்கு

மருதனார்மடம் அருகில் வேலைக்குச் செல்லும் / கல்வி கற்கும் மாணவிகள் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும்.

**077 850 2673** (CS/23329)(11,17)

## காணி வாடகைக்கு உண்டு

நல்லூர் அரசடியில் அமைந்துள்ள வீட்டுடன் காணி வாடகைக்கு உண்டு.

(CS 23385)(04,17)

**077 251 6357**

## காணி விற்பனை

நாவற்குழி கேரதீவு பிரதான வீதியில் இருந்து 100 மீ தூரத்தில் குடியிருப்பதற்கும் தென்னை பயிரிடுவதற்கும் உகந்த 20 பரப்பு (நெ.ப.) காணி விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தவிர)

(CS 23369)(04,17)

**077 900 8439**

## காணி விற்பனை

மேற்படி எனக்குச் சொந்தமான காணி ஒன்று வேலணை வங்களாவடிச் சந்தியில் (வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாக) விற்பனைக்கு உள்ளது. இக் காணி 4 பரப்பும் 4குளியும் கொண்டதாகும். இக்காணியினுள் 3 அறைகளும் கூடிய அத்திவாரமும் தண்ணீருடன் கூடிய கிணறும் உள்ளது. விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

(N 9207)(04,17)

**077 602 5765/077 496 6870**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் நாயன்மார் வீதியை முகப்பாகவும், அரசடிப் பிள்ளையார் கோயிலையும் சமுர்த்தி வங்கியையும் எல்லைகளாகக் கொண்டதும் முள்ளுக் கம்பியினால் வேலி போடப் பட்டுள்ளதும், ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**077 041 8036** (N.11584)(11,17)

# மரண அறிவித்தல்

## மாப்பானர் சிவலோகம்



யாழ்ப்பாணம் ஊரங்குனை, கட்டுவன் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பானர் சிவலோகம் 15.02.2019 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பானர் சின்னாச்சி தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், இராசையா, நடராசா, ஆசைப்பிள்ளை, நமசிவாயம், சாவித்திரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, ராசம்மா, சின்னத்துரை,கோபால், கமலராணி மற்றும் புவனேஸ்வரி, கனகலிங்கம் திலகவதி, முருகையா, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் அரிச்சந்திரன், ரவிச்சந்திரன், ஹரிச்சந்திரன், ரஞ்சினி, ரதி, ஜேயச்சந்திரன், சாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதி, நிதி, இராஜகுமார், கோகிலநாதன், மேகலா, ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் திவாகர், திலீபன், திவியா, பிறேமி, நிகாரிஷா, கரிஷா, நிதுஷா, அகினா, அமினா, அபிலாஸ், அபிநயா, கிர்த்தியன், கிருஜன், கிர்த்தனா, கிசாந்தன், சஸ்வினா, அஸ்வினன், சமிஷா, சஸ்விகன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 23377)(14,17)

**தகவல்:சி.ஜேயச்சந்தின் (றோஸ்)**
**மகன்**

**021 222 7429**


**BCAS Ranked "Platinum Partner" No.1 once again**

Pearson | BTEC | University of Wolverhampton | University at Albany | University of Canberra | RICS | CIOB

| | | |
|---|---|---|
| **BUSINESS MANAGEMENT MARKETING \| HRM** — HND — Leading to **BA (Hons)** from the UK Universities | **QUANTITY SURVEYING** — HND — Leading to **BSc (Hons)** from the UK Universities | **COMPUTING** — HND — Leading to **BSc (Hons)** from the UK Universities |
| **BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY** — HND — Leading to **BSc (Hons)** from the UK Universities | **CIVIL ENGINEERING** — HND — Leading to **BEng / BSc (Hons)** from the UK Universities | **LAW** — LLB — Leading to **LLB (Hons)** from the UK Universities |

UGC Recognized TVEC

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna



Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Employer Brand Award 2017 | Asia's Training Excellence Award 2017

**Mount Campus**
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

**Kandy Campus**
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

**Kalmunai Campus**
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

**Corporate Office**
32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

## வாடகைக்கு வீடு தேவை

யாழ். நகரில் இருந்து 10 Km இற்கு உட்பட்ட பிரதேசத்தில் 10 000/= ரூபாவிற்கு உட்பட்ட வாடகை கொண்ட வீடு தேவை.

-077 807 0332, 076 639 8980

## பணியாளர் தேவை

1. மில் வேலை செய்யக் கூடியவர்கள்
2. பொதி செய்வதற்கு (பெண்கள்)

-077 772 2215

## விற்பனைக்கு

லான்ட் மாஸ்டர் குவாட்டா 550 - SO XXXX பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-075 978 7223

## தேவை

முட்டை இடும் கோழி (Layer Chicken) 3 தொடக்கம் 6 மாதம்

077 220 8268/077 929 6979

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை

15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம் குளிசை என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாள்களில் அற்புதமான அழகை காண்பீர்கள்.**

221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

077 210 6155

## கண்ணீர் அஞ்சலி



எமது பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் விரிவுரையாளர் திருமதி **புராதனி மதனரஞ்சன்** அவர்களின் அன்புத் தந்தையும், **கணிதம் மற்றும் புள்ளி விவரவியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.மதனரஞ்சன் அவர்களின் அன்பு மாமனாருமாகிய**

**சுந்தரமூர்த்தி ஏழூர்நாயகம்**

அவர்கள் 13.02.2019 புதன்கிழமை இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

## விற்பனைக்கு

பாவித்த கதவுநிலை இரண்டு, ஒரு சோடி கதவு, கொங்கிறீற் கற்கள் 200 வரையில் விற்பனைக்குண்டு.

075 743 2461

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

077 557 9621

## கடை வாடகைக்குண்டு

திருநெல்வேலி சந்தியில் கடை வாடகைக்கு உண்டு.

077 038 6580

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் K.K.S றோட் கில்னர் லேனில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு கிழமை மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

-077 703 5457

## துயர் பகிர்கின்றோம்

**செல்லையா கோடீஸ்வரன்**

**(BA London, சட்டத்தரணி)**

அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

**சகோதரி - சோதீஸ்வரி (சோதி) மீசாலை.**

(CS/23387)(11,17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 06 . 1937 — இறப்பு 16 . 02 . 2019

# வேலன் நடராசா

மதவடி, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் நடராசா நேற்று (16.02.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சிவஞானம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் சீதாதேவி, பிரதீபன், சௌமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வநாயகம், கலைச்செல்வன், வேணுகா ஆகியோரின் மாமனாரும் பௌசியா, கௌசாசினி, தனுசன், துஸ்ந்தி, பாணுசா, கோர்ன்நிக்சன், சர்வின் ஆகியோரின் பேரனும் அஸ்விகா, அர்மிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ந.பிரதீபன் (மகன்)

## விற்பனைக்கு

இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்திருக்கும் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. - 077 615 3431

## வீடு விற்பனைக்கு

சங்கானை பிரதான வீதி, கொமர்சல் வங்கிக்கு முன்பாகவுள்ள குளத்தடி வீதியில் (பிரதான வீதியிலிருந்து 20m தூரம்) புதியமாடி வீடு விற்பனைக்குண்டு.

077 217 8541

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் Shoping complex இல் அமைந்துள்ள பெண்களுக்கான ஆடை காட்சியறைக்கு ஆடை விற்பனையில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

தொடர்பு-078 717 9149

## வீடு வளவு விற்பனைக்கு

K.K.S றோட்டில் தாவடி சந்திக்கு அருகாமையில் ஐயப்பன் கோவில் பக்கத்து லேனில் இரண்டாவது வீடு 1 1/2 பரப்பு காணியுடன் 3 அறை, 2 கோல், குசினி உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

077 598 7500, 077 132 8557

## Room வாடகைக்கு உண்டு

நல்லூர் கிழக்கில் Room வாடகைக்கு உண்டு. -078 373 8020, 075 203 9589

## Jaffna Real Estate

**காணிகள் வீடுகள் உடன் விற்பனைக்கு**

- பொற்பதி வீதியில் 6 பரப்பு காணி
- நல்லூர் சீரடி சாயி பாபா ஆயைத்திற்கு அண்மையாக 1 3/4 பரப்பு காணி
- கல்வியங்காடு 4 பரப்பு காணியும் வீடும்
- நல்லூர் பிரதேச சபைக்கு அண்மையாக ஒரு பரப்பு காணியும் வீடும்
- வசாவிளான் பலாலி வீதிக்கு அருகில் 60 பரப்பு காணி
- பலாலி வீதி, கோண்டாவிலில் 1½ பரப்பு காணி
- ஞானம்ஸ் ஹோட்டல் அண்மையாக BMC வீதியில் 2½ பரப்பு காணி
- நல்லூர் கோவில் வீதியில் 5 பரப்பு காணி
- அச்சுவேலியில் 6 பரப்பு காணியும் வீடும்
- இயக்கச்சியில் 50 ஏக்கர் காணி. விரும்பிய அளவுக்கு பிரித்து வழங்கப்படும். பரப்பு ஒன்றில் விலை ரூபா 25 000/=

எமது நிறுவனத்தின் ஊடாக விற்பனைக்கு வந்துள்ள நூற்றுக்கணக்கான காணிகள் வீடுகள் வியாபார நிறுவனங்கள் என்பவற்றை Jaffna real estate என்ற முகநூல் விருப்புப் பக்கத்திலும் www.jaffnarealestate.com என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

விவரங்களுக்கு அழையுங்கள்

076 121 4255

*(Whatsapp & Viber மூலமாகவும் அழைக்கலாம்)*

Jaffna Real Estate (Pvt) Ltd.
34/2, Sir pon. Ramanathan Road,
Thirunelveli, Jaffna.

## மரண அறிவித்தல்



மலர்வு 22 . 08 . 1953 — உதிர்வு 14 . 02 . 2019

# இரத்தினம் சிவபாக்கியம் (வதனா) -

சுதுமலை கிழக்கு மானிப்பாயினை பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினம் சிவபாக்கியம் (வதனா) கடந்த (14.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரம் பரிபூரணம் - தம்பதிகளின் அன்பு மகளும் ஜெயந்தி, றோகினி ஆகியோரின் அன்பு சகோதரியும் ராசன், சுமதி தனன்சியன் ஆகியோரின் அன்பு தாயாரும் சாந்தன் - சகிலா பிரவாகினி ஆகியோரின் மாமியும் பிரவீனா, நிதுஷ், கஜீபன், திவிசன், சஞ்சிகா, பண்பகள், துசானா, கஷ்மியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக த்ாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

077 523 2731

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்துக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் பார்சல் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 077 766 7715 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## மாபிள் வேலை


உங்கள் வீட்டுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் வேலை செய்து தரப்படும்.

சதுர அடி ரூபா 45/=

077 334 1281

## மரண அறிவித்தல்

**சிவஞானம் சிவகுமார்**



துறைமுகம் வீதி, மாதகலைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார் 15.02.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2019) திங்கட்கிழமை காலை, 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துறைமுகம் வீதி, மாதகல்.**

தகவல்: **குடும்பத்தினர்.**

## வீடும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாயில் அமைதியான நல்ல சூழலில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077262 4264

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் (திருநெல்வேலி Farm School க்கு அருகில்) வீடு வாடகைக்கு உண்டு. சிறு குடும்பம்/ உத்தியோகத்தர்கள்/ தனியார் நிறுவனம் போன்றவற்றுக்கு உகந்தது. (இடைத் தரகர் தேவையில்லை) - 077 4400 432, 076 303 1551

## வேலையாள்கள் தேவை

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலியில் இயங்கிவரும் நோத்வோ பமிலி மாட் இற்கு பெண் காசாளர், கணக்காளர் தேவை.
(வயது எல்லை 20 - 35)
(எமது வியாபார நிலையத்திற்கு அண்மித்த இடத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

**184, Palaly Road, Thirunelvely.**

## இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

MPS Brother's(Pvt)Ltd 38, இலந்தைக் குளம் வீதியில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்போது இல.30, மகாத்மகாந்தி வீதி (மணிக்கூடு வீதி), யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மரங்கள் நியாய விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(CS 23382)(14.17) **உரிமையாளர்.**


## கண்ணீர் அஞ்சலி


பிறப்பு 07.03.1929 இறப்பு 16.02.2019

காரைநகரை பிறப்பிடமாகவும் மல்லாவியை நிரந்தர முகவரியாகவும் முள்ளிவாய்க்காலை தற்காலிக வதிவிடமாக கொண்டவரும் மல்லாவி ஶ்ரீ பால சுப்பிரமணிய ஆலய ஆரம்ப கால பிரதம அர்ச்சகருமாகிய

**பிரமசிறி**
**சோமசுந்தரகுருக்கள் மகாதேவசர்மா**

16.02.2019 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அருள்மிகு யோகாம்பிகை சமேதயோகபுரநாதர் ஆலய பரிபாலசபையினர், திருப்பணிச்சபையினர், அன்னதானசபையினர், அறநெறிப்பாடசாலை நிர்வாகம்**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி மெய்யழகன்

*(முன்னாள் Lanka cement Co-operation பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பருத்தித்துறை கரவெட்டி பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகஸ்த்தர்)*


தோற்றம் 03.03.1951 மறைவு 14.02.2019

வதிரியைப் பிறப்பிடமாகவும் புனிதம் இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மெய்யழகன் கடந்த (14.02.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**D.M.வேதாபரணம் 0777733776**

## நன்றி நவிலலும் 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும்



திருமதி.
**சிவஞானசுந்தரம் சந்திரமணி** (சந்திரா) வல்வெட்டித்துறை

**கடந்த 18.01.2019 இறைவனை எய்த எமது அன்புத்தாய் திருமதி. சிவஞானசுந்தரம் சந்திரமணி(சந்திரா)**

(வல்வெட்டித்துறை) அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எங்களது சோகத்தில் நேரில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமது துயரில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிராத்தனையும் 19.02.2019 செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (**R.C.Lane**, ரேவடி, வல்வெட்டித்துறை) ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: சி.சிவசுப்பிரமணியம்
(குட்டிக்கண்ணன்) - மகன்
(**R.C .Lane**, ரேவடி, வல்வெட்டித்துறை)
தொலைபேசி :- 0769306956

## அநுராதபுரத்தில்...

ஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் தகயாகம, ஜெயசிங்க பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4மணியளவில் மாநகரசபையினரால் வீதியோரங்களை துப்பரவு செய்தபோது, வீதியோரத்திலுள்ள வடிகானில் பை ஒன்றில் வைக்கப்பட்டுள்ள நிலையில் 46 துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

துப்பரவு செய்த மாநகரசபையினர் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து அநுராதபுரம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று உடமைகளை மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் எம்.பி.எம்.ஜி துப்பாக்கியினுடையதெனவும், விடுதலைப் புலிகளின் சின்னதுடனான தொப்பி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். மீட்கப்பட்ட ரவைகளும், தொப்பியும் புதிதாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5)

## போரில்...

முழுமையாக உண்மையை மக்கள் முன்பாக பகிரங்கமாகச் சொல்லவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம், உண்மையைச் சொல்லி கவலையை வெளிப்படுத்தி மறப்போம், மன்னிப்போம் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி மாநாட்டில் நேற்று உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின்போது இராணுவம் போர்க்குற்றம் இழைத்தது என்பதை அரசு ஏற்றுக் கொள்ள பத்து ஆண்டுகள் சென்றுள்ளது. அவர்கள் இப்போது இதைச் சொல்ல வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? மனமாற்றமா? குற்ற உணர்வா? பன்னாட்டு நெருக்கடிதான் இதற்குக் காரணம்.

போரின் போது நடந்த உண்மையைக் கண்டறிவது அத்தியவசியமானது. உண்மை சொல்லப்படாமல், நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது. அந்த உண்மையின் அடிப்படையில் நீதி செய்யப்பட வேண்டும். முதல் தடவையாக உண்மையைச் சொல்லத் தயார் என்கிறார்கள். அது மாத்திரம் போதாது. குற்றம் இழைத்தவர்கள் மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளவேண்டும்.

தென்னாபிரிக்காவில் குற்றம் இழைத்தவர்கள் முழுமையான உண்மையைச் சொன்னால் மன்னிப்புக்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறி உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தார்கள். இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போது தவறான விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அங்கு எவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிவித்திருந்தார். அது தவறு. அங்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முழுமையான உண்மையைச் சொல்லாதவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவர்கள் உண்மையைச் சொல்லுகின்றபோது நாங்களும் எங்கள் தரப்பு உண்மையைச் சொல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். போரில் நிகழந்த விடயங்கள் சம்பந்தமாக உண்மை வெளிக் கொண்டு வரப்படவேண்டும்.

சகோதரப் படுகொலைகள் தொடர்பில் நாம் மறப்போம் மன்னிப்போம் என்று கூறினால், அரசும் அதையே திரும்பக் கூறும். எனவே இது தொடர்பில் நாம் அவதானமாக நடக்க வேண்டும் - என்றார்.

(ஒ.5.8.105)


## பயிற்சியுடன் ஆங்கில ஆசிரியர்களுக்கான (TRAINEE ENGLISH TEACHER) வேலைவாய்ப்பு

- பயிற்சியின் பின் நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தும் முகமாக ஆங்கில ஆசிரியர்கள் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.
- வயது 18 - 28க்கு உட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*தூர பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு

நேர்முகப்பரீட்சைக்கு உங்களது பெயர் மற்றும் விலாசத்தை SMS ஊடாக அனுப்பவும். **0785 880 680**

K & K Ads

**INTERNATIONAL TEACHER TRAINING ACADEMY**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3149 திகதி: 2019.02.16 சனிக்கிழமை பச்சை

SATURDAY FORTUNE

| வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து | போனஸ் இலக்கம் | அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் |
|---|---|---|
| 02 46 62 65 F | 38 | 64,303,760/- |

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 528
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.02.16

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 63,841,715/-

வெற்றி இலக்கங்கள்: 33 40 42 45
ஆங்கில எழுத்து: C

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▶ 222
சீட்டிழுப்பு திகதி ▶ 16.02.2019 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| R | 15 38 58 | 05 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13, 038, 456/=

2019.02.20ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


## குற்றவியல்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி மாநாடு இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் உரையாற்றியிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் போரில் ஈடுபட்ட இராணுவத்தினர் ஆகியோருக்கு எதிராக வழக்குகள் காணப்படுகின்றன. 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட அரசாலேயே அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன. இந்த வழக்குகளைத் தொடர்ந்து கொண்டிருக்க முடியாது. நாம் உண்மையைப் பேசி, கவலையைத் தெரிவித்து மன்னிப்புக் கோரி ஏனைய விடயங்களை முன்னெடுக்கவேண்டும். தொடரப்பட வேண்டிய வழக்குகள் அனைத்தும் இரு தரப்பிலும் தொடரப்பட்டுள்ளன. தற்போது உண்மையைக் கூறி மன்னிப்புக் கோரி அவற்றை நிறைவு செய்வதே வெற்றியாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் நேற்றைய மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற மனிதாபிமான மீறல்கள் தொடர்பில் வெளிவந்த காணொலிகள் மற்றும் பன்னாட்டுச் சமூகத்துக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை மீறியமை போன்றவற்றால், இலங்கை தொடர்பான பன்னாட்டுச் சமூகத்தின் போக்கு மாறியது.

இலங்கையின் இறுதிக் கட்டப்போர் தொடர்பில் இரண்டு சுயாதீன பன்னாட்டு விசாரணைகள் நடைபெற்றன. ஐ.நாவின் பொதுச் செயலராக இருந்த பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட மூன்று நிபுணர்களை உள்ளடக்கிய விசாரணைக் குழுவின் அறிக்கை மற்றும் 2014ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரைண அறிக்கை இரண்டையும் அடிப்படையாக வைத்து குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறையை முன்னெடுக்க நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இந்த இரண்டு அறிக்கைகளிலும், இரு தரப்பும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்கான போதிய சாட்சியங்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. போர்க் குற்றம் நடக்காமல் உலகில் போர் எங்கும் நடந்ததில்லை. போர்க் குற்றத்தில் போரில் ஈடுபடும் ஒரு தரப்பினர் மாத்திரம் ஈடுபடுவதில்லை. அப்படியான போர் இதுவரை நடக்கவில்லை. இலங்கை அரசு போரில் வென்றதற்கான அவர்கள் செய்தது சரி என்று அர்த்தமல்ல.

உண்மையைக் கண்டறிந்து அந்த உண்மையின் அடிப்படையில் நீதி செய்யப்படவேண்டும் - என்றார். (ஒ.5.8.105)


## வீடு வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு குறுகிய காலத்திற்கு வாடகைக்கு உண்டு.
A/C, குசினி (Rice Cooker, புதிய சில்வர் பாத்திரங்கள்), Hot Water, வாகன தரிப்பிட வசதிகள் உண்டு.
06 பேர் தங்கலாம். ஒரு நாளைக்கு Rs. 4 500/=. ஆகக் குறைந்தது ஒரு வாரத்திற்கு வழங்கப்படும்.
**குறிப்பு** : ஒவ்வோர் தடவையும் புதிய பாத்திரங்கள் மாற்றப்படும்.

**-0777 887 360**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிக்கு அண்மையில் ஒரு பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.

**-077 690 2593**

## மண் மீட்கப்...

காணி மீட்புக்காகப் போராடி வரும் கேப்பாபிலவு மக்கள், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் அவர்களது உறவினர்கள் ஆகியோர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பொலிஸார் தலைமை அமைச்சரின் வாகனத் தொடரணியை போராட்டக்காரர்கள் நெருங்காதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

'வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு', 'எமது நிலம் எமக்குச் சொந்தம்', 'எமது கடல் எமக்கு வேண்டும், எமது வளம் எமக்கு வேண்டும்' என்று மக்கள் கோசமெழுப்பினர்.

எங்களுடைய நிலத்தில் இருந்து எமது வாழ்வாதாரங்களை இராணுவம் எடுத்து உண்ணும் போது நாங்கள் இன்னும் எத்தனை வருடங்கள் காத்திருப்பது? நாங்கள் இந்த வீதியில் காய்கின்றதைப் பார்த்து எமது பிள்ளைகள் பிரபாகரனைப் போன்று இன்னொரு வடிவம் எடுப்பதற்குத்தான் இந்த அரசு ஏற்பாடு செய்கிறது. எங்களுடைய வீடு, பூமி, காடு எல்லாற்றையும் நாங்கள் அடுத்த சமுதாயத்துக்கு விட்டுச் செல்லவேண்டும். அதற்குத்தான் நாங்கள் இந்த இடத்தில் இருந்து இவ்வளவு பாடுபடுகிறோம். ஒருநாள், இரண்டுநாள், ஒருவருடம், இரண்டு வருடம் என்று இப்போது மூன்றாவது வருடமாகின்றது. எங்களுடைய பிள்ளைகள் ஆகப் பேயராய் வாழமாட்டாங்கள். அடுத்த தலைமுறை இந்தப் பிரச்சினைய எந்த வழியில தீர்க்க வெளிக்கிடுதோ? எங்களுடைய பிரச்சினையைத் தீர்க்கிறது உங்களுக்கு நல்லது என்று பட்டால் எங்களுடைய பிரச்சினையைத் தீர்த்து, முடித்து வையுங்கள். அல்லது அடுத்த சந்ததிதான் இதைத் தீர்க்க வேண்டும் என்றால் அது எங்கு போய் முடியும் என்று எங்களுக்குத் தெரியாது என்று மக்கள் தெரிவித்தனர்.

மேலும் நாங்கள் அணுவணுவாகா சாவதைவிட போராடும் எல்லோரையும் ஒரேயடியாக அரசு சாக்காட்டட்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (ஒ.5.21.ரி3)

## கொலைகள்...

கொலை விவகாரமும், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கும் ஒன்றல்ல. போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களையும் பொதுவான சட்டத்தின் கீழ் படுகொலை செய்தவர்களையும் ஒன்றாகப் பார்க்க முடியாது. இரண்டுக்கும் வேறுபாடுகள் உள்ளன. இவ்வாறு மூத்த சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் மாநாட்டில் நேற்றுப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவருக்கு முன்னதாக உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நீதி அமைச்சில் சட்டமா அதிபருடன் சந்திப்பு நடத்தினேன். தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பில் பேசியபோது லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் சந்தேக நபராக உள்ளவர் தொடர்பில் பேசப்பட்டது. அப்போது சட்டமா அதிபர், ரவிராஜ் கொலை வழக்கில் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்கின்றீர்கள். ஆனால் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் சந்தேக நபராக உள்ளவரை விடுவிக்கக் கோருகின்றீர்கள். ரவிராஜுக்கு ஒரு நீதி, கதிர்காமருக்கு ஒரு நீதியா என்று சட்டமா அதிபர் என்னிடம் கேள்வி எழுப்பினார், என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் சட்டத்தரணி கே.வி.தவராசா தனது உரையில் தெரிவித்ததாவது;

முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் முதலாவது எதிரியாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன். இரண்டாவது எதிரியாகக் குற்றம் சுமத்தப்பட்டவர் பொட்டம்மான். மூன்றாவது சாள்ஸ், நான்காவது மணிமேகலை. ஐந்தாவதாகக் குற்றம் சுமத்தப்பட்டவர்தான் எனது கட்சிக்காரர். அவர் சிறையில் உள்ளார். அரச தரப்பு கூறுவதுபோன்று முக்கிய எதிரிகள் எங்கே? அவர்கள் உயிரிழந்துவிட்டதாகக் கூறுகின்றத. அது வேற விடயம்.

இங்கு நாம் என்னத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டும். மகிந்த, கோத்தா, சரத் போன்றவர்கள் மீதான கொலை முயற்சிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பிரதான சந்தேக நபர்கள் அல்ல. அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்பதில் நியாயம் இருக்கின்றது.

போர்க்குற்றம் சுமத்தப்படும் தரப்பில் உள்ளவர்கள் அனைவரும் பிரதான சந்தேகநபர்கள். அவர்கள் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற விடயம் போர்க்குற்றம். ஆனால் சாதாரண சட்டத்தின் கீழ் படுகொலை செய்த ஒருவருக்கு பீல்ட் மார்சல் பதவி, இன்னொருவர் பிணையில் சுதந்திரமாக வெளியில் உள்ளார். மக்கள் இந்த வேற்றுமைகளைப் பிரித்துப் பார்க்கவேண்டும்.

### ஆழமாக ஆராயவேண்டும்

பத்து ஆண்டுகளின் பின்னர் மறப்போம் மன்னிப்போம் என்று ரணில் விக்கிரமசிங்க வும், இராணுவத்தினர் குற்றங்கள் புரிந்துள்ளனர் என்று மகிந்தவும் கூறுவதற்கு காரணம் என்ன என்பதை ஆழமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். தென்னாபிரிக்கா பாணியிலான உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ரணில் விக்கிரம சிங்க அமைப்பதற்கு முயற்சிக்கின்றார். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தையும் அவர் சமர்ப்பித்திருந்தார்.

போரில் என்ன நடந்தது என்ற உண்மை முழுமையாக அறியப்பட வேண்டும். ரணிலும் மகிந்தவும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிடலாம் என்ற அடிப்படையிலாவது எரிந்;து கொண்டிருக்கின்ற தீயை அணைக்கலாம் என்று நினைக்கின்றார்கள்.

### தோல்வி

தென்னாபிரிக்காவில் உண்மையைக் கண்டறிதல் ஆணைக்குழு தோல்வி அடைந்தது. அங்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியவர்களுடன் சேர்த்து இரகசியமாக ஏனைய பலரையும் அரச தலைவர் விடுவித்தார். பாதிக்கப்பட்டவர்களின் குறைகளுக்கு தீர்வு வழங்கப்படவில்லை. உயர் நீதிமன்றில் இதன் காரணமாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் எப்படித் தண்டிப்பது எனக் கூறி விடுவித்தனர். இந்த வழியைப் பின்பற்றி இங்கும் பொறுப்புக் கூறாது தப்பிக்கக் கூடிய நிலமை காணப்படுகின்றது.

### கூட்டாட்சி

வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையின் மூன்று மொழிப் பிரதிகளையும் வாசித்து இருந்தால் அதில் கூட்டாட்சி இருக்கிறது என்பதை விளங்கி கொள்வார்கள். அதில் இறைமை பகிரப்பட முடியும் என்று ஆழமாகக் கூறப்பட்டுள்ளது. இணைந்த வடக்கு கிழக்கில் கூட்டாட்சித் தீர்வு இல்லையென்றாலும் அதில் ஒற்றையாட்சி, கூட்டாட்சி இரண்டும் இணைந்த கலப்பு முறையான கூட்டாட்சி உள்ளது - என்றார். (ஒ.5,8)

## சுயாட்சி...

வேண்டுமாக இருந்தால், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சித் தீர்வு வழங்கப்படவேண்டும். பன்னாட்டுச் சட்டத்துக்கு அமைவாகவே நாங்கள் எங்கள் உரித்துக்களைக் கேட்கின்றோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் மாநாடு நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் சிங்கள தேசம் என்ற ஒன்று இருந்தால் தமிழர் தேசமும் இருக்கின்றது. தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்ற சுயாட்சிக்கு உரித்துடையவர்கள். பன்னாட்டுச் சட்டத்திலும் இது சொல்லப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். ஒரு நாட்டில் வாழும் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு அந்த நாடு தவறுமாக இருந்தால், அந்த மக்கள் தனிநாடு கேட்பதற்கும் உரித்துடையவர்கள். இதுவும் பன்னாட்டுச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது.

அரசமைப்பு என்பது சமூகஒப்பந்தம். இலங்கை என்ற நாட்டுக்குள் இணைந்து வாழ்வதற்கு சமூக ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் இதுவரை மேற்கொள்ளவில்லை. இலங்கையில் இதுவரை உருவாக்கப்பட்ட இரண்டு அரசமைப்புக்களும் தமிழர்களின் சம்மதமின்றியே வரையப்பட்டன. ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்கான இணக்கத்தை நாங்கள் வழங்கவேண்டுமாக இருந்தால், சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சியை வழங்கவேண்டும் - என்றார். (ஒ.5.8.105)

## அபிவிருத்தியை...

இடம்பெறும் ஆக்கிரமிப்பே அதிகமாகவுள்ளது. மகாவலி எனவும் தொல்லியல் திணைக்க ளம் எனவும் உள்ளவை மகா வலியாகவும் தொல்லைத் திணைக்களமாகவுமே உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தி லேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

'மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற நிலையில் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளது. வராற்றுத் திரிபுபடுத்தலும் இடம்பெறுகின்றது. சட்டரீதியாக அன்றி நாடாளுமன்றக் குழுவின் ஊடாக தீர்வை முன்வைக்கவேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி கோரிக்கை விடுத்தார். தலைமை அமைச்சர் ரணிலும் அதனை ஏற்றுக் கொண்ட நிலையில், மாவட்டத்தில் வாழும் 2 ஆயிரம் முஸ்லிம் மக்களுக்கு வீடுகள் அமைக்க காணி இல்லை அதனை வழங்க இணக்கம் தெரிவிக்கவேண்டும் என்று அமைச்சர் ரிசாட் பதியுதீன் கோரினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, முல்லைத்தீவில் முஸ்லிம் மக்கள் மட்டும் நிலமில்லாமல் வாழவில்லை. 9 ஆயிரம் தமிழ் மக்களுக்கும் இருக்க நிலமின்றி வாழும் நிலையில் ஒரு இனத்துக்கு மட்டும் எப்படி காணி வழங்குவது? முஸ்லிம்களுக்கு காணி வழங்க எங்கே பரிந்துரைக்கின்றீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

கூழாமுறிப்புப் பிரதேசத்தில் என்று மாவட்டச் செயலர் பதிலளித்துள்ளார். நான்கு பக்கமும் நிரந்தரமாக தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தில் மற்றொரு கலாசாரத்தை உடைய மக்களை குடியமர்த்துவதை அனுமதிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி குறிப்பிட்டார். அந்தப் பகுதியில் ஒரு குடும்பத்துக்கு 20பேர்ச் நிலம் வழங்க அனுமதிக்கவும். நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அங்கு காணி வழங்க இணங்குகின்றார். ஏனையோரே எதிர்க்கின்றனர் என்று அமைச்சர் ரிசாட் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் குழு அமைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா கூறினார். மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தலைமையில் அமைச்சர் ரிசாட், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவமோகன் உள்ளிட்டோர் நியமிக்கப்பட்டனர். எதிர்ப்புத் தெரிவிப்பதால் ஓரங்கட்டுகின்றீர்களா என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி கேள்வி எழுப்பியதும் அவரும் அந்தக் குழுவில் இணைக்கப்பட்டார். (ஒ.5,105)

## ஐ.நா...

நிறைவேற்றப்படுவதை கைவிடுவதற்குத் தயாரில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசும் இணங்கி நிறைவேற்றிய ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக மேலும் இரண்டு ஆண்டுகள் பன்னாட்டு மேற்பார்வை நீடிக்கப்படவுள்ளது. பன்னாட்டு மேற்பார்வை என்று நாங்கள் திரும்பத் திரும்பக் கூறினாலும், காலஅவகாசம் என்றுதான் சொல்கின்றார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் ஒரு நாட்டைக் கட்டுப்படுத்த முடியாது. ஐ.நா. பாதுகாப்புச் சபையால்தான் அதனைக் கட்டுப்படுத்த முடியும். ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விடயத்தைக் கொண்டு செல்வது அவ்வளவு எளிதல்ல. ஆனால், ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விடயத்தை யாராவது எடுத்துச் சென்றால் அதனை கூட்டமைப்பு முழுமையாக ஆதரிக்கும் - என்றார். (ஒ.5)

## கார்பன்...

த்தாகவும், எதிர்வரும் புதன்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்;டுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம், மன்னார் சதொச விற்பனை நிலையக் கட்டுமானப் பணியின் போது, கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தொடர்ந்து, இதுவரை சிறுவர்கள் உள்பட 372 எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மனிதப் புதைகுழியில் இருந்து ஆறு விதமான மாதிரி எலும்புக் கூடுகள் பரிசோதனைக்காக அமெரிக்கா வின் புளோரிடா பீட்டா நிறுவனத்தக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கார்பன் பரிசோதனை அறிக்கை நேற்றைய தினம், சட்டமருத்துவ அதிகாரியின் கைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. அறிக்கையை அவர் எதிர்வரும் புதன்கிழமை நீதிமன்றில் சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5,21,56,60)

## ஜெனிவாவை...

பன்னாட்டு உதவியுடன் போர்க் குற்ற விசாரணை நடத்துங்கள். நடந்தவை இனப்படுகொலையா என்பதை முதலில் அறிந்து கொள்வோம். அதன் பின் மன்னிப்புப் பற்றி ஆராய்வோம். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி இளைஞரணி அமைப்பாளர்களுக்கான கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு உரையாற்றியதாகத் தெரிவித்து அவரது அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### மறப்போம் மன்னிப்போம்

உங்களுக்கு நாங்கள் வடகிழக்கு இணைப்பைத் தருகின்றோம். தாயகத்தில் சுயாட்சியைத் தருகின்றோம். கூட்டாட்சி ரீதியிலான அரசை உங்களுக்கு வழங்குகின்றோம். பதிலுக்கு நீங்கள் மறந்து விடுங்கள். மன்னித்து விடுங்கள் என்று ரணில் கூறவில்லை. மாறாக உங்களுக்குப் பணம் தருகின்றோம், உங்கள் உறுப்பினர்களுக்கு சலுகைகள் தருகின்றோம். உங்கள் பொருளாதார விருத்திக்கு அடி சமைக்கின்றோம் நடந்து போனதை மறந்து விடுங்கள் மன்னித்து விடுங்கள் என்று தான் கூறுகின்றார்.

இதன் அர்த்தம் என்ன? ஜெனிவாவில் கேள்வி கேட்கப் போகின்றார்கள். நாம் செய்வதாகக் கூறியவற்றை இதுகாறும் செய்யவில்லை. இப்போது உங்களுக்கு சலுகைகளைக் கொடுக்க எண்ணியுள்ளோம். ஏற்றுக்கொண்டு உங்கள் உரிமைகளைக் கேளாதீர்கள், உரித்துக்களை நிலைநாட்டப் பார்க்காதீர்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து நிலைக்கச் செய்ய உங்களின் ஒத்துழைப்பை நல்குங்கள். ஜெனிவாவில் மீண்டும் கால அவகாசம் பெற்றுக் கொடுங்கள் என்று கூறிச் சென்றுள்ளார் ரணில்.

### துரோகிகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாகத் தலையசைத்ததைப் பார்த்தால் அதற்கு அவர்கள் தயாராகி விட்ட மாதிரித் தெரிகின்றது. 'எமது பிரதேச அபிவிருத்திக்குரிய பணத்தை எம்மூடாக வழங்குங்கள். நாங்கள் எங்கள் மக்களைப் பணம் கொடுத்து வாங்கி விடுகின்றோம்' என்று அவர்கள் கூறுவது போலத் தெரிகிறது. துரையப்பா, குமார சூரியர், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் இதைத்தானே கூறினார்கள். அரசிடமிருந்து பணத்தைக் கறந்து, பதவிகளைப் பெற்று, பொருளாதார விருத்தியை உறுதி செய்து எமது நிலையைச் சீர்செய்வோம். உரிமைகளையும் உரித்துக்களையும் மறந்துவிடுவோம். இவ்வாறு அவர்கள் கூறிய போது நாங்கள் என்ன கூறினோம்? அவர்களைத் 'தமிழினத் துரோகிகள்' என்றோம். அவர்களைக் கடையவர்களில் கடையவர்களாக அடையாளம் காட்டினோம். சித்திரித்தோம். இன்று என்ன நடந்துள்ளது? அவர்களுக்கு அரசு உதவிகள் கொடுத்தால் அவர்கள் துரோகிகள். எங்களுக்கு அவ்வாறு உதவிகள் கிடைத்தால் அது எமது மேலாண்மைத் திறன்! எங்கள் புத்திக் கூர்மையின் வெளிப்பாடு! தந்திரோபாயத் திறமை! இங்கு எமது மக்களின் வருங்காலம் பற்றிய சிந்தனைகள் அடிபட்டுப் போகின்றன.

### உண்மை கண்டறிதல்

நரி வந்து புள்ளிமானிடம் கூறுகின்றது. உன் மகனைக் கொன்று உண்டவன் நான் தான். மன்னித்துவிடு. இனி நாங்கள் நண்பர்களாக இருப்போம். உன் மற்றைய குட்டிகளையும் என்னிடம் அனுப்பு. நான் அவற்றுக்குப் பொறுப்பு. அவற்றையும் நான் கொன்று சாப்பிட்டால் மீண்டும் உன்னிடம் மன்னிப்புக் கேட்பேன். வருத்தப்படாதே. உன்னையும் உன் குட்டிகளையும் என் பிரதேசத்தினுள் வேண்டுவது போல என் கட்டுப்பாட்டில் உலாவிவர நான் உனக்கு முழுமையான உரித்துத் தருகின்றேன் என்று கூறுகிறது.

உண்மையைக் கண்டறியவிடாமல் ரணில் தடுப்பது எமது உரிமைகளை மறுப்பதற்காக! எமக்குள்ள உரித்துக்களை மறைப்பதற்காக! உலக நாடுகளின் பார்வை உண்மையைக் கண்டறிந்துவிடும் என்ற பயத்தினால்! இதற்குத் துணைபோகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் துணிந்துவிட்டார்கள். இதுகாறும் எம் மக்கள் பட்ட பாட்டை மறந்து, ஆயுதமேந்த வேண்டிய காரணத்தை மறந்து, உயிர்த் தியாகங்கள் செய்ததை மறந்து, பிச்சைப் பாத்திரம் ஏந்தி பிச்சை எடுத்து எம்மக்களுக்குப் பிச்சைபோட முன்வந்துள்ளார்கள்.

### மிரட்டுகிறார்

இதனை மக்களுக்குத் தெரியப்படுத்த இளையோர் நீங்கள் முன்வர வேண்டும். உண்மையைக் கண்டறிவதில் நாம் திடமாக நிற்க வேண்டும். எம்மவர் குற்றங்களும் வெளிவந்துவிடுவன என்று மிரட்டுகிறார் ரணில். குற்றம் செய்யாத பலரை சிறைகளில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தீர்கள். எம்மைக் கொன்று குவித்தவர்களை, சித்திரவதை செய்தவர்களை இதுவரை அடையாளப்படுத்தாது அவர்களுக்கு மன்னிப்பை வேண்டி நிற்கின்றீர்கள். அவ்வாறு செய்தவர்கள் யார் என்பதை முறையாக, பன்னாட்டு விசாரணை மூலமாக முதலில் கண்டறியுங்கள். அதன் பின் மன்னிப்புப் பற்றிக் கதைக்கலாம் என்று ரணிலிடம் கூற எங்களுள் எவரும் இல்லை. ஆகவே நாங்கள் அரசிடம் கூறுகின்றோம் பன்னாட்டு உதவியுடன் போர்க்குற்ற விசாரணை நடத்துங்கள். நடந்தவை இனப்படுகொலையா என்பதை முதலில் அறிந்து கொள்வோம். அதன் பின் மன்னிப்புப் பற்றி ஆராய்வோம் என்றுள்ளது.

(ஒ.5)



# வேலை வாய்ப்புக்கள்

சர்வதேச நிறுவனத்தில் பணியாற்ற அரியவாய்ப்பு எல்லையற்ற வருமானம் ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள், வாகன, வீட்டு கடன் வசதி மேற்படிப்பிற்கான நிதி திரட்டும் வசதி, ஓய்வூதியம் மேலும் பல சலுகைகளுடன் வேலைவாய்ப்புக்கள்

**பதவி வெற்றிடங்கள்**

| | |
|---|---|
| நிதி திட்டமிடல் முகாமையாளர் | A/L சித்தி ஒருவருட வேலை முன் அனுபவம் |
| நிதி திட்டமிடலாளர் | A/L சித்தியடைந்திருத்தல் |
| கள உதவியாளர் | O/L சித்தியடைந்திருத்தல் |

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலிருந்து தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக தொடர்புகளுக்கு : 077 377 5928


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இராசையா லோகநாதன்

(ஓய்வுநிலை கிராம அலுவலர் சுதுலை வடக்கு J/129)

*திதி: திரியோதசி (16.02.2019)*

தோற்றம் 14.11.1953

மறைவு 13.03.2014



பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து நல்வழிகாட்டிய
- அப்பாவே
ஆண்டுகள் ஐந்தானாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சில் என்றும் பதிந்திருக்கும்

**குடும்பத்தினர்**
**மதவடி லேன்**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

(cs.21956) (13.17)


## நீங்களும் எங்களோடு வாருங்கள் வாழ்க்கையில் ஜெயம் பெற




இலங்கை விவசாய உற்பத்தி முகாமைத்துவ கூட்டுத்தாபனம் ஊடாக செயற்படுத்தப்படும் மரக்கறி மற்றும் பழவகை வினியோகிப்பு மற்றும் பெறுமதிசேர் முகாமைத்துவ திட்டத்திற்காக **"விவசாயிகள், சில்லறை வியாபாரிகள், போக்குவரத்து வினியோகஸ்தர்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள்"** பதிவு செய்யும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நீங்களும் அருகிலுள்ள கமநல சேவை மத்திய நிலையத்தில் அல்லது எமது தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு விண்ணப்ப பத்திரத்தை பெற்றுக் கொண்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப பத்திரத்தை கமநல சேவை மத்திய நிலையத்தின் ஊடாக அல்லது எமது முகவரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும்.

LAPMC LANKA AGRI PRODUCE MANAGEMENT CORPORATION
ලංකා කෘෂි නිෂ්පාදන කළමනාකරණ සංස්ථාව
இலங்கை விவசாய உற்பத்தி முகாமைத்துவ கூட்டுத்தாபனம்
Lanka Agri Produce Management Corporation

எம்மோடு இணைந்து சந்தோசமான மற்றும் போசனை நிறைந்த வாழ்வுடன் கூடிய இலங்கையை உருவாக்குவோம்.

மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள் 077 57 99 555



# ஊடகங்களது வலிமையால்தான் தங்கப் பதக்கத்தைப் பெற்றேன்

## ஒலிம்பிக் வீரர் எதிர்வீரசிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17

நான் புறக்கணிக்கப்பட்டதை ஊடகங்கள் வெளிக்கொண்டு வந்திருக்காவிடின் நான் இலங்கைக்கு தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்திருக்க மாட்டேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் இலங்கைக்கு முதல் தங்கம் வென்று கொடுத்தவருமான கலாநிதி நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நவீன வடிவிலான விளையாட்டு மைதானத் திறப்பு விழா கடந்த புதன்கிழமை அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில்சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

எங்களுடைய காலத்தில் எங்களை கல்வியிலும் விளையாட்டிலும் முனைப்போடு வளர்த்த அதிபர் சிமித்தை நினைவு கூருகின்றோம். மறக்க முடியாத ஓர் உன்னதமான அதிபர். அவருடன் எனது உயர் ஆசான்களான ராஜரட்ணம், அழககோன், இராஜசேனன், அரியரட்ணம் மற்றும் ஆசிரியர்களை இன்றும் மறக்க முடியாது.

மாணவர்களாகிய நீங்கள் நான் சொல்லும் அறிவுரையை கேளுங்கள். நீங்கள் முதலில் உங்கள் ஆசிரியர்களை உயர்ந்த பண்போடு மதிப்பளியுங்கள்.

நான் உயரம் பாய்தலில் ஆசிய விளையாட்டுக்கான தெரிவுக்காக கொழும்பு சென்றேன். அங்கே என்னை விலக்கி ஏனைய 8 பேரை தெரிவு செய்து ஆசியத் தொடருக்கு அனுப்புவதற்குத் தயாராக இருந்தனர். இந்த நிலையில் ஊடகம் ஒன்று எனது திறமையைப் பார்த்து என்னை விலக்கியமையை மையப்படுத்தி மறுநாள் செய்தி வெளியிட்டிருந்தது.

அதையடுத்தே நானும் ஆசிய விளையாட்டுக்கு ஏனையவர்களுடன் சேர்ந்து சென்றேன். ஆனால் நான் மட்டுமே ஆசிய விளையாட்டில் தங்கப் பதக்கத்தைப் பெற்று எமது நாட்டுக்கும் எமது கல்லூரிக்கும் பெருமை சேர்த்த நிகழ்வு என்னால் மறக்க முடியாது.

ஒரு பத்திரிகையாளன் தனது எழுத்தாற்றல் மூலம் என்னை ஆசியாவுக்கு அனுப்பியிருந்தார். அதன் வலிமையேலேயே எனது ஆற்றல் வெளிப்பட்டு ஆசியாவிலும் இலங்கையிலும் எனது பெயர் பதிவாகியது. இன்றும் எனது பெயர் உள்ளது சந்தோசமாக உள்ளது. எல்லாவற்றையும் விட மேலானது ஊடகப் பலமே என்பதனையும் இந்தத் தருணத்தில் கூற முற்படுகின்றேன்.

நான் பட்டதாரியாகி எட்டு மாதம் வேலையற்றோர் பட்டியலில் இருந்தேன். அரசில் வேலை கிடைக்க வேண்டுமாக இருந்தால் முதுமாணிப் பட்டம் பெறவேண்டும் என்றனர். அதனைப் படித்து காத்திருந்தோர் பட்டியலில் இருந்தேன் வேலை கிடைக்கவில்லை. பின்னர் கலாநிதி பட்டம் எடுத்தால் நிச்சயம் அரச வேலை கிடைக்கும் என்றனர் கலாநிதி பட்டத்தைப் பெற்று பல இடங்களுக்கும் விண்ணப்பித்தேன் அரச வேலை கிடைக்கவில்லை. அதனால் நான் சோர்ந்துவிடவில்லை. அதன் பின்னர் வெளிநாடு சென்றதால் வாழ்வு சுபீட்சமாகியது.என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டார்.

(ஜ-50)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 17

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**பச்சிலைப்பள்ளி செயலக கபடி**

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடர் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

**பூநகரி செயலகத்தின் துடுப்பாட்டத் தொடர்**

பூநகரி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பர்கள் விளையாட்டுக் கழகம், சிறிமுருகன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

**நல்லூர் செயலக கூடைப்பந்தாட்டம்**

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

**அளவெட்டி மத்தியின் கூடைப்பந்துத் தொடர்**

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிட்ட திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை குறித்த கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்றல் ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது.

(ம-23)

# மின்னொளிக் கரப்பந்தில் நவஜீவன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.17

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தப்படும் மின்னொளிக் கரப்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய முன்றலில் இந்த ஆட்டம் இரவு 8.15 மணிக்கு நடைபெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்க ழக அணியை எதிர்த்து, அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. .29:27, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

(எ-23)






# வலைப்பந்தாட்ட தொடரிலும் செவ்வானம் மகளிர் சாதிப்பு

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டித் தொடரின் ஓர் அங்கமான பெண்களுக்கான வலைப் பந்தாட்டத் தொடரில் செவ்வானம் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அண்ணா யுத் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. அதில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணியும், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 10:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

(எ-23)

# கரப்பந்தாட்டத் தொடரில் செவ்வானத்துக்கு கிண்ணம்

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டித் தொடரின் ஓர் அங்கமான பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றுள்ளது.

இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அண்ணா யுத் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. செவ்வானம் விளையாட்டுக் கழக அணியும், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

விறுவிறுப்பான நடைபெற்ற ஆட்டத்தில் 2:0 என்ற செற் கணக்கில் செவ்வானம் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தைத் தன்வசமாக்கியது.

(எ-23)

# சுப்பர் 8 சுற்றில் ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், பெப். 17

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 சுற்றுக்கு ஊரெழு றோயல் அணி தகுதி பெற்றது.

கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது.

(ம)



# பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளதால், அனைத்து கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ள வேண்டும் என்று யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

(எ-422)



# கப்ரியல் கவலை

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இடம்பெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணித் தலைவர் ரூட்டை மேற்கிந்திய வேகப்பந்து வீச்சாளர் கப்ரியல் ஓரினச் சேர்கையாளருக்கு ஒப்பிட்டு வாக்குவாதம் செய்ததால் சர்ச்சை கிளம்பியிருந்த நிலையில் கப்ரியலுக்கு 4 போட்டிகளில் விளையாடத் தடையும், போட்டிச் சம்பளத்தில் இருந்து 75 சதவீத தண்டமும் தண்டனையாக விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இந்த நிலையில் தனது கருத்துக்காக ரூட்டிடமும், அந்த அணி வீரர்களிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளார் கப்ரியல்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் பயன்படுத்தியது மோசமான வார்த்தை என்பதை அறிந்து மிகவும் வருந்தினேன். உணர்ச்சி வேகத்தில் நடந்த சம்பவம் இது. இருவரிடையே



நடந்த வார்த்தை பரிமாற்றம் என்ன என்பதை விளக்க வேண்டியது எனது கடமை.

இங்கிலாந்து அணித்தலைவர் ரூட், நான் பந்து வீசத் தயாரான போது என்னை உற்று பார்த்தார். இது உளவியல் சார்ந்த யுக்தியாக இருக்கலாம். டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களுக்கு இது வழக்கமானதுதான். இதை அறிந்த நான் எனக்குள் இருந்த பதற்றத்தைக் குறைத்துக் கொள்வதற்காக அவரை நோக்கி 'என்னை பார்த்து ஏன் சிரித்துக் கொண்டு இருக்கிறீர்கள்? ஆண்கள் என்றால் உங்களுக்கு பிடிக்குமா?' என்று கேட்டேன்.

அதற்கு அவர், 'இந்த சொல்லை ஒருவரை அவமதிப்பதற்காக பயன்படுத்தாதே. ஓரின சேர்க்கையாளராக இருப்பதில் தவறு ஒன்றும் இல்லையே' என்று பதில் அளித்தார்.

அதற்கு நான் 'அது பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால் என்னை பார்த்து சிரிப்பதை நிறுத்துங்கள்' என்று கூறினேன்.

இந்தப் பிரச்சினைக்கு பிறகு நாங்கள் இருவரும் சந்தித்து பேசினோம். எங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் இந்த விவகாரம் இவ்வளவு பெரிதாகும் என்று எதிர்பார்க்கவில்லை. இது எனக்கு ஒரு அனுபவப்பாடம் - என்றார்.

# குசல் பெரேரா காட்டாட்டம் இலங்கை திரில் வெற்றி



இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டியில் குசல் பெரேராவின் அதிரடி ஆட்டத்தால் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றது. நேற்றுமுன்தின நாள் நிலவரத்தின் படி இலங்கை அணிக்கு 7 இலக்குகள் கைவசமிருக்க 221 ஓட்டங்கள் வெற்றி இலக்காக காணப்பட்டது. கடந்த புதன்கிழமை ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 235 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணி 191 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. தென்னாபிரிக்கா அணி 44 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்தது. இரண்டாம் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா அணி 170 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்தது. நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் நிலவரத்தின் படி தென்னாபிரிக்கா அணி 304 ஓட்டங்களை இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

நேற்றுமுன்தின நாள் முடிவில் இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. பெர்னாண்டோ 28 ஓட்டங்களுடனும், குசல் பெரேரா 12 ஓட்டங்களுடனும் நேற்றைய நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். பெர்னாண்டோ, டிக்வெல ஆகியோர் ஸ்ரெய்னின் பந்து வீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஒருமுனையில் குசல் பெரேரா தனித்து நின்று அணியை வெற்றி பெற வைக்க போராடினார். அவர் ஆட்டமிழக்காது இக்கட்டான சூழ்நிலையில் 153 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். டி சில்வா 48 ஓட்டங்களையும், பெர்னாண்டோ 37 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். இலங்கை அணி ஓர் இலக்கு கைவசமிருக்க தென்னாபிரிக்கா அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், ஸ்ரெயின், ஒலிவர் தலா இரண்டு இலக்குகளையும், பிலன் டர், ரபாடா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

# தொடரைக் கைப்பற்றி நியூசி. இலகு வெற்றி



பங்களாதேஷ் அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3ஒருநாள் போட்டிகள், 3டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. நேற்று இரு அணிகளுக்குமான இரண்டாவது ஒருநாள் போட்டி இடம்பெற்றது. இதில் நியூசிலாந்து அணி 8 இலக்குகளால் இலகு வெற்றி பெற்றது. முதலாவது ஒருநாள் போட்டியிலும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி பங்களாதேஷ் அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தமிம் இக்பால், லிரன் டாஸ் களமிறங்கினர். அணி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது லிரன் டாஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அணி 100 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகபட்சமாக மொகமட் மிதுன் 57 ஓட்டங்களையும், சபர் ரஹ்மன் 43 ஓட்டங்களையும், ரஹீம் 24 ஓட்டங்களையும், சர்கர் 22 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். அணி 49.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் அதிகபட்சமாக பெர்குசன் 3 இலக்குகளையும், அஸ்ரில், நிசாம் தலா இரண்டு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக குப்தில் நிசாம் களமிறங்கினர். முதலாவது இலக்கை அணி 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ரஹ்மன் கைப்பற்றினார். நிக்கோலஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இணைந்தார் அணித் தலைவர் வில்லியம்சன் இருவரும் அரைச் சதம் கடந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 143 ஓட்டங்கள் பகிரப்பட்டன. குப்தில் சதம் கடந்து 118 ஓட்டங்களில் ஆட்ட மிழந்து பவிலியன் திரும்பினார். வில்லியம்சன் 65 ஓட்டங்களுடனும், ரெயிலர் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 36.1 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகள் கைவசமிருக்க வெற்றி இலக்கை அடைந்தது. இதனால் 2:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. ஆட்ட நாயகனாக மார்டீன் குப்தில் தெரிவு செய்யப்பட்டார்.

# டெஸ்ட் கிரிக்கெட் இன்னும் சாகவில்லை

## அஸ்வின் நெகிழ்ச்சி

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி திரில் வெற்றி பெற்றிருந்தது. இந்த வெற்றிக்கு காரணமாக இலங்கை அணியின் வீரர் குசல் பெரேரா காணப்பட்டார். இவர் இறுதி வரை போராடி 5 ஆறு ஓட்டங்கள், 12 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 153 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது இருந்தார். அணியை இக்கட்டான நிலையில் இருந்து வெற்றி பெற வைத்தார் என்று குசல் பெரேராவுக்கு பல்வேறு கிரிக்கெட் பிரபலங்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

இதில் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் குறிப்பிடுகையில், டெஸ்ட் கிரிக்கெட் இன்னும் சாகவில்லை. குசல் பெரேராவின் அதிரடியில் இலங்கை வரலாற்று வெற்றியைப் பெற்றுள்ளது. அண்மைக்காலத்தில் மிக சவாலான போட்டிகளில் இதுவும் ஒன்று. நீண்ட காலத்துக்கு பிறகு இவ்வாறனதொரு டெஸ்ட் விளையாட்டைப் பார்த்தது நன்றாக இருந்தது என்று அஸ்வின் தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.



# அரையிறுதிக்குள் சாசய்னா நேவால்

உள்ளூர் அணிகளுக்கான தேசிய சம்பியன்ஸிப் பூப்பந்தாட்டப் போட்டி இடம்பெற்று வருகின்றது. மும்பையில் நேற்று இடம்பெற்ற போட்டியில் சாய்னா நேவால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். சாய்னா- நேகா பந்திற் மோதினர். இதில் சாய்னா 21:10, 21:10 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.




## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி தனங்கிளப்பு - கேரதீவு வீதியில் அமைந்துள்ள (A 32)

1) கடைக் கட்டடத்துடன் சேர்ந்த 3பரப்புக்காணி
2) வீட்டுடன் சேர்ந்த 3 பரப்புக்காணி
3) மேட்டுக்காணி 25 பரப்பு
4) மேட்டுக்காணி 50 பரப்பு வளரும் தென்னங்கன்றுகளுடன் விற்பனைக்குண்டு.

(C9421)(11,17)

உரிமையாளர் - யோ.அகிலஜெகதீஸ்வரன்
077 157 6609

## கடைகள் வாடகைக்கு

யாழ் நகர் மத்தியில் (C.T.B பஸ் நிலையத்துக்கு பின்னால்) மின்சார நிலைய வீதியில் (Jubilee Bazaar) கீழ் கடையும் இரண்டாம் மாடி கடைகளும் வாடகைக்கு விடப்படும். (CS 23358)(4,17)

078 190 4853

## VACANCY

**PROJECT MANAGER**

We are a Sri Lankan Group of Companies with diversified Industrial Ventures in Sri Lanka & India.

We are looking for a matured experienced candidate to be a Project Manager for setting up of an Industrial Venture in Iyakkachchi, Jaffna.

The Ideal candidate to be of Mechanical, Electrical, Electronic, Industrial or Food Processing Engineering discipline with adequate experience in implementing Projects independently.

Please forward your CV to reach us within 7 days to damayanthi@isfindustries.com

Group Manager Human Resources
Heritage Agri Private limited
¾, Rockwood Place, Colombo 07.

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும். (CS 23403)(4,17)

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306/077 138 7596

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

பெரியவிளான் இளவாலையில் இயங்கும் **Kids Word Montessori** பாலர் பாடசாலைக்கு அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS 23371)(4,17)

077 138 6139/076 475 5802

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, இருபாலையில் 4 3/4 பரப்பு, வணிக நோக்கிற்கு ஏற்றது. (CS 23408)(15,17)

தொடர்பு - 075 043 1960

SAAMSON Experts in English Training இன் இலவச ஒருநாள் ஆங்கிலப் பயிற்சி 23.2.2019 சனி

1. காலை 08-10 2. மாலை 03-05

ஏதாவதொரு பிரிவில் பங்குபெறமுடியும்

பங்குபற்றியமைக்கான சான்றிதழ், வழிகாட்டி இலவசம்

SAAMSON Experts in English Training 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர். 021 621 4567 077 1570 486

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கான கட்டணம்! UK 550/=, France 700/=, Germany 650/=, Swiss 750/=, Canada 950/= ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக்கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும். சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்.

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்** 321, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்/ 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி/18, பிரதான வீதி, நெல்லியடி/கிளிநொச்சி/மன்னார்.

077 755 4528 DHL aramex SKYNET

## வீடு நாள் வாடகைக்கு

யாழ் நகரில் சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகளைக் கொண்ட புதிய வீடு நாள் வாடகைக்கு உண்டு. (CS 23400)(4,17)

075 633 3000/077 633 3000

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகர் பகுதியில் (யாழ் - கொட்டடி, லைடன் சந்தி அருகில்) 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

076 963 4939 (CS/23384)(11,17)

## பிரபல மருந்தகம் ஒன்றுக்கு Pharmacist தேவை

பதிவு செய்யப்பட்ட நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 734 7578 / 021 221 7664 } Monday - Saturday (9.00 am - 6.00 pm)
077 734 7578 - (Sunday - 9.00 am - 5.00 pm)

## பணியாளர் தேவை

சிட்டை எழுதுநர் - (Bill கிளார்க்) தேவை.

-076 780 6942


## மரண அறிவித்தல்



### தனலட்சுமி சண்முகநாதன்

4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தனலட்சுமி சண்முகநாதன் 15.02.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - விசயம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும், ரஜனி, ரவி, சசி, உதயன், ரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபாகரன், வவா, பாமா, விசயா, யோகா ஆகியோரின் மாமியாரும், கிளி, சிவராசா, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/23379)(11.17)

தகவல்: குடும்பத்தினர்.

077 329 7689


## சமூக அபிவிருத்தி இயக்குனர்

கல்வித்திறமையும் சமூகசேவை மனப்பான்மையும் உள்ள இந்துமதத்தை சார்ந்த பெண்மணி தேவை.

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்தின் முக்கால பூஜைகளையும் உற்சவங்களையும் ஆகம முறைப்படி நிர்வகிப்பதோடு ஆலயத்தினை மையமாகக்கொண்டு ஆலயத்தின் அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் சமய, சமூக, கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்த நிலைக்குரிய பணியாகும்.

இயக்கச்சியில்இருந்து20kmசுற்றுவட்டாரத்தில்இருந்து விண்ணப்பிப்பது விரும்பத்தக்கது. தகுந்த ஊதியத்துடன் முகாமைத்துவ சபையின் அங்கத்துவம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்
மின்னஞ்சல்: md@isfindusries.com
தொலைபேசி: 077 207 8451
அல்லது தபாலில்: 3/4 Rock wood place, Colombo - 7

## வேலையாள்கள் தேவை

- உதவி சமையலாளர்
- உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)

கோல்டன் ஸ்ரார் ரெஸ்ரோரன்ற்
ஆரியகுளம் சந்தி அருகில்
077 740 4883

வடமாகாணத்தின் நீர் சுத்திகரிப்பு துறையில் மிகத்திறமை வாய்ந்த

Yarl Smart Water Solution (Pvt) Ltd

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்




Hotline:- 021 430 0044, 077 057 3684, 077 473 9802, 077 112 6410
No.319,K.K.S Road,Jaffna.

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.